www.padippakam.com



குஜராத் முஸ்லிம்களின் மயான பூமி!

எழுச்சி

# தலித் முரசு

சமூக நீதித் திங்களிதழ்

மே 2002 ■ ரூ.6



www.padippakam.com



# இந்து மத ஆதரவு அரசு இருக்கும்வரை அமைதிக்கு வழியில்லை



" இஸ்லாமியர்களின் சமூக, அரசியல், பொருளாதார வீழ்ச்சி என்பது, ஒட்டுமொத்த சமூகத்தின் வீழ்ச்சியையே உருவாக்கும். ஓர் அமைப்பின் நிர்மாணிக்கப்பட்ட கருத்துகள், பிற அமைப்பினருக்கு எதிராக இருக்கும் வரையில், அவ்விரு அமைப்பினர்களுக்கிடையே சமாதானம் என்பது சாத்தியமாகாது.

இந்துக்களும், முகமதியர்களும் அரசியல் அதிகாரப் பகிர்வில் இணைந்து செயல்பட்டால் கூட, அந்த இணைப்பு - நிலையற்றதாகவே இருக்கும். இல்லை எனில், இந்துக்கள் தொடர்ந்து தரும் இடர்களை சகித்துக் கொண்டு வாழ வேண்டியிருக்கும். "

தாழ்த்தப்பட்டவர்களின் பிரச்சினைகளை முகமதியர்கள் எவ்விதத்தில் அணுகினார்கள் என்பது கவனிக்கப்பட வேண்டிய ஒன்று. முகமதியர்கள் துவக்கத்தில் இருந்தே தாழ்த்தப்பட்டவர்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கும் ஆர்வத்துடனேயே அணுகியுள்ளனர். தாழ்த்தப்பட்டவர்கள், சாதி இந்துக்களிடமிருந்து விலகி வாழ வேண்டும் எனவும், அவர்கள் சாதி இந்துக்களோடு இணைந்து வாழ நேரிட்டால், அது சாதி இந்துக்களின் புள்ளிவிவரத்தை மிகைப்படுத்திக் காட்டும் எனவும் முகமதியர்கள் நன்கு உணர்ந்துள்ளனர்.

இந்துக்கள், தாழ்த்தப்பட்டவர்களை 'தங்களவர்களாக' மாற்றிக் கொள்வார்கள்; இதன் மூலம் சாதி இந்துக்களின் மக்கள் தொகை கூடியது போலக் காட்டப்படும்; இது, இஸ்லாமியர்கள் மிகச்சிறுபான்மையினராக அடையாளப்படுத்த வழிவகுக்கும் என்ற அச்சமும் முகமதியர்களிடையே பெருமளவில் எழுந்துள்ளது.

இதன் தொடர்ச்சியாக, 1909ஆம் ஆண்டு, முகமதியர்கள் 'தாழ்த்தப்பட்டவர்களை, சாதி இந்துக்களுடன் இணைத்து - மக்கள் தொகையை கணக்கிடக் கூடாது' என்று உறுதியான நிலைப்பாட்டை எடுத்தனர். 1923ஆம் ஆண்டு முகமது அலி ஜின்னா, காங்கிரஸ் கட்சியின் தலைவராக இருந்தபோது, இந்தக் கருத்தை ஆணித்தரமாக முன்வைத்தார்.

இந்துக்கள் முகமதியர்களை, பல்வேறு தளத்தில் தங்களுக்குப் போட்டியாளராகவே கருதுகின்றனர். இந்தப் போட்டி என்பது, இருவேறு இனத்தினருக்கிடையில் நடக்கும் ஆயுதப் போர் போலவே காணப்படுகிறது.

இந்துக்கள் தங்களுக்கென, 'பனாரஸ் பல்கலைக் கழகம்' அமைத்துக் கொண்டால், அதை எதிர்க்கும் வகையில் முகமதியர்கள் 'அலிகர் பல்கலைக் கழகம்' நிறுவுகின்றனர். இந்துக்கள் 'சுதி இயக்கம்' ஏற்படுத்தினால், முகமதியர்கள் அதை 'தாப்லிக்' அமைப்பால் சந்திக்கின்றனர். இந்துக்கள் 'சங்கதன்' அமைத்தால் முகமதியர்கள் அதை 'தன்ஜிம்' கொண்டு முறியடிக்கின்றனர். இந்துக்கள் ஆர்.எஸ்.எஸ். அமைப்பை உருவாக்கினால், அதை வீழ்த்த 'காக்சர்' அமைப்பை முஸ்லிம்கள் கையில் எடுக்கின்றனர்.

இவ்வாறு இரு வேறு இன மக்கள் போல, ஒரு போர்ப் பாதையிலேயே இந்துக்களும், முகமதியர்களும் பயணிக்கின்றனர். 'இந்துக்கள் தங்களை ஒடுக்குகிறார்கள்' என இஸ்லாமியர்கள் மிகுந்த விழிப்போடு இருக்கின்றனர். 'இஸ்லாமியர்கள் இந்த மண்ணை தங்கள் வசப்படுத்தவே விழைகிறார்கள்' என்று இந்துக்கள் அஞ்சுகிறார்கள். இவ்வாறு இந்துக்களும், முகமதியர்களும் போர் முகாமில் இருக்கும் எதிர் - எதிர்ப்படையினர் போல் ஆயத்தமாதல், கண்காணித்தல் போன்ற பணிகளில் ஈடுபடுகின்றனர்.

இந்துக்களின் வலிமை - முகமதியர்களை அச்சுறுத்தவே பயன்படுகிறது. இதனால் இஸ்லாமியர்கள் தற்காப்புக்காகத் தங்களைத் தயார் செய்து கொள்வார்கள் என்ற சந்தேகம் இந்துக்களிடையே பலமாக எழுகிறது. இந்துக்களின் எழுச்சி, இந்துக்களுக்கே இடையறாத அய்யத்தை உருவாக்குகிறது. இந்த சந்தேகம், இரு சமூகத்தினரிடையே அமைதியற்ற சூழலை உருவாக்கியுள்ளது. முகமதியர்களின் மக்கள் தொகை விகிதாச்சார அளவை குறைப்பதும் அவர்களின் சமூக, பொருளாதார வளர்ச்சியைத் தடைசெய்வதும்தான் - இந்துக்களின் வெளிப்படையான சிந்தனையாக இருக்கிறது.

இரு பிரிவினர்களும், வாழ்வதற்காக ஒருவருக்கொருவர் போராடுகின்றனர். இங்கு வாழ்வியல் போராட்டம் என்ற கட்டாய நிலை எற்பட்டுள்ளதால், தரமான - இணக்கமான வாழ்க்கை என்பது நடைமுறைக்குச் சாத்தியமில்லாமல் ஆகிவிட்டது. இந்த விரும்பத்தகாத சூழலை நேர் செய்வதற்கு நாம் என்ன செய்ய வேண்டும்?

இந்து மதக் கருத்தியல் என்பது, பிற மதத்தினரின் கருத்துகளைத் தூக்கி எறிவதாகவும், பிற மனிதர்களின் வளர்ச்சியை - மகிழ்ச்சியை காணச் சகியாத ஒன்றாகவும் நடைமுறையில் அமைந்துள்ளது. மற்றவர்களின் வளர்ச்சியைக் கட்டுப்படுத்தும் வகையில், அடிப்படைக் கருத்துகளை ஆதாரமாகக் கொண்டுள்ளது இந்து மதம். இந்தக் கருத்துகளை ஆதரிக்கும் அமைப்புகள், அரசுகள் இருக்கும் வரை அமைதி என்பது சாத்தியமற்ற ஒன்றாகவே இருக்கும். ◇

*'பாபாசாகேப் டாக்டர் அம்பேத்கர் ஆங்கில நூல் தொகுப்பு' : 8 பக்கம் : 247*

படிப்பகம்

www.padippakam.com

புகைப்படம் : மீனா மயில்



ஆடும் கடல்
அழித்துப் போகாதோ
ஏழ்மையின் சுவடுகளையென
ஏலேலோவை கரையில் விட்டு
கனவுகளை ஏற்றுகிறோம்
பாய்மரத்தில்.

கரையில் காத்திருக்கும்
கனத்த மனங்களுக்கு
தொடுவானத்தைத் தொட்டு
திரும்புகிற பொழுதுகள்
தின்னத் தருகின்றன
கொஞ்சம் மீன்களையும்
நிம்மதியையும்.



படிப்பகம்

www.padippakam.com

# பொருளடக்கம்



8


**7 நிகழ்வு**

தலித் மூலதனம் உருவாக்கப்பட வேண்டும்

**8 கலை**

உணர்வூட்டிய கலை விழா
அழகிய பெரியவன்

**10 துரோகம்**

தலித் கிறித்துவ இடஒதுக்கீடு :
வாழ்வை விழுங்கும் அரசாணை
கவுதம சன்னா

**14 கொடுமை**

''செத்துரணும்னுதான் இருந்திச்சி''
'காஞ்சனை' மணி

**16 பார்வை**

''சாதிக் கலவரங்கள் இல்லையடி பாப்பா''
கிருத்துதாசு காந்தி

**20 திறனாய்வு**

ஈரம் கசியும் வேர்கள்
பாக்கன்

**22 குஜராத்**

இனப்படுகொலை - 2002

**26 மால்கம் எக்ஸ்**

உங்கள் எதிரி யார் என்று உணருங்கள்
ரவிக்குமார்

**29 அரசியல்**

திராவிட இயக்கம் - அன்றும் இன்றும்
கோ. சுகுமாரன்

**32 ஜாதி**

முஸ்லிமா? இந்துவா?
22ஆண்டுகாலப் போராட்டம்
ஆசூர் ராஜ்

**34 இரங்கல்**

புத்தருக்கு ஒரு அம்பேத்கர்
அம்பேத்கருக்கு ஒரு வசந்த் மூன்
சங்கமித்திரை

**42 கவிதை**

ஓ மாமனிதனே!
ஹீரா பன்ஸோடெ




22



42


- முன் அட்டைப் புகைப்படம் : ஜெயச்சந்திரன் - சென்னை ஓவியக் கல்லூரி
- அட்டை வடிவமைப்பு : ஆர்.ஆர். சீனிவாசன்
- இதழ் வடிவமைப்பு : ஜெமிமா ஆலிஸ், பிரேமா




படிப்பகம்

www.padippakam.com

# ஈழமும் சேரியும்

தமிழர்களின் நலன்களுக்காகவே, சர்வபரித்தியாகமும் செய்து கொண்டு கட்சி நடத்துகிறோம் என்று கூறும் அரசியல் கட்சிகள், தமிழர்களுக்கு எதிரான நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு கிஞ்சித்தும் வெட்கப்படுவதில்லை. அண்மையில் அ.தி.மு.க. அரசு சட்டமன்றத்தில் நிறைவேற்றிய தீர்மானத்தை - ஆதரித்த, நடுநிலை வகித்த காங்கிரஸ், தி.மு.க. உள்ளிட்ட கட்சிகள் ஈழத்தமிழர்களுக்கு முற்றிலும் எதிரானவர்களாகவே வெளிப்படுத்திக் கொண்டனர். பாட்டாளி மக்கள் கட்சி மட்டுமே இப்பிரச்சினையில் சரியான நிலைப்பாட்டை எடுத்தது.

லட்சோப லட்சம் தமிழர்களின் நீண்டகாலப் பிரச்சினைக்குத் தீர்வு வரவிருக்கிற நேரத்தில், ராஜீவ் காந்தி மரணத்தைத் தேவையின்றி இழுத்து குறுக்குசால் ஓட்டுவது, தமிழர்களுக்கு இழைக்கப்படும் துரோகமல்லாமல் வேறென்ன? பிரபாகரனை கொலையாளியாகப் பார்க்கும் இந்தியா, ஆயிரக்கணக்கான தமிழர்களைக் கொன்று குவித்த சந்திரிகாவை அமைதியின் தூதுவராகப் போற்றுகிறது.

இந்திரா காந்தி இறந்தபோது நடைபெற்ற சீக்கியர் மீதான படுகொலையை நியாயப்படுத்திய காங்கிரஸ்காரர்கள்தான் - இன்றைக்கு ஈழத்தமிழர் பிரச்சினைக்கு ராஜீவ் காந்தி மரணத்தை முன்னிறுத்துகிறார்கள். காந்தியைக் கொன்ற நாதுராம் கோட்சே என்பவர் பார்ப்பனர் என்பதால், இன்றைக்கு ஒட்டு மொத்த பார்ப்பன சமூகமும் இந்த நாட்டின் விரோதிகளாகப் பார்க்கப்படுகிறார்களா? இல்லையே! நாட்டின் அனைத்து உயர் பதவிகளையும் அல்லவா ஆக்கிரமித்துக் கொண்டிருக்கின்றனர். கோட்சே ஆர்.எஸ்.எஸ். காரராக இருப்பினும், ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தவர்கள் எல்லாம் இன்றைக்கு நாட்டை ஆண்டு கொண்டிருக்கின்றார்களே!

ராஜீவ் காந்தி இறப்பதற்கு ஓரிரு ஈழத்தமிழர்கள் காரணமாக இருந்தார்கள் என்பதற்காக, ஒட்டுமொத்த ஈழத்தமிழினமே குற்றவாளிகளாக்கப்பட வேண்டுமா? ஈழத்தில் அமைதியை ஏற்படுத்துகிறோம் என்ற பெயரில் ஆயிரக்கணக்கான மக்கள் இந்திய ராணுவத்தால் கொன்று குவிக்கப்பட்டார்களே! அதற்குத் தண்டனைதான் என்ன?

சிங்களப் பேரினவாதத்தின் கொடுங்கரங்களிலிருந்து ஈழத் தமிழர்களைக் காக்கும் அரணாக விடுதலைப் புலிகள் இயக்கம் செயல்பட்டு வருகிறது. இலங்கைப் பிரச்சினைக்குத் தீர்வுகாண சம்பந்தப்பட்ட அந்த நாடே - தடை செய்யப்பட்ட இயக்கத்துடன் பேச அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருவது பாராட்டுக்குரியது. ஆனால், நார்வே நாட்டுக்கு இருக்கும் மனிதாபிமானம் கூட, அண்டை நாட்டில் இருப்பவர்களுக்கு இல்லை என்பதுதான் வேதனைக்குரியது. அமைதிக்கான முயற்சியில் கைகொடுக்காவிட்டாலும் பரவாயில்லை. தமிழகமும் இந்தியாவும் இதைச் சீர்குலைக்காமல் இருந்தாலே போதும்.

இங்கு, ஈழத்தமிழர்களுக்காகக் குரல் கொடுப்பவர்கள், பாப்பாபட்டி, கீரிப்பட்டி, நாட்டாமங்கலம் மற்றும் மேல்சாத்தாமூரில் நடைபெறும் ஜனநாயகப் படுகொலையைக் கண்டிக்க மறுப்பது ஏன்?இந்த ஜனநாயகப் படுகொலைகளைக் கண்டித்து சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்படுமா?

மேலும், ஈழத்தமிழர்களுக்கு குரல் கொடுப்பவர்கள், ஈழத்தில் உள்ள சேரித் தமிழர்களின் பிரச்சினைக்கும் குரல் கொடுப்பார்களா என்ற கேள்வியை எழுப்புவதும் அவசியமாகிறது. ஈழத் தமிழர்களின் பிரச்சினை தீர்க்கப்படும்போது, அங்கு இருக்கக்கூடிய சாதி - தீண்டாமைக் கொடுமைகளுக்கும் தீர்வு காணப்பட வேண்டும். எனவே, இது குறித்த விவாதத்தைத் தொடங்குவதே சாலச் சிறந்தது.

ஆம். ஈழத் தமிழர்களின் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும். தமிழர்கள் அங்கு சுயநிர்ணய உரிமையுடன் வாழ வேண்டும். ஈழத்தில் சாதியால் பாதிப்புக்குள்ளாகும் தலித்துகளின் பிரச்சினைகளுக்கும் தீர்வு காணப்பட வேண்டும். தமிழகத்தில் இருக்கக்கூடிய தலித் இயக்கங்கள், ஈழத்தமிழர் பிரச்சினையில் இனியும் அமைதி காக்காது, தங்களுக்குரிய பங்கை ஆற்ற முன்வர வேண்டும்.

தமிழ் நாட்டில் முன்பு மத்திய அரசிடம் சுயாட்சி உரிமை கேட்டவர்கள், இந்தி மொழி எதிர்ப்பைக் கண்டித்து உயிர் நீத்தவர்கள், 'வடக்கு வாழ்கிறது தெற்கு தேய்கிறது' என்று கூறியவர்கள் எல்லாம் சாதிப் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்க முன்வராததால்தான், இன்றைக்கு ஜாதி சங்கங்கள் தமிழ் நாட்டை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிற கொடுமையைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். இந்த நிலை ஈழத்திற்கு வரக்கூடாது. ●

எழுச்சி
தலித் முரசு

Volume : 5 Issue :11

மே, 2002
ஆண்டு : 6 - இதழ் : 4

●

ஆசிரியர், வெளியிடுபவர்
பெ. சந்திரசேகன்

பொறுப்பாசிரியர்
புனித பாண்டியன்

●

ஆண்டுக் கட்டணம் : ரூ.100/-
நூலகக் கட்டணம் : ரூ.200/-
வாழ் நாள் கட்டணம் : ரூ.1000/-

●

முகவரி
ஈ-21, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியக் குடியிருப்பு, அண்ணா முதன்மைச் சாலை
கே.கே. நகர், சென்னை - 600 078

தொலைபேசி : 371 66 88
தொலைநகல் : 474 11 88
E-mail : ambedkar@md4.vsnl.net.in




படிப்பகம்

# வாக்குமூலம்

**சாதி இல்லாத இடம் எங்கேனும் உண்டா? தெருவில் உண்டா? ஊரில் உண்டா? நகரில் உண்டா? பள்ளியில் உண்டா? கல்லூரிகளில் உண்டா? பல்கலைக் கழகங்களில் உண்டா? அரசாங்க நிறுவனங்களில் உண்டா? தனியார் நிறுவனங்களில் உண்டா? நீதித்துறைகளில் உண்டா? நம் தேர்தல்கள், அரசு நிர்வாகத்தில் நடைபெறும் அமர்த்தல்கள் அனைத்தும் சாதிகளை ஆதியாகக் கொண்டே கட்டி முடிக்கப் பெறுகின்றன. தமிழ் நாட்டில் அண்மையில் கட்டி முடிக்கப் பெற்றுள்ள மிக உயர்ந்த கோபுரம் சாதிக் கோபுரம்தான். அது, அமெரிக்க வர்த்தக நிறுவனத்தைவிட வலியது; பெரியது; உயரியது. புதிய பின்லேடன்தான் சாதிக் கோபுரத்தை இடித்து நொறுக்கப் பிறந்து வரவேண்டும்.**

க.ப. அறவாணன், முன்னாள் துணைவேந்தர், 'தினமலர்' நாளேடு கட்டுரை ஒன்றில்.




நன்றி : 'கம்யூனலிசம் காம்பட்'

**குஜராத்தில் பா.ஜ.க.வின் மாநில அரசாங்கமே, வன்முறைகளைத் தலைமை தாங்கி நடத்தியுள்ளது. வணிகவரி அலுவலகத்திலிருந்து முஸ்லிம்களின் கடைகள், சரக்கு நிலையங்களின் முகவரிகள் கொடுக்கப்பட்டு - அவை தாக்கப்பட்டு அழிக்கப்பட்டுள்ளன. இதுவரை ஒரு லட்சம் முஸ்லிம்கள் அகதிகளாக ஆக்கப்பட்டுள்ளனர். பாபு நகர் என்ற இடத்தில் காவல் துறை, 40 முஸ்லிம் இளைஞர்களை நெற்றியிலும் நெஞ்சிலும் சுட்டுக் கொலை செய்துள்ளது.**

அஸ்கர் அலி இன்ஜினியர்,
புகழ்பெற்ற எழுத்தாளர், 'நக்கீரனில்'
எழுதியுள்ள கட்டுரையில்.

**விசாரணைக்காக பெண்களைக் காவல் நிலையங்களுக்கு அழைத்துச் செல்லக்கூடாது. அவர்களை அவர்களுடைய இருப்பிடத்திலேயே பெண் போலிசார் விசாரிக்க வேண்டும். இது தொடர்பாக, அனைத்துக் காவல் நிலையங்களுக்கும் தமிழக அரசு சுற்றறிக்கை அனுப்ப வேண்டும். எதிர்காலத்தில் இந்த நடைமுறையை அனைத்துக் காவல் நிலையங்களும் கண்டிப்பாகப் பின்பற்ற வேண்டும்.**

உயர் நீதிமன்ற நீதிபதி எம். கற்பக விநாயகம்,
சென்னை மாணவி என்.எம்.டி. ஜாய் இமாக்
குலேட் தாக்கல் செய்த வழக்கில்
பிறப்பித்த ஆணை.

**இந்தியாவே இரட்டை இந்தியாவாக இருக்கிறது. ஊர் என்றும் சேரி என்றும் வாழிடங்கள் இரட்டையாக இருக்கின்றன; சுடுகாடு இரட்டையாக இருக்கிறது; டீக்கடைகளில் இரட்டைக் குவளைகள் இருக்கின்றன. இப்படி இந்தியாவே இரட்டை இந்தியாவாக இருக்கும் போது, இரட்டை 'பட்ஜெட்' போடுவதில் தவறேதும் இல்லை.**

– திருமாவளவன், பொதுச் செயலாளர் -
விடுதலைச் சிறுத்தைகள், சட்டப்
பேரவையில் ஆற்றிய உரையில்.



படிப்பகம்

www.padippakam.com



# தலித் மூலதனம் உருவாக்கப்பட வேண்டும்




அரங்க. மல்லிகா, ரஜினி, சிவகாமி, கல்யாணி, சிவராசேந்திரன், ரத்தினம்

மத்தியப் பிரதேச மாநிலத் தலைநகர் போபாலில் சனவரி 12,13 தேதிகளில் நாடெங்கிலுமுள்ள தலித் சிந்தனையாளர்களும், களப்பணியாளர்களும் ஒன்றுகூடி '21 ஆம் நூற்றாண்டில் தலித்துகளுக்கான புதிய பாதை வகுத்தல்' என்னும் பொருளில் மாநாடொன்றை நடத்தி 21 அம்சப் பிரகடனம் ஒன்றை வெளியிட்டுள்ளனர்.

தனியார் துறையில் தலித் மக்களுக்கு உரிய பிரதிநிதித்துவம் அளித்தல், உருவாகி வரும் சந்தைப் பொருளாதாரத்தில் தலித்துகளுக்கு உரிய பங்கை அளித்தல், 'தலித் மூலதனம்' ஒன்றை உருவாக்குதல், தலித்துகளுக்கு சாதிக் கலவரப் பகுதியில் ஆயுதம் வழங்குதல், தலித் பெண்களுக்கு ஆயுதப் பயிற்சி அளித்தல் முதலான பல கோரிக்கைகளை அப்பிரகடனம் முன்வைத்துள்ளது.

இப்பிரகடனத்தின் முக்கியத்துவம் கருதி குடியரசுத் தலைவர் டாக்டர் கே.ஆர் நாராயணன் அவர்கள், இந்த ஆண்டு குடியரசு நாள் உரையில் அது பற்றிப் பேசியுள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது. ஆனால், இப்பிரகடனம் தமிழகச் சூழலில் விரிவாக விவாதிக்கப்படாத நிலையில் - இது குறித்து அறிமுகம் செய்வதற்கும், இதன் குறைநிறைகளை விவாதிப்பதற்கும் - 'சுயமரியாதை இயக்கம்' ஏப்ரல் 20 அன்று சென்னை தேவநேயப் பாவாணர் நூலக அரங்கில் விவாத அரங்கையும் கருத்தரங்கையும் நடத்தியது.

இக்கருத்தரங்கில், அரசுச் செயலாளர் சிவகாமி, பேரா. அரங்க மல்லிகா, பேரா. கல்யாணி, வழக்கறிஞர் ரத்தினம், பேரா. அ. மார்க்ஸ், அயன்புரம் ராசேந்திரன், நயினா மாசிலாமணி, வழக்கறிஞர் ரஜினி, தய். கந்தசாமி, புனிதபாண்டியன் ஆகியோர் பங்கேற்று உரையாற்றினர். விவாத அரங்கில், போபால் பிரகடன அம்சங்களைச் செழுமைப்படுத்தும் நோக்கில் முன்வைக்கப்பட்ட சில கருத்துகள் :

> இன்று உலகளவில் பல நாடுகளில் நடைமுறையிலுள்ள 'விகிதாச்சாரப் பிரதிநிதித்துவம்' முதலான கோரிக்கைகளை தலித் இயக்கங்கள் முன் வைக்க வேண்டும்.

• கோரிக்கைகளை கிட்டத்தட்ட இருநூறு ஆண்டுகளாக வைத்துக் கொண்டிருக்கிறோம். அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு என்ன வழி என்பதை யோசிக்க வேண்டும். துறைகள் வாரியாகவும், மாவட்ட/வட்ட வாரியாகவும் இட ஒதுக்கீடு, நிலப்பங்கீ[டு] முதலான அரசுத் திட்டங்கள் உரி[ய] முறையில் நிறைவேற்றப்படுகிறத[ா] என்பதைக் கண்காணிக்க 'கண்காணி[ப்]புக் குழு'க்களை உருவாக்குவதற்[கு] இயக்கங்களும், ஆர்வலர்களும் மு[ன்]வர வேண்டும்.

• போபால் பிரகடனத்தை மத்தி[ய]யப் பிரதேச அரசு ஏற்றுக் கொண்டதை வரவேற்கிறோம். அதேபோல இந்தி[ய] நடுவண் அரசு இதனை ஏற்றுக் கொண்டு அகில இந்திய அளவில் நடைமுறை[ப்]படுத்த முன்வர வேண்டும். இப்பிரக[ட]னத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும் எனத் தமிழக அரசையும் வற்புறுத்து[]கிறோம்.

• பஞ்சமி நிலம், உபரி நிலம் முத[]லானவை குறித்த வெள்ளை அறிக்கை ஒன்றைத் தமிழக அரசு வெளியிட வேண்டும்.

• பாப்பாபட்டி, கீரிப்பட்டி, நாட்ட[ார்]மங்கலம் முதலான ஊர்களில் தலித்துக[ள்]ளுக்கான தேர்தல் ஒதுக்கீடுகள் கேலிக்[]குரியனவாக மாறியுள்ள சூழலில், மீண்டும் அண்ணல் அம்பேத்கர் முன் வைத்[த] இரட்டை வாக்குரிமைக் கோரிக்கை அல்லது இன்று உலகளவில் பல நாடு[]களில் நடைமுறையிலுள்ள 'விகிதாச்சா[]ரப் பிரதிநிதித்துவம்' முதலான கோரிக்[]கைகளை தலித் இயக்கங்கள் முன் வைக்க வேண்டும்.

• தலித்துகளுக்குத் தனி வரவு[] செலவுத் திட்ட அறிக்கை (ரயில்வே பட்ஜெட் போல) அளிக்கப்பட[] வேண்டும் என்கிற கோரிக்[]கையை வரவேற்கிறோம்.

• தகவல் தொழில்[]நுட்பம் வளர்ச்சியடைந்[]துள்ள சூழலில், அவற்றின் சாத்தியக் கூறுகளை தலித் இயக்கங்களும், தலித் மக்களும் பயன்படுத்த வேண்டும்.

• தலித் அமைப்புகள் பிற ஆதரவு அமைப்பு[]களை ஒருங்கிணைத்தும் செயல்பட வேண்டும் எனவும் ஆதரவு அமைப்புகள், தலித் அமைப்புகளின் கீழ் செயல்பட முன்வர வேண்டும் என[]வும் கேட்டுக் கொள்கிறோம்.

- நீலகண்டன்



படிப்பகம்

www.padippakam.com



# உணர்வூட்டிய கலை விழா

தன்னியல்பிலேயே ஒரு தலித் ஓர் எதிர்ப்பாளனாய், புரட்சிக்காரனாய் இருந்து கொண்டே இருக்க வேண்டியிருக்கிறது. தன் எதிர்ப்புணர்வை விடும் அக்கணத்தில் அவன் ஒரு பொருளாய் மாறுகிறான். மூன்றாம் உலகத்தின் ஒரு பகுதியான தமிழகத்தின் தலித்தின் இலக்கியம்தான் - உண்மையான பிரபஞ்ச சம்பந்தமுள்ள இலக்கியம். கலை என்பதின் தீவிர அழகியல் தத்துவம் இப்படிதான் உருவாக வேண்டும்... ஒரு தாழ்த்தப்பட்டவன் மலம் அள்ளலாம்; உடல் உழைப்பு செய்யலாம். ஆனால், அவனிடம் உள்ள படைப்பு நிலை பிரபஞ்ச விசாலமானது.''

*- தமிழவன், 'பறை' - 1991*

■ **அழகிய பெரியவன்**

மதுரை அரசரடி யூ.சி. பள்ளித் திடல் ஏப்ரல் 6 மாலை - பறைகளின் முழக்கத்தால் அதிர்ந்தது. கொம்புகளைத் தூக்கிப் பிடித்து ஊதியபடியும், பறைகளைத் துள்ளலுடன் இசைத்தபடியும் தலித் கலைஞர்கள் ஊர்வலமாய் வந்து மைதானத்தைச் சுற்றி நின்று இசைத்து விழாவை அறிவித்ததும் தலித் கலை விழா தொடங்கியது.

ஒன்பதாம் ஆண்டாக நடந்த இந்தக் கலை விழாவினைத் தொடங்கி வைத்து உரையாற்றிய மதுரை தமிழ் நாடு இறையியல் கல்லூரியின் முதல்வர் முனைவர் தியான்சந்த் கார், 'பறையிசையைக் கேட்ட போது என் உள்ளே துடிப்பு அதிகரித்து ஆட்டம் தொடங்கியிருந்தது. நீங்களும் மனதுக்குள் ஆடியிருப்பீர்கள். இப்படி உணர்வூட்டும் கலைத்தன்மையை இயல்பிலேயே கொண்டிருக்கும் தலித் கலைகளை அரங்கேற்ற ஒரு மேடை அவசியம் என்று கருதியதன் விளைவாக இத்தனை ஆண்டுகளாக இவ்விழா நடைபெறுகிறது' என்றார்.

மதுரை அரசரடியில் இருக்கும் தமிழ் நாடு இறையியல் கல்லூரியும், அங்கே செயல்படும் 'தலித் ஆதார மய்ய'மும் தமிழக அளவில் தலித் உணர்வூட்டல் மய்யமாக இருந்து கொண்டிருப்பவை. இம்மய்யத்தில் இருக்கும் தலித் தொடர்பான பல்வேறு வரலாற்று ஆவணங்களும், ஓவியங்களும், பழம்பொருட்களும் மிகவும் முக்கியமானவையாகும். தமிழக அளவில் முற்போக்கு பேசுகிற கலை இலக்கியவாதிகள், பெரும்பாலான கலைகள் தலித் மக்களாலேயே நிகழ்த்தப்படுகின்ற உண்மையைப் பூசி மழுப்பி - நாட்டார் கலைகள் என்று சொல்லிக் கொண்டிருந்த காலத்தில், தலித் கலைகள் என்கிற முழக்கத்துடன் அவைகளை இனங்கண்டு மேடையேற்றி வரும் பெரும் பணியை இம்மய்யம் செய்து வருகிறது.

தோலோடும், மரங்களோடும் அதிக நெருக்கம் கொண்டிருக்கும் தலித் மக்களே - பெரும்பாலான இசைக் கருவிகளை வடிவமைத்தனர். மானுடவியல் அடிப்படையில் இந்தியாவே முதல்



திண்டுக்கல் சக்தி குழுவினரின் பறையாட்டம்



படிப்பகம்

www.padippakam.com

வேள்ளாண்மை நாடு என்று சொல்லப்படுகிறது. நாகரிகம் அடைந்து வேளாண்மையைத் தொடங்கிய தலித் மக்கள், மிகுந்த கலை நேர்த்தியுடன் தம் கலைகளையும் அமைத்துக் கொண்டனர்.

கலை கேளிக்கைக்கெனவும், வழிபாட்டுக்கெனவும் மாற்றப்பட்டு புனிதப்படுத்துதல்கள் நடந்தபோது இந்தியச்சமூகம் - உயர்ந்த கலைகள், தாழ்ந்த கலைகள் என்று நாட்டுப்புறக் கலைகளைப் பிரித்தது. நாடகம் 'மேல்சாதி'யினருக்குரியது. கூத்துகள் ஏழுவகையும் 'இழிசனர்க்கு' உரியது என்கிறது சிலப்பதிகாரம். ஆனால், தெருக்கூத்தில்தான் உண்மையான தமிழ் மரபுடன் கூடிய நாடக மரபும், கூறுகளும் இருக்கின்றன என்கிறார்கள் இன்றைய கலை விமரிசகர்கள்.

நாட்டுப்புறக்கலைகள் பெரும்பாலும் தலித் மக்களாலேயே நிகழ்த்தப்படுகின்றன. அவைகளுக்கு வணிக மதிப்பு கூடியவுடன் இன்று வேறு பலரும் அதை நிகழ்த்துகிறார்கள். தொலைக்காட்சி, திரைப்படம் போன்ற பெரும் ஊடகங்கள் வணிக நோக்குடன் இக்கலையைத் திரித்தும், ஆபாசமாக மாற்றியும், ஆதிக்கக் கருத்தியலோடும் பயன்படுத்திக் கொள்கின்றன.

மழை வேண்டி நீர்நிலைகளிலிருந்து கரகம் எடுத்துவரும் வழிபாட்டு முறையான கரகாட்டம், இன்று பெண்கள் அரைகுறை ஆடைகளுடன் ஆடும் ஆட்டமாக மாற்றப்பட்டு உள்ளது என்கிறார் தலித் நாடக இசைக் கலைஞர் கே.ஏ. குணசேகரன்.

இந்தச் சூழலில், இக்கலைகளை மீட்டெடுத்து அதன் மூல வடிவங்களுடனே தலித் கருத்தியலுக்கு ஏற்ப மாற்றியமைக்க வேண்டிய தேவையை இக்கலை விழா நிறைவேற்றி வருகிறது. செவ்வியல் கலைகள் லயிக்கவும், மனதை அமைதிப்படுத்தவும், பொழுது போக்கவுமாக இருக்கிறபோது - கடும் உழைப்பின் இடையே தலித் மக்கள் நிகழ்த்தும் கலைகள் மக்கள் திரளை நோக்கியதாகவும், திறந்த அரங்கிலே நடப்பதாகவும், தங்கள் ரணங்களை ஆற்றிக் கொள்வதாகவும், முறையிடுவதாகவும், உணர்வூட்டக்கூடியதாகவும் இருக்கின்றன.

இக்கலைகளை நிகழ்த்துவதன் மூலம் தம் முன்னேற்றத்துக்கான சக்தி மிக்கத் தூண்டுதலை தலித் மக்கள் பெறுகின்றனர். கருத்துப்பரப்பலுக்கும், உணர்வு எழுச்சிக்கும் கலைகள் ஆற்றும் பங்கை வேறு எந்த செயலும் செய்துவிட முடியாது. இதை கலைவிழாவின் பல நிகழ்ச்சிகள் மெய்ப்பித்தன.

தமிழகம் முழுவதிலுமிருந்து பல்வேறு கலைக்குழுக்கள் வந்திருந்தன. பறையாட்டம் நிகழ்த்திய மூன்று குழுக்களும் பல்வேறு ஆட்ட முறைகளுடன் சில வீர விளையாட்டுப் பயிற்சிகளையும் நிகழ்த்திக்காட்டி பார்வையாளர்களைக் கவர்ந்தனர். திண்டுக்கல் சக்தி குழுவினரின் பறையாட்டம் பெண்களால் நிகழ்த்தப்பட்டது. ஆண் ஆட்டக்கலைஞர்களை விஞ்சினார்கள் அவர்கள். கலை நிகழ்வுகளில் சில நாடகங்களும் இருந்தன.

“ **தலித் மக்கள் நிகழ்த்தும் கலைகள் மக்கள் திரளை நோக்கியதாகவும், திறந்த அரங்கிலே நடப்பதாகவும், தங்கள் ரணங்களை ஆற்றிக் கொள்வதாகவும், முறையிடுவதாகவும், உணர்வூட்டக்கூடியதாகவும் இருக்கின்றன.** ”



கொம்பிசை தங்கராஜ் குழு - மதுரை

பார்வையாளர்களைக் கட்டுண்டு இருக்கச் செய்தது, யுத்தக்களத்தில் உயிர் நீத்த தலித் போராளிகளுக்கு என்று விளிம்பு அமைப்பு வழங்கிய 'வதை' என்கிற நாடகம். ஒகளூர், குண்டுப்பட்டி, திருநெல்வேலி போன்ற பல்வேறு இடங்களில் பல்வேறு காலகட்டங்களில் நிகழ்த்தப்பட்ட தலித் மக்கள் மீதான வன்முறைகளை - இந்த நாடகம் நெஞ்சைக் கரைக்கும் வகையில் சொன்னது. தாலாட்டு, ஒப்பாரி, புராணம், நவீனம் என பல கூறுகளைக் கலந்து உருவாக்கப்பட்டிருந்த இந்நாடகம், மிகவும் வெளிப்படையானதீர்வை முன்வைத்துப் போராட்டத்துக்கு அழைத்தது.

சங்கரலிங்கபுரத்தில் நடந்த வன்முறைகளை மனதைப் பிழியும்படி பட்டியலிட்ட பாத்திரங்களின் குரலுக்கு பதிலாக, நேரடியாக பாதிக்கப்பட்ட மக்களின் முறையிடல்களையே பதிவு செய்து வந்திருந்து பயன்படுத்தினார்கள். காவல் துறையின் வெறியாட்டங்களை கதறலும் கண்ணீருமாகச் சொல்லும் பெண்களின் புலம்பல் மனதை அறுத்து ரணமாக்கி விட்டது.

விழாவில் காவல் துறையின் அத்துமீறல்களைப் பாடல்களாக்கிய வீரத் தழும்பு ஒலிநாடாவும், 'தலித் கிருத்துவரும் சமுதாய மறுமலர்ச்சியும்' என்கிற முனைவர் துரைராசு அவர்களின் அருந்ததியர் ஆய்வு நூலும் வெளியிடப்பட்டன. அய்யா அழகர்சாமி வாத்தியார் நினைவு விருதை, காந்தி அண்ணாவி என்கிற நாயனக் கலைஞருக்கு வழங்கினார்கள்.

விழாவில் சிறப்புரையாற்றிய புதிய தமிழகம் கட்சித் தலைவர் டாக்டர் கிருஷ்ணசாமி, தலித் மக்களின் நிலையைச் சுட்டிக்காட்டி, அவர்களின் விடுதலைக்கு தலித் கலைகள் பயன்பட வேண்டும் என்றார். தலித் மக்களுக்கு இடையேயும், அமைப்புகளுக்கு இடையேயும் இருக்கும் பிளவுகளைக் குறிப்பிட்டு - நாம் ஒன்றுபட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

இந்த விழா இப்படியே மதுரையோடு முடிந்து விடுமா என்று எழுந்துள்ள கேள்விக்கு சேலம் ஆதிவாசிகள் கலைவிழா, போளூர் கலைவிழா என்று சில விடைகள் கிடைக்கத் தொடங்கியுள்ளன. தலித் கலைஞர்களுக்கு தலித் விழிப்புணர்வு ஊட்டி பயிற்சித் தருவது, மாவட்டங்கள் தோறும் இவ்விழாக்களைப் பரப்புவது போன்ற தேவைகளும் நம்முன் இருக்கின்றன. மேலும், அதிமுக்கியமாக தலித் அரசியல் இயக்கங்கள் இந்தக் கலை விழாக்களையும், கலைகளையும் கையிலெடுக்க வேண்டும். திராவிடக்கட்சிகள் அதிகாரத்திற்கு வர துணைபுரிந்ததில் பெரும் பங்கு வகித்தது, அவர்களின் கலை வடிவப் பிரச்சாரங்களே என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. ●



படிப்பகம்

www.padippakam.com

தலித் கிறித்துவர் இடஒதுக்கீடு

# வாழ்வை விழுங்கும் அரசாணைகள்

■ கவுதமசன்னா

தலித் மக்களின் வாழ்வியல் மேன்மைக்குப் பாடுபடுவதாகச் சொல்லிக் கொள்ளும் இரண்டு திராவிடக் கட்சிகளின் துரோக வரலாறு இது. உலகத் தமிழர்களின் தலைவர் என்ற பட்டத்தைப் பறிகொடுத்துவிட்டு, பரிதவிக்கும் கருணாநிதி - தன் அரசை 'சூத்திர அரசாக' பிரகடனப்படுத்தினார். உலகப் புரட்சிகளை நடத்தி முடித்த 'புரட்சித் தலைவ'ரின் வாரிசான ஜெயலலிதா 'நான் ஒரு பாப்பாத்திதான்' என்று சட்டமன்றத்திலேயே பகிரங்கமாகப் பிரகடனம் செய்தார். தமிழர்களின் சட்ட மன்றம், சாதி அறிவிப்பு மன்றமாக மாறிய அவலத்தை உருவாக்கிய பெருமை - பகுத்தறிவு திராவிட அரசுகளையே சாரும்.

வாட்களைத் தொலைத்துவிட்டு, இரண்டு கையிலும் கேடயம் ஏந்திப் போரிடும் விந்தையான போர்க்களம் திராவிடக் கட்சிகளின் சட்டமன்றம். வார்த்தை விளையாட்டுகளாலும், குத்திக் கிழிக்க வரும் காகித அம்புகளாலும் - தங்களுக்குள் அடித்துக் கொள்ளும் திராவிடக் கட்சிகள், எப்போதாவது ஒரே அணியில் அய்க்கியமாவது எங்கென்றால் - அது தலித் மக்களை ஒடுக்கும் விஷயத்தில்தான். தேன் தடவிய சொற்களின் புன்னகைக்குப் பின்னே, குத்துவாளை மறைத்தபடி தலித் மக்களுக்கு கரிசனம் காட்டுகிறார்கள்.

இவர்களது சாயம் இனி வெளுக்கப் போவதில்லை. ஏனென்றால், ஏற்கனவே அவர்கள் 'காவி'க்கு மாறி விட்டார்கள். தலித் மக்களை ஒடுக்கும் இரண்டாவது 'அவதார'த்தை எடுத்துவிட்டார்கள். 'அவதார'த்தின் இரண்டாவது வருகையால், கல்லறைகள் பிளந்து மரித்தவர்கள் உயிர் பெறவைக்க அல்ல! மாறாக, தலித்துகளை அரசியல் ரீதியாகப் புதைப்பதற்குத்தான்!

இவர்களது துரோகத்தின் ஒரு ஆவணம் இங்கே அலசப்படுகிறது. தலித் மக்களின் இடஒதுக்கீடு, ஏற்கனவே அவர்களின் பொய் கணக்குப்படியே - பனிரெண்டாயிரம் பணியிடங்கள் நிரப்பப்படவில்லை என்ற நிலையில், பணியிலிருக்கும் கொஞ்சம் பேரின் வேலைக்கும், புதிய வாய்ப்புகளுக்கும் வேட்டு வைக்கும் பணியை கருணாநிதி அரசு 2000 ஆம் ஆண்டில் தொடங்கியது.



'கிறித்துவ மதத்திலிருந்து இந்து மதத்திற்கு மாறிய தலித்துக்கு இடஒதுக்கீடு இல்லை' - என்றொரு புதிய ஆணையை அன்றைய கருணாநிதி அரசு அறிவித்தது. இந்த ஆணைக்கு உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பு ஒன்றினை ஆதாரமாகக் கொண்டார்கள்? இதை மீண்டும் ஜெயலலிதா அரசு உறுதி செய்தது (2002).

உச்சநீதி மன்றத் தீர்ப்பிற்கும், இவர்களது நடவடிக்கைக்கும் தொடர்பே இல்லை. இந்த மோசடியை அம்பலப்படுத்த, சட்டநுட்ப வழியையே கையாள்வது மிகுந்த அவசியமாயிருக்கிறது. இக்கட்டுரையின் முதற்பகுதி, அந்த ஆணையின் சட்டப்பூர்வமற்றத் தன்மையை வெளிக்கொணர்கிறது. இரண்டாம் பகுதி, அந்த சட்டங்களின் அரசியல் பின்புலத்தை அம்பலப்படுத்துகிறது.



படிப்பகம்

www.padippakam.com

பத்தொன்பது ஆண்டுகளுக்கு முன்பு நடந்த நிகழ்ச்சி அது. தலித் மக்கள் இந்து மதத்தில் இருந்து கொண்டு உரிமையைப் பெற்ற பிறகு, கிறித்துவ மதத்தில் சேர்ந்து விடுகிறார்கள் என்று எம்.ஜி.ஆர் அரசு கோபக்கணையை வீசியது. இந்து மதத்தைக் காப்பாற்றும் பணியினை சிரமேற்கொண்ட எம்.ஜி.ஆர். அரசு, ஆதி திராவிடர் நலத்துறை வாயிலாக ஒரு அரசாணையை வெளியிட்டது Circular letter No.27111-APW-11-80-26. அதில், கிறித்துவ மதத்தை ஏற்றுக் கொள்ளும் தலித்துக்கு இடஒதுக்கீடு உரிமை பறிக்கப்படும் என்று ஆணை கூறியது.

படிப்படியாக இந்த ஆணை செயலிழந்து போனது. மறுபடியும் கருணாநிதியின் ஆட்சியில் இது புதிய அவதாரம் எடுத்தது Govt. letter (MS) No.81 - Adi -Dravidar & Tribal Welfare Dept. dated 19.9.2000. இந்த ஆணை கூடுதலாக கொஞ்சம் அதிகாரத்தொனியில்,

> "கிறித்துவப் பெற்றோருக்கு பிறந்தவர் இந்து மதத்தை ஏற்றுக் கொண்டால் கூட, அவருக்கு இட ஒதுக்கீட்டு உரிமை - அதாவது, அரசின் வார்த்தையில் 'சலுகை' கிடைக்காது" என்று ஆணையிட்டது.

> **"திராவிடக் கட்சியினர் தேன் தடவிய சொற்களின் புன்னகைக்குப் பின்னே, குத்துவாளை மறைத்தபடி தலித் மக்களுக்கு கரிசனம் காட்டுகிறார்கள்."**

இந்த ஆணையும் அரசமைப்புச் சட்டத்தை மீறுவதாகும். இந்த மீறலைக் களைய ஆதிதிராவிடர் நலத்துறை, ஆணையை ரத்து செய்து அரசமைப்பு மீறலைச் சரி செய்தது. ஆணை 4261/ADW 11/2002 dated 21.02.2002.

ஆனால், எம்.ஜி.ஆர் காலத்து 'ஆவி' மீண்டும் உயிர்த்தெழுந்து கருணாநிதி வாயிலாக, ஜெயலலிதாவிடம் சேர்ந்துவிட்டது போலும். தலைமைச் செயலாளர் சங்கர், அனைத்து மாவட்ட ஆட்சியருக்கும், தந்தி வாயிலாக மேற்கண்ட ஆணையை ரத்து செய்து தன் ஆணையை அனுப்பினார். Telex No.4261/APW II/2002-2 dated 28.2.2002 அதன்படி, "கிறித்துவ பெற்றோருக்கு பிறந்தவருக்கு இடஒதுக்கீடு இனி இல்லை." வேதாளம் மீண்டும் மரமேறி விட்டது.

தமிழக அரசுகள் தலித் மக்களின் தலை மீது கைவைப்பதற்கு மட்டும் எவ்வளவு வரலாற்று உணர்வுடனும், அதிவேகமாகவும் பணியாற்றுகிறது என்பதற்கு இது மிக நல்லச் சான்று. இந்த ரத்து ஆணைகளை வெளியிடுவதற்கு, இந்த திராவிட அரசுகள் உச்ச நீதிமன்றம் வெளியிட்ட ஒரு தீர்ப்பைப் பயன்படுத்திக் கொண்டன. அது ஒரு சாதாரண வழக்கின் ஒரு தீர்ப்புதான்.

திருநெல்வேலியை சேர்ந்த சுவீகர தாஸ் என்பவர், மதம் மாறிய கிறித்துவ பெற்றோருக்குப் பிறந்தவர். கிறித்துவ முறைப்படி திருமணம் செய்து கொண்டார். இவர், எஸ்.சி.க்கான உரிமைகளை பெற முடியுமா? என அவர் பணி புரிந்த இந்திய உணவுக் கழக தென்மண்டல மேலாளர், காரண விளக்க கேட்போலை அனுப்பினார். இதை எதிர்த்து சுவீகரதாஸ் தொடர்ந்த வழக்கு, மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வெற்றி பெற்றது. ஆனால் உயர்நீதி மன்றத்திலும், உச்சநீதி மன்றத்திலும் தள்ளுபடி செய்யப்பட்டது.

உச்சநீதிமன்றத்தின் இருவர் பெஞ்ச் கீழ்க்கண்டவாறு தீர்ப்பளித்தது:

குடியரசுத் தலைவரால் வெளியிடப்பட்டுள்ள 'பட்டியல் இனத்தவர்' பட்டியலில், கிறித்துவர்கள் இடம் பெறவில்லை. மனுதாரர் கிறித்துவப் பெற்றோருக்குப் பிறந்தவர். அவர் பிறப்பதற்கு முன்பே அவரது பெற்றோர்கள் கிறித்துவ மதத்திற்கு மாறியுள்ளனர். குடியரசுத் தலைவரின் அறிவிப்பின்படி, திருநெல்வேலி மாவட்டத்தில் இவர்கள் ஆதிதிராவிடராகத் தொடர முடியாது. மனு தள்ளுபடி செய்யப்படுகிறது. (SLP(C) No.2757/1995 dated 25.1.1996)

இந்தத் தீர்ப்பு, தமிழக அரசின் ஆணைக்கு எப்படி உதவ முடியும்? ஒரு தனி நபருக்கு அளிக்கப்பட்ட தீர்ப்பு, ஒரு அரசின் தீர்ப்புக்கு எப்படி அடிப்படையாக முடியும்?



உச்சநீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படை, 'ஒரு கிறித்துவ பெற்றோருக்குப் பிறந்த கிறித்துவருக்கு இடஒதுக்கீடு இல்லை' என்பதாகும்.

தமிழக அரசின் ஆணை, ஒரு கிறித்துவப் பெற்றோருக்கு பிறந்த நபர், பிறகு இந்து மதம் மாறினாலும் இட ஒதுக்கீடு இல்லை என்பதாகும்.

உச்சநீதிமன்றத் தீர்ப்புடன் வெளிப்படையாக முரண்படும் தமிழக அரசின் இந்த ஆணையின் உள்ளடக்கம் "பிறப்பால் இந்துவாக இருக்கும் ஒரு தலித்துக்குத்தான் அட்டவணையினருக்கான சலுகை கிடைக்கும் என்பதாகும்".

உச்சநீதிமன்றத் தீர்ப்பை தமிழக அரசுகள் தனக்குச் சாதகமாகத் திரித்துள்ளதன் மூலம்,

1. தலித்துகளின் மதத் தகுதியை பிறப்பின் அடிப்படையில் நிர்ணயம் செய்துள்ளது.

2. இதன் மூலம் சாதித் தகுதியை நிர்ணயம் செய்துள்ளது.

3. இந்த இரண்டின் மூலம் குடியரசுத் தலைவரின் அதிகாரத்தில் கை வைத்துள்ளது.

இவைகளைத் தவிர இந்த ஆணையானது, மேற்கொண்ட பல்வேறு அதிகப் பிரசங்கித்தனமாக இந்து மதக் கொடுங்கோன்மை / அதிகாரத்தை நிலைப்படுத்த மட்டுமல்ல, மக்களின் அடிப்படை உரிமைகளில் தமிழக



படிப்பகம்

www.padippakam.com

“உச்சநீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படை, ‘ஒரு கிறித்துவ பெற்றோருக்குப் பிறந்த கிறித்துவருக்கு இடஒதுக்கீடு இல்லை’ என்பதாகும்.

தமிழக அரசின் ஆணை, ‘ஒரு கிறித்துவப் பெற்றோருக்கு பிறந்தவர் இந்து மதம் மாறினாலும் இடஒதுக்கீடு இல்லை’ என்பதாகும்.”

அரசு எவ்வளவு எளிதாகத் தலையிடுகிறது என்பதைப் பார்ப்போம்.

சுவீகரதாஸ் வழக்கில் நீதிமன்றங்களுக்கு எழுந்த வினா, சுவீகரதாஸ் இடஒதுக்கீடு பெறத் தகுதியுடையவரா என்பதுதான். தீர்ப்பின் அடிப்படையில் அவர் பெறத் தகுதியில்லாதவர். காரணம், அவர் கிறித்துவ மதத்தினை கைக்கொண்டிருப்பவர் என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. இந்தத் தீர்ப்பு, சுவீகரதாசுக்கு மட்டும் பொருந்தும். ஆனால், ஏற்கனவே கிறித்துவ பெற்றோருக்கு பிறந்து மீண்டும் இந்துமதம் மாறிய ஒருவருக்குப் பொருந்தாது. இதை மய்யமாகக் கொண்ட இரண்டு வழக்குகளை உச்சநீதிமன்றம் சந்தித்தது.

**முதல் வழக்கு**

சி.எம். ஆறுமுகம் (எதிர்) ராஜகோபால் மற்றும் சிலர் வழக்கில் 19.12.1975இல் தீர்ப்பு வழங்கப்பட்டது. இத்தீர்ப்பை நீதியரசர்கள் ஆல்.வி. சந்திகட், பி.என். பகவதி மற்றும் ஆர்.எஸ். ஆச்சாரியா ஆகியோர் அடங்கிய பெஞ்ச் வழங்கியது. அதன்படி,

“முதல் பிரதிவாதி இந்து மதத்திற்கு மீண்டும் மாறிய நிலையில், ஆதிதிராவிடர் சாதியினரால் ஏற்றுக் கொள்ளப்பட்டால் அவர் மீண்டும் ஆதிதிராவிடர் சாதிக்குத் திரும்ப முடியும் (பத்தி - 17)”.

**இரண்டாவது வழக்கு**

குண்டூர் மருத்துவக் கல்லூரி முதல்வர் மற்றும் பிலல் எதிர் ஒய். மோகன் ராவ் வழக்கில் 6.4.1976இல் தீர்ப்பு வழங்கப்பட்டது. இத்தீர்ப்பை நீதியரசர்கள் ஏ.என்.ரே (தலைமை நீதிபதி), பி.என். பகவதி, ஏ.சி. குப்தா, எஸ். சகுந்தலா பாசல் மற்றும் ஜஸ்வந்த் சிங் ஆகியோர் அடங்கிய அய்வர் பெஞ்ச் வழங்கியது.

இவ்வழக்கில், முன்கண்ட தீர்ப்பை உறுதி செய்ததுடன் அதன் வழிகாட்டுதலையும் ஏற்றுக் கொண்டது. தீர்ப்பின் முடிவாக, “கிறித்துவ மதத்திற்கு மாறிய பெற்றோர்களின் பிள்ளை இந்து மதத்திற்கு மாறும்போது, அவரது பெற்றோர்கள் மத மாற்றத்திற்கு முன் சார்ந்திருந்த சாதியினர் ஏற்றுக் கொள்ளும் பட்சத்தில் அவர் அந்த சாதியினராக இருக்க முடியும்” (பத்தி - 7).

இப்படி இரண்டு தீர்ப்புகள் தெளிவாக இருக்கும் நிலையிலும், ஏற்கனவே இது குறித்த தெளிவான வழிகாட்டுதல் இருக்கிறது. அதாவது, 1959 ஆம் ஆண்டு மய்ய அரசு ஒரு ஆணையை வெளியிட்டுள்ளது. அந்த ஆணை letter No.18/4/58 SCT IV dated 23rd July 1959 என்பதாகும். இந்த ஆணைப்படி, கிறிஸ்தவ மதத்தைத் தழுவிய ஒருவர் மீண்டும் இந்து மதத்தைத் தழுவினால் அட்டவணை சாதியினருக்கான இடஒதுக்கீட்டினைப் பெறமுடியும் என்று அறிவித்தது.

தெளிவான வழிகாட்டுதல்கள், ஆதாரங்கள் இப்படி இருக்கும் நிலையில், தமிழக அரசின் ஆணை, ஒரு தாழ்த்தப்பட்டவர் பிறப்பால் இந்துவாக



இருக்க வேண்டும் என்று நிபந்தனை விதிக்கிறது. இந்த நிபந்தனைக்கு சட்டப்படி அங்கீகாரம் இருக்கிறதா என்பது கேள்வி.

இந்தப் பிரச்சினைக்கு, முன்பு கண்ட குண்டூர் மருத்துவக் கல்லூரி வழக்கில் வழங்கப்பட்டத் தீர்ப்பில் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது. இத்தீர்ப்பின்படி,

அட்டவணை சாதியினராக இருக்கும் நபர் அட்டவணை சாதியில் இருப்பதற்கு, பிறக்கும்போதே இந்துவாக இருக்க வேண்டும் என்பது அவசியமில்லை. அவர் இந்து மதத்தை ஒழுகினால் (அல்லது ஓம்பினால்) போதும்.

இதே கருத்தை 1950 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட அரசமைப்புச் சட்ட ஆணை உள்ளடக்கியிருக்கிறது. ஓம்புதல் என்ற வார்த்தை பிறப்பினாலோ அல்லது ஏற்பதன் மூலமாகவோ மதத்தை ஓம்புவது என்று சென்னை உயர்நீதி மன்றம் ஜி. மைக்கேல் எதிர் எஸ். வெங்கடேஸ்வரன் வழக்கில் (AIR 1952 Madras 474 DB) விளக்கமளித்துள்ளது.

இத்தீர்ப்பின் அடிப்படையானது, மதத் தகுதி விருப்பத்தின் அடிப்படையில் அமைவதை உறுதி செய்கிறது.

தன்னிச்சையாக தமிழக அரசு ஒரு விளக்கத்தினை அளித்து, ஆணைகளை வெளியிட்டதன் மூலம், அரசமைப்புச் சட்டம் வழங்கும் அடிப்படை உரிமைகளையும் மீறியுள்ளது.

பிரிவு 14 : அரசு இந்திய ஆட்சி நிலவரைக்குள் சட்டத்தின் முன்னர் சமன்மையும், சட்டங்கள் அளிக்கும் பாதுகாப்பில் சமன்மையும் எவர் ஒருவருக்கும் மறுத்தல் ஆகாது.

பிரிவு 25 : மனச்சான்று வழி ஒழுகுவதற்கான சுதந்திரமும், சுதந்திரமான சமய நெறி ஒழுகுதலும், ஓதிப் பரப்புதலும் செய்ய உரிமை.

இந்த அடிப்படை உரிமைகளை மறுப்பதற்கு ஒரு மாநில அரசிற்கு எந்த அதிகாரமும் இல்லை. நாட்டில் நெருக்கடி நிலைப் பிரகடனப்படுத்தப்பட்டால் மட்டுமே அவை கட்டுப்படுத்தப்படும்.

திராவிட அரசுகள், நாட்டில் நெருக்கடி நிலையைப் பிரகடனப் படுத்தும் அளவிற்கு பலம் பெறவில்லை. ஆனால், அவை நீடித்து ஆளவேண்டும் என்ற அதிகார ஆசை அவர்களை நெருக்கடிக்குள்ளாகியிருக்கிறது. கண்களை காவி மறைத்து பயமுறுத்த, சம்பூக



படிப்பகம்

www.padippakam.com

னின் ரத்தத்திலிருந்து உயிர் பெற்றவர்கள் மீண்டும் சம்பூகனையே வதைக்க ராமனாய் உருமாறியிருக்கிறார்கள்.

பெரியார் பாசறையில் வளர்ந்தவர்கள், தங்கள் தலைகளைப் பறிகொடுத்துவிட்டு, வாளினை தலித்துகள் பக்கம் நீட்டியுள்ளார்கள். தங்களின் நெருக்கடியை நாட்டின் நெருக்கடியாக உருமாற்றி அரசமைப்பு அடிப்படை உரிமைகளைத் தடுத்திருக்கிறார்கள். இது வேடிக்கையான கேலிக்கூத்தல்ல. உயிர் பயம் கொண்டவனின் கடைசி நேர நடவடிக்கைகள். அதனால் தான் இதுபோன்ற சட்டம்கெட்ட செயல்கள்.

மதத்தை கைக்கொள்வதை கட்டாயமாக்குவதற்கு சட்டப்படி எந்த விதமான அங்கீகாரமும் இல்லை என்பதை நீதிமன்றங்கள் தெளிவாக வரையறுத்திருக்கின்றன. ஆனால் கேள்விகள் மீதமிருக்கிறது. தலித்துகளின் மதத் தகுதியை நிர்ணயித்ததின் மூலம் சாதியும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதற்கு மாநில அரசிற்கு அதிகாரம் இருக்கிறதா? என்பது மிக முக்கியமான கேள்வி.

தலித்துகளின் சாதித் தகுதியை நிர்ணயிக்க மாநில அரசுகளுக்கோ - நீதிமன்றங்களுக்கோ எந்தவிதமான அதிகாரமும் இல்லை. இதை இந்திய அரசமைப்புப் பிரிவு *341* :

> ''மாநிலம் அல்லது ஒன்றிய ஆட்சி நிலவரை எதனைப் பொறுத்தும், அது ஒரு மாநிலமாக இருக்குமிடத்து. அதன் ஆளுநரை கலந்தாய்வு செய்து பின்பு அந்த மாநிலம் அல்லது நேர்வுக்கேற்ப, ஒன்றியத்து ஆட்சி நிலவரைத் தொடர்பாக, இந்த அரசமைப்பினைப் பொறுத்தவரை பட்டியலில் கண்ட சாதிகள் என்று கொள்ளப் படவேண்டிய சாதிகள், இனங்கள் அல்லது பழங்குடிகள் எவை என்றும், சாதிகளில், இனங்களில் அல்லது பழங்குடிகள் உள்ளப் பகுதிகள் அல்லது தொகுதிகள் எவை என்றும் குடியரசு தலைவர் பொது அறிவிக்கை வாயிலாகக் குறித்துரைக்கலாம்''.

இதன்படி, அட்டவணை சாதியினர் மற்றும் பழங்குடியினரின் சட்டப் பூர்வமான தகுதியினை நிர்ணயிப்பதற்கு குடியரசுத் தலைவருக்கு மட்டுமே அதிகாரமுள்ளது. அவர் மாநில ஆளுநரிடம் கலந்தாய்வு செய்து சாதியின் தகுதியினை பொது அறிவிக்கை வாயிலாக அறிவிக்கலாம் என்பது இதன் சாரம். அப்படி அறிவிக்கப்பட்டதுதான் எஸ்.சி./எஸ்.டி. பட்டியலும், *1950* ஆண்டு ஆணையும்.

மாநில அரசுகளோ, நீதிமன்றங்களோ இதைச் செய்ய எந்த அதிகாரமும் இல்லாத நிலையில். அவைகள் அதிகப்பட்சம் செய்யக் கூடியவை, குடியரசுத் தலைவர் அறிவித்துள்ள பொது அறிவிப்பில், தங்களிடம் வரும் சாதி நிர்ணயப் பிரச்சினைக்கு, அச்சாதியின் தகுதி குடியரசுத் தலைவரின் அறிவிப்பில் ஒத்துப் போகிறதா என்று தான் பார்க்க முடியும். அதற்கு மேல் அவை செல்ல முடியாது.

இந்த வேலையைத்தான் சுவீகரதாஸ் வழக்கில் உச்சநீதி மன்றம் கடைப்பிடித்தது. தீர்ப்பில் கூட ''குடியரசு தலைவரின் அறிவிப்பில் கிறித்துவ ஆதிதிராவிடர் பெயர் இடம் பெறவில்லை'' என்று தான் குறிப்பிட்டது.

இந்த ஒரு வழக்கு மட்டுமில்லை. பல வழக்குகள் இது போல விசாரிக்கப்பட்டுள்ளன. பிரபுதேவ் எதிர் ராமசந்திரன் [(1996) 4 SCC 431=AIR 1996 SC 1962] வழக்கில் கூட இதேதான் கடைபிடிக்கப்பட்டது.

இதையேதான், *1996* ஆண்டில் பங்கிகுமார் என்பவரின் சாகா - சாதி குறித்த வழக்கில் உச்சநீதிமன்றம் கடைப்பிடித்தது. இப்படி பல வழக்குகள் உள்ளது.

சாதியை நிர்ணயிப்பதற்கு உச்சநீதி மன்றத்திற்கு உள்ள அதிகாரமே இவ்வளவுதான் எனும் போது, உச்சநீதிமன்ற ஆணையைப் பின்பற்றும் மாநில அரசின் அதிகார எல்லையை விளக்கத் தேவையில்லை.

பட்டியலினத்தவர், பிறப்பினடிப்படையில் இந்துவாக இருப்பதன் மூலம் தான் சலுகை பெற முடியும் என்ற தமிழக அரசின் ஆணை, குடியரசுத் தலைவரின் அதிகாரத்தினை மீறி தன்னிச்சையாகச் செயல்படுகிறது.

இந்தத் தன்னிச்சை செயல் பாப்பா பட்டியிலோ, கீரிப்பட்டியிலோ ஆதிக்க சாதியினரின் திமிரை அடக்க பயன்படாது, அவர்களால் தாக்குதலுக்குள்ளாகி குற்றுயிராய் கிடப்பவன் மீதே சாய்கிறது. நேசக்கரமின்றி தனித்து விடப்பட்ட பட்டியலினத்தவரின் தகுதியை நிர்ணயிக்கும் அதிகாரம், குடியரசுத் தலைவருக்கு அளிக்கப்பட்டது அரசமைப்புப்படி என்றாலும்,

STATE EXPRESS

ADI DRAVIDAR AND TRIBAL WELFARE (ADWII) DEPARTMENT
TELEX NO.4261 /ADWII/2002-2 DATED 28-02-2002

TO
ALL COLLECTORS

IN PURSUANT OF THE SUPREME COURT JUDGEMENT IN S.L.P.NO. 27571/95 DATED 25.1.96 ALL COLLECTORS WERE CLARIFIED IN GOVERNMENT LETTER (MS) NO.81 ADI DRAVIDAR AND TRIBAL WELFARE DEPARTMENT DATED 19.9.2000 THAT A PERSON BORN OF CHRISTIAN PARENTS CANNOT GET SCHEDULED CASTE COMMUNITY CERTIFICATE ON HIS CONVERSION TO HINDUISM AND NOT ENTITILED TO ENJOY THE BENEFITS OF RESERVATION FOR SCHEDULED CASTE AAA IN GOVERNMENT LETTER NO.4261/ADWII/2002-1 DATED 21.02.2002, THE ABOVE GOVERNMENT ORDER DATED 19.9.2000 HAS BEEN ORDERED TO KEPT IN ABEYANCE UNTIL FURTHER ORDERS AAA NOW THE GOVERNMENT DIRECT THAT NOT TO ACT ON THE GOVERNMENT LETTER NO 4261/ADWII/2002-1 DATED 21.02.2002 AND IT STANDS HEREBY WITHDRAWN AND STATUS QUO ANTE WILL PREVAIL AAA THE EARLIAR ORDERS ISSUED IN GOVERNMENT LETTER (MS) NO.81 ADI DRAVIDAR AND TRIBAL WELFARE DEPARTMENT DATED 19.9.2000 SHOULD BE ADHERED TO SCRUPULOUSLY AAA THIS TELEX SHOULD BE ACKNOWLEDGED IMMEDIATELY AAA

WELFARE -

P. SHANKAR.
CHIEF SECRETARY TO GOVERNMENT

Copy to :
The Director, Adi Dravidar Welfare, Chennai-5
The Director, Tribal Welfare, Chennai-5
The Principal Commissioner and Commissioner for Revenue Administration, Chennai-5
Private Secretary to Chief Secretary, Chennai-9
PC TO GO FOR CONFIRMATION

/True copy/

**தலைமைச் செயலரின் தந்தி ஆணை**

> **“ தமிழக அரசின் ஆணை, ஒரு தாழ்த்தப்பட்டவர் பிறப்பால் இந்துவாக இருக்க வேண்டும் என்று நிபந்தனை விதிக்கிறது. இந்த நிபந்தனைக்கு சட்டப்படி அங்கீகாரம் இருக்கிறதா என்பதுதான் கேள்வி. ”**

பட்டியலினத்தவரின் மதத் தகுதியை நிர்ணயிப்பதில் எந்த முறை கைப்பற்றப்பட்டது என்பதற்கு நெடு வரலாறு உண்டு. இந்த வரலாற்றின் தற்போதைய நீட்சி தான் தமிழக அரசின் ஆணை என்று சொன்னால் வியப்பாக இருக்கும்......! ●

இப்பிரச்சினை குறித்த விவாதம், இனி வரும் இதழ்களிலும் தொடரும்.



படிப்பகம்

www.padippakam.com

# "செத்துரணும்னுதான் இருந்திச்சி"

## பெண் முதல்வர் ஆட்சியில் இளம் தாயின் குமுறல்




■ 'காஞ்சனை' **மணி**

தேவர் சாதியில் பிறந்த தகுதி மட்டும் இருந்தால் போதும். உடல் தினவு ஏற்படும்போது உடனே ஒரு தலித் தெருவுக்கோ, முஸ்லிம் தெருவுக்கோ போய், பார்க்க நன்றாக இருக்கும் ஒருத்தியைத் தூக்கிக் கொண்டு போகலாம். பிறகு எந்தத் தண்டனையும் பெறாமல் திமிராகத் திரியலாம். இது, நூறு ஆண்டு களுக்கு முன்பிருந்த நடைமுறையல்ல. இன்று நெல்லை மாவட்டம் மேலச் செவல் பேரூராட்சியில் நடந்திருக்கும் குரூர நிகழ்வு.

மார்ச் 27 இரவு 11.30 மணிக்கு சாப்பிட்டுவிட்டுப்படுத்த மேலச்செவல் கோலியர் தெரு கோமதிக்கு, அன்றைய இரவு - தன் வாழ்வின் மிகக் கொடூரமான இரவு என்பது தெரியாது. பத்து வயது மகன் சரவணனுக்கும், மனநிலை சரியில்லாத கணவர் சக்தி வடிவேலுவுக்கும் சாப்பாடு வைத்துவிட்டுத் தானும் சாப்பிட்டுப்படுத்த கோமதி நள்ளிரவு 12.30 மணிக்கு, கணவர் வெளியிலிருந்து தன்னை அழைக்கும் குரல் கேட்டு வெளியே வந்தார்.

அரிவாளைக் கொண்டு மனிதர்களை வெட்டுவதையும் அந்த அரிவாளையே தங்கள் சாதிக்கு அடையாளமாகவும் வைத்திருக்கும் நான்கு பேர் - மேலச்செவலைச் சேர்ந்த மகேஷ் மற்றும் அவனது நண்பர்கள் மூவர் - கோமதி மீது பாய்ந்து வாயைப் பொத்தி இருபுறமும் இருவர் பிடித்துக் கொள்ள மற்ற இருவர் பிடித்துத்தள்ள - கல்லிலும் மண்ணிலும் கால்கள் தேய, ஆறு வயல்கள் இழுத்துச் செல்லப்பட்டு, போகப் போக உடைகள் உரியப்பட்ட கோமதி என்னும் தலித் இனப் பெண், வாழைத் தோப்பின் வரப்பில் கிடத்தப்பட்டு அரிவாள் முனையில் 'கும்பல் வன்புணர்ச்சிக்கு' ஆளாகியிருக்கிறார்.

சேரன்மகாதேவியிலிருந்து 5 கி.மீ. தொலைவிலுள்ள மேலச்செவல் கிராமம், சுமார் ஆயிரம் தேவர் குடும்பங்களைக் கொண்டது. சுமார் 100 குடும்பங்கள் மட்டுமே தலித்துகள். முஸ்லிம்கள் உட்பட பிற இனத்தவர் மிகவும் சொற்ப எண்ணிக்கையில் உள்ளனர். தலித்துகளில் கிருத்துவர்கள், கோலியர் தெருவிலும் மற்றவர்கள்வடக்குத்தெரு, தெற்குத் தெருவிலும் வசிக்கிறார்கள்.

> **"ஆதிக்க சாதித்திமிர், தலித்துகள் யாரும் எதிர்த்து வரமாட்டார்கள் என்ற எண்ணம், பைத்தியத்தின் மனைவிதானே என்ற இளப்பம், முந்தைய வழக்கில் தண்டிக்கப் படாததால் பெற்ற துணிச்சல்... இவற்றின் விளைவு, ஒரு மலர் கசக்கப்பட்டு விட்டது."**

ஆண்களில் பலர் பம்பாயில் வேலை பார்ப்பவர்கள். மற்றவர்கள் தங்களிடம் உள்ள துண்டு துக்காணி நிலங்களில் பயிர் செய்து பிழைக்கிறார்கள். அதிலும் பல இடையூறுகள். ஆடு மாடுகளை வயலில் மேய்ப்பது, வாத்துகளை நஞ்சையில் இறக்குவது... இப்படி அருகிலுள்ள குளத்தில் குத்தகைக்காரருக்குத் தெரியாமல் மீன் திருட - இரவில் வரும் விடலைகள், தலித் தெருப் பெண்களை அவ்வப்போது சீண்டுவதும் உண்டு. இடைஞ்சல் செய்பவர்களை ஏனென்று கேட்டால் அடியும் உதையும் நிச்சயம்.

இங்கே 'ஊமையர்' என்று அழைக்கப்படும் லட்சுமணனின் குடும்பம் மிகவும் வறியது. மனநிலை சரியில்லாத மகனால் எந்தப் பயனுமில்லாமல் மருமகள் கோமதியின் உழைப்பில் குடும்பம் ஓடுகிறது. சம்பவ நாளன்று இரவில் அந்தப் பகுதியில் சுற்றிக் கொண்டிந்த மாடக்கண்ணுத் தேவர் மகேஷ், டீக்கடை சேது பாண்டியன் மகன் கண்ணன், முருகன் மகன் சுரேஷ், கிருஷ்ணத் (தேவர்) மகன் முருகக் குட்டி ஆகிய நால்வரும் சிறுநீர் கழிக்க வெளியே வந்த சக்தி வடிவேலுவிடம் பேச்சுக் கொடுத்து, மனநிலை சரியில்லாதவரிடம் அவரது மனைவியைப் பற்றிப் பேசி வம்பிழுத்து ஆத்திரத்தைத் தூண்டியிருக்கிறார்கள்.

அவர் உளறியதைக் காரணம் காட்டி அவரை அடித்து கையில் அரிவாளில் கீறி குளத்திற்கு இழுத்துச் சென்று தண்ணீரில் முக்கி எடுத்திருக்கிறார்கள். பிறகு, வீட்டுக்கு இழுத்து வந்து அவரது மனைவி கோமதியைக் கூப்பிடச் சொல்லி மிரட்டியிருக்கிறார்கள். கணவரின் குரல் கேட்டுக் கதவைத் திறந்து வெளியில் வந்த கோமதியை வாயைப் பொத்தி



படிப்பகம்

www.padippakam.com

வாழைத் தோப்புக்கு இழுத்துச் சென்று விட்டார்கள்.

திகைத்து நின்ற வடிவேல், உறவினர் வீட்டுக் கதவுகளைத் தட்டி அழைத்திருக்கிறார். அவசரத்தை உணராமல் நிதானமாக வெளியே வந்த உறவுக்காரர்கள், பிறகு ஒன்று சேர்ந்து தேட ஆரம்பிப்பதற்கே தாமதமாகியிருக்கிறது. தேடுபவர்கள் தன்னை அழைக்கும் குரல் கேட்டாலும், வாழைத் தோப்பில் அரிவாள் முனையில் கிடந்த கோமதியால் பதில் குரல் கொடுக்க முடியாத நிலை. தங்கள் விருப்பத்தை நிறைவேற்றிக் கொண்டு இறுதியில், வெளியில் சொன்னால் கொன்று விடுவோம் என்று மிரட்டி விட்டு நால்வரும் தப்பித்து ஓடிவிட்டார்கள்.

உடைகளை அணிந்து கொண்டு வெளியில் வந்த கோமதி, உறவுக்காரர்களைக் கண்டதும் தனக்கு சாவதைத் தவிர வேறு வழியில்லை என்று அழ, எல்லோரும் அவரைத் தேற்றி விட்டு, பத்தமடை வழக்கறிஞர் கணேஷ் குமாருக்கு தகவல் கொடுத்தார்கள். உடனே அவர் ஒரு வேனுடன் வந்துவிட்டார். ''அந்தம்மாவைக் காவல் நிலையத்தில் புகார் செய்வது சம்பந்தமாக சம்மதிக்க வைக்கவே எனக்கு அரைமணி நேரம் ஆகிவிட்டது. பிறகு 2.30 மணிக்கு வேனில் போய் முன்னீர் பள்ளம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம். எஸ்.பி.யிடமும் டி.அய்.ஜி.யிடமும் தொலைபேசியில் பேசினேன். உடனே வந்துட்டாங்க.''

''நாலு மணிநேரத்தில் ரெண்டுபேர் கைது. தலைமறைவான மற்ற ரெண்டு பேர் ஒருவாரம் கழிச்சு சரண் அடைஞ்சிட்டாங்க. வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செஞ்சியிருக்காங்க. மருத்துவச்சான்று வந்ததும் இழப்பீட்டுத் தொகையை வழங்குவதாக மாவட்ட வருவாய் அதிகாரி சொல்லியிருக்காரு'' என்கிறார் வழக்கறிஞர் கணேஷ் குமார்.

கும்பலின் தலைவன் மகேஷுக்கு இதுவே பொழுது போக்கு. இவன் ஏற்கனவே இரண்டு பெண்களைக் கெடுத்தவன். செட்டியார் சாதிப் பெண்ணைக் கெடுத்தபோது, இவர்களது மிரட்டலுக்குப் பயந்து புகார் கொடுக்காமல் விட்டுவிட்டார்கள். இதனால் ஊக்கம் பெற்ற மகேஷ், ஒரு முஸ்லிம் பெண்மீது கை வைத்தான். இந்த முறை காவல் நிலையத்தில் வழக்கும் பதிவு செய்யப்பட்ட மகேஷ், பிணையில் வெளியே வந்த மறுநாள் கோமதிக்கு இது நிகழ்ந்திருக்கிறது.

நொந்திருக்கும் மனதின் புண்களைக் கிளற மனமில்லாமல், கோமதியைச் சந்திக்கிறோம். மருத்துவமனையிலிருந்து வந்தது முதல் யாரிடமும் பேசாமல் இருட்டுக்குள் படுத்துக் கிடக்கும் கோமதி, துண்டு துண்டான வார்த்தைகளால் நடந்ததை விவரிக்கிறார்.

''மணி 12.30 இருக்கும். சரவணன் அப்பா வெளிய படுத்திருக்கு. திடீர்னு கோமதி கோமதின்னு கூப்பிடுற சத்தம் கேட்டு முழிச்சிட்டேன். முதல்ல கதவத் தெறக்காமத்தான் என்னன்னு கேட்டேன். பதில் இல்லங்கவும் கதவத் தெறந்துக்கிட்டு வெளியே வந்தேன். சரவணன் அப்பா வேட்டி சட்டையெல்லாம் நனஞ்சிருக்கு. கையில ரத்தம். பக்கத்தில ஒருத்தன் நிக்கான். என்னன்னு கேக்கறதுக்குள்ளே வேற மூணு பேர் வந்து என்னப் புடிச்சி இழுத்தாங்க. முரண்டினேன். வாயப் பொத்தவும் கத்த முடியல. கல்லுலயும் முள்ளுலயும் தரதரன்னு இழுக்கானுவ...''

- கண்ணில் நீர்வழிய நடந்ததை அப்படியே சொல்கிறார். வாழைத் தோப்பின் வரப்பில் நான்கு மிருகங்களும் அவரைக் குதறியதை நடுங்கும் குரலில் சொல்கிறார். ''என்னால எந்திருச்சி நிக்க முடியலய்யா, சீலயக் கட்டவும் சீத்துவமில்லாமக் கிடந்தேன். பெறவு நவுண்டு நவுண்டு வந்தேன் எங்க ஆளுகளக் கண்டதும் எனக்குச் செத்துரணும்னு தான் இருந்திச்சி.''

அடுத்து இந்த வழக்கிலிருந்தும் ஜாமீனில் வெளிவரப்போகும் மகேஷ் கும்பலிடமிருந்து தமது பெண்களைக் காப்பாற்றிக் கொள்ள, தலித் மக்கள் ஊரைவிட்டு வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள்.

**"என்னால எந்திருச்சி நிக்க முடியலய்யா, சீலயக் கட்டவும் சீத்துவமில்லாமக் கிடந்தேன். பெறவு நவுண்டு நவுண்டு வந்தேன். எங்க ஆளுகளக் கண்டதும் எனக்குச் செத்துரணும்னு தான் இருந்திச்சி"**



மனநிலை சரியில்லாத கணவர் சக்திவேல்

கூலிவேலைக்குக்கூடப் போக முடியாமல் உடலும் மனமும் புண்ணாகிக் கிடக்கும் கோமதிக்கு, சாப்பாட்டுச் செலவுக்காக 'ஆதிதிராவிடர் மகாஜன சங்கம்' கொஞ்சம் நிதி வழங்கியிருக்கிறது. சம்பவத்தை கேள்விப்பட்டு மும்பை வாழ் இளைஞர்கள் சிலர் அனுப்பிய பணமும் உதவியிருக்கிறது.

புறப்படும் வேளையில் ஊர்ப் பெரியவர் ஒருவர் கேட்கிறார்: ''அவனுகளுக்குத் தண்டனை கெடச்சிருமா?'' என்ன பதில் சொல்வது? சாட்சியங்கள், தடயங்கள், மருத்துவச்சான்றுகள், விந்து பரிசோதனை, தெளிவான விசாரணைகள் எல்லாம் இருந்தாலும் - நமது நீதிமன்றங்களின் நடைமுறைகளையும், குற்றவாளிகளைப் பாதுகாப்பதையே தொழில் தர்மமாகக் கொண்டிருக்கும் கிரிமினல் வழக்கறிஞர்களையும், சாட்சிகளைக் கொல்லுவதாக மிரட்டும் ஆதிக்க சாதியினரின் அரிவாள்களையும் தாண்டியல்லவா வர வேண்டும் நீதி? ●



படிப்பகம்

www.padippakam.com



கிருத்துதாசு காந்தி

# "சாதிக் கலவரங்கள் இல்லையடி பாப்பா"

இந்நாட்டில் சாதி பலநூறுண்டு என்பதைச் சொல்வதில் யார்க்கும் நாப்பழுப்பதுமில்லை; நாக்கூசுவதுமில்லை. சாதிக்குள்ளேயே அடைகாத்து குஞ்சோ நஞ்சோ பொறிப் பதில் யார்க்கும் மனங் கூசுவதில்லை; மானுடம் கூனுவது மில்லை. சாதிகள் வேறுபட்டுள என்பது உண்மை. ஆனால், எங்கு அவை போரிட்டுக் கொண்டுள்ளன என்பதுதான் கேள்வி. அய்யரும் செட்டியும், முதலியும் கவுண்டரும், பிள்ளை யும் தேவரும், நாடாரும் வன்னியரும் என்றிவ்வாறாயும், பலப்பலவாயும் ஒருவருக்கொரு குலம் மணத்தில் கைசேர் வதில்லை; பிரிந்தே பொருந்துகிறார். கைசேராத, மெய்யி ணையாத இந்தச் சாதிகள், கை சேர்க்காத இந்தப் பிரிவினைச் சாதிகள் - ஒருவருக்கு ஒருவர் 'கைகலந்து' கேட்டிருக்கி றோமா? சுருக்கத் தெறித்தால், சாதிக் கலவரம் என்றொன்று இத்தமிழ் நாட்டில் நடந்ததுண்டா?

'இல்லை' என்பது பலருக்கு விதிர்ப்பான விடையாக இருக்கலாம். அண்மையில் கொடியங்குளத்துத் தொடங் கிய கொடுமை, தென்மாவட்டத் தீ, மேலவளவின் தலைப் பிளவு, கண்டதேவியில் (கை) படாவடம், ராமநாதபுரப் பாதகம் என்றிவையொத்தவை சாதிக்கலவரங்கள் இல்லையா என்று விதிர்த்தவர் கேட்கலாம். 'இல்லை' என்பதே மீட்டும் விதிர்த்தவர் விக்கவும் ஆன பதிலாம்.

மேற்சொன்ன சாதிசனம் இங்கு தமக்குள் மோதினவா? ரத்தம் சிந்தினவா? இல்லையே. பின் சிந்திய ரத்தம் யாரெ வரது? பாதிக்குமேல் பட்டியல் இனத்தவரது அல்லவா? மீதி மேற்சொன்ன சாதியரில் ஓரிருவரது அல்லவா? அதாவது பட்டியல் இனத்தவருக்கும் மேற்சொன்ன சாதிசனத்தவருள் சிலருக்கும் இடையே நடந்த கலவரமல்லவா? இதை சாதிக் கலவரம் என்று அழைப்பது எங்ஙனம்?

பட்டியல் இனத்தவர் சாதிக்குள் ளேயே இல்லை என்பதுதானே நால் வருண நூல்நயம்! சாதியே இல்லாத வன் மீது நடத்தப்படும் வன்முறைக் கல கம் எப்படி சாதிக் கலவரமாகும்? Scheduled Castes என்று ஆங்கிலத்தில் புறத்தார் இவருக்கு நாமமிட்டதால் மட் டுமே இவர் சாதியைத் தாங்கியவராகார். இந்து மதமும் இவர்தமை சாதிக்குள் இதுகாறும் சேர்க்கவில்லை. Scheduled Castes என்பது சாதிகள் அல்ல என்பதை உச்சநீதிமன்றமும் விளம்பி விட்டது.

பின் நடக்கும் கலவரம்தான் என்ன? முன்னும் சரி, இன்றும் சரி, நடந்தது, நடப்பது, நடக்கவுள்ளது யாவும் 'வன்கொடுமை'யின்பால் சேரும். பட்டியல் இனத்தவர் மீது யாதொரு பட்டியல் இனமல்லாத வரால் இழைக்கப்படும் குற்றங்கள்தாம் 'வன்கொடுமை' என்பதாகச் சட்ட நூலில் குறிக்கொள்ளப்பட்டுள்ளது.

வன்கொடுமை ஏன் நிகழ்கிறது? சில வடிவங்கள் சிலை ஆக்கப்படுவதாலா? சில பெயர்கள் ஒவ்வா கடுப் பாலா? சில மனிதர் அணி திரள்வதாலா? சில தலைவர் பொங்கித் திரிதலாலா? ஆம் என்பதும் சரி! இல்லை என் பதும் சரி! இவை எல்லாம் கலவரத்தைத் தூண்டுகின்றன, நெம்புகின்றன என்றவரை சரி. ஆனால், இவையே காரணி களாக இருந்து நிகழ்த்துகின்றன என்பது சரி இல்லை.

வன்கொடுமைகளுக்கு மூலகாரணம் ஒவ்வாமை. சில மனி தர்க்குச் சில மனிதர் ஒவ்வாமல் போவது. யாதொரு பகுத்தறி யும் பேதமுமின்றி எழும் ஒவ்வாமை. இந்த ஒவ்வாமை, நிற வேற்றுமையால் எழுவது அல்ல. உருவ வேற்றுமையாலும் அல்ல. வளமை வறுமை பேதத்தாலும் அல்ல. ஞான அஞ் ஞான விகற்பங்களாலும் அல்ல. இந்த ஒவ்வாமை நோய் ஒரே ஒரு காரணம் பற்றிவரும் மரணவேதனை. ஆம். அதுதான் பிறப்பொற்றிவரும் தீண்டாமை எனும் கேவலத் தீ.

இந்தத் தீண்டாமையைச் சுமத்தவும், ஓம்பவும், நிலை நாட்டவும், வலியுறுத்தவும் நிகழ்த்தப்படும் வன்முறைகளே கலவரங்களாக உருவெடுக்கின்றன. இதன் மறுதலையாக தீண்டாமையால் சிதைக்கப்பட்ட மானுடம் தன்னைச் செப்ப னிட்டுக் கொண்டு மானங்காக்கவும், மனித உரிமைகளை நாட் டிக் கொள்ளவும் உயிர்த்தெழும்போது, தமது ஆதிக்கத்தைக் குலைக்க வரும் செயலிது என்று பட்டியல் இனத்தவர் மீது - சாதிப் பித்தர்களும் தீண்டாமைக் கொடி யவர்களும் தொடுக்கும் அடக்குமுறை கள் 'கலவரமாக' உருவெடுக்கின்றன.

சாதிக்கலவரம் என்ற கண்ணோட் டத்தில் அணுகுவோர் அமைதியை நாட்ட எத்தனிக்கும்போது, இரு சாதி யினர்க்கும் இடையேயுள்ள பிணக்கு என்ன என்பதை முதலில் துலக்க வேண்டிவரும். இருவேறு சாதிகளுக் கிடையே என்ன பிணக்கு எழும் அல்லது இதுவரை எழுந்துள்ளது? எழுந்தவையெல்லாம் ஏதாவதொரு உரிமைபற்றி எழுந்தவைதாம். ஊர்த் திருவிழாவை யார் முன்னின்று நடத்

**தமிழகத்தில் நாம் இதுவரை கண்டதும், காண்பதும் வன்கொடுமைகள் அல்லாது வேறில்லை. சாதிச் சண்டைகள் இல்லை இவை. தீண்டாமைத் தினவின் அடியொற்றி நிகழ்த்தப்படும் வன்முறை வீச்சுகள்தாம் இவை.**



படிப்பகம்

www.padippakam.com

துவது? கோயில் மரியாதை வரிசையில் யார் முன்னிற்பது? பொதுச் சொத்துரிமையை யார் கொண்டாடிக் கொள்வது? என்று இவை போன்ற ஏதாவது உரிமைப் பிணக்கில்தான் வேறுபாடு எழுந்துள்ளது.

இங்கு அமைதியை நாட்டுவதற்கு முதலடிப்படை, யாருடையது வெல்லும் உரிமை என்று உறுதிப்படுத்துவதேயாம். சிக்கல் எழுமிடத்து நீதிமன்றங்கள் உறுதியாக்கம் செய்யும்வரை உள்ளதை உள்ளபடியே விடவோ, இரு சாராரது கோரிக்கைகளையும் நீதிமன்றத் தீர்ப்பு வரும்வரை தொங்கலில் வைக்கவோ நிர்வாகம் முடிவு செய்யலாம். இந்த இடைக்காலத்தில் இருசாராரையும் அமைதி காக்கும் வகை பிணைப்பும் செய்யலாம். அல்லது ஒரு சாராரது உரிமை உறுதியாகத் தெரியும்போது, அவர் பொருட்டு அடுத்தவரை கலகஞ்செய்யாமல் நிர்வாகத்தால் அடக்க முடியும். சிற்சில வேளைகளில் நிர்வாகமே சில உரிமைத் தீர்ப்புகளையும் வழங்கி அதன்வழி இருசாராரையும் நடக்கப் பணிக்கலாம்.

ஆனால், வன்கொடுமைக் கலவரங்களில் ஏது பிணக்கு? இரு சாராரில் யாருடைய உரிமை நாட்டப்பட வேண்டும் என்பதில்லை சிக்கல். அனைத்து மக்கள் போல் பட்டியல் இனத்தவர்க்கும் உரித்தான ஒரு மனித உரிமை, குடியுரிமை, மற்றும் குடியியல் உரிமைப் பாதுகாப்புச் சட்டத்தால் புரக்கப்பட்ட உரிமை தடுக்கப்படுகிறது; வன்முறையால் மறுக்கப்படுகிறது என்பதுதான் நடைபெறும் நிகழ்வு. பொதுக் கிணற்றில் பட்டியல் இனத்தவரும் நீர் சேந்தலாமா என்பதோ, கோயிலுக்குள் அவரும் செல்லலாமா என்பதோ, பட்டியல் இனத்தவர் தேர்வடம் பற்றலாமா என்பதோ நிர்வாகம் எழுப்ப வேண்டிய கேள்விகளே அல்ல.



ஓவியம் : யாக்கன்

இவை யாவும் தீர்வு செய்யப்பட்ட உரிமைகள் மட்டுமல்ல, எந்தவொரு அரசும், அரசைச் சார்ந்த நிர்வாகமும் நிர்வாகிகளும் அவரவர்க்கு நிலைநாட்டித் தர வேண்டிய நிர்வாகக் கடமைகளுமாகும். ஆகவே, தேர்வடம் பிடிக்க பட்டியல் இனத்தவர் மறுக்கப்பட்டும் தடுக்கப்பட்டும் - ஒரு வன்முறைச் சூழல் உருவாக்கப்படுகிறது என்றால், இதை ஒரு பொது அமைதி குலையும் சட்ட ஒழுங்கு நிகழ்வாக மட்டும் கருதுவதோ, சாதிக் கலகம் என்று பார்ப்பதோ, நிர்வாகமும், காவல் துறையும் எடுக்கும் சரியான நடவடிக்கைகளாகாது.

அமைதியை நிலைநாட்ட தடுப்பாணை இட்டு, இரு சாராரையும் வடம் இழுக்காமல் நிறுத்தி வைப்பதோ, குற்றம் இழைத்தாரோடு வடமிழுக்க வந்த பட்டியல் இனத்தவரையும் கைது செய்வதோ, பிணை செய்வதோ நடுவு நிலைகாத்த நடவடிக்கையுமாகாது. உரிமை மறுக்கப்பட்டோர்க்கு உரிமையை நாட்டிய செயலுமாகாது. மாறாக, பட்டியல் இனத்தவர் தேர்வடம் பிடிக்கலாகாது என்ற குற்றத்தை யார் நிறைவேற்றத் துணிந்தார்களோ, அவர்களது குற்றவெண்ணம் அரசுத் தரப்பாலேயே, நிர்வாகத்தரப்பினராலேயே நிறைவேற்றப்படுகிறது என்றேயாகும்.

தேர்வடத்தைப் பட்டியல் இனத்தவரும் சேர்த்திழுப்பதை நிறைவேற்றும் வகையாக, அதைத் தடுத்துக் கலகம் விளைவிக்க எத்தனிப்போரை நிர்வாகம் தடுப்பாணை செய்தும், பிணைத்தும், கைது செய்தும் முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுப்பதே உரிமையை நாட்டவல்ல - திறனும் திறலுமுடைய நிர்வாகத்தின் செயலாகும்.

மனித உரிமையை நிலைநாட்டும் சட்டங்களையும் உரிமை மறுப்புக் குற்றங்களைக் கடியும் சட்டங்களையும் நடைமுறைப்படுத்தும்போது, இவை கருணையின்பால் பிறர்க்கு அளித்தல் அல்லது கடமையின்பால் பிறர்க்குச் செய்தல் என்ற அடிப்படையில் மேற்கொள்ளப்படலாகாது. அவரவர்க்கு ஆகுதியாக (entitlement) இவை படைக்கப்பட வேண்டும். அப்போதுதான் இன்னொருவர் வடம்பிடிக்க இசைந்த கருணையினால் நமக்கு வந்த ஈவு என்று பட்டியல் இனத்தவர்க்குத் தாழ்வுணர்ச்சி வராதபடிக்கு, வடம்பிடிக்க இசைந்தோர்க்கு நாம் நன்றிக் கடன்பட வேண்டும் என்ற மனக்குறுகுறுப்பின்றி, தன்மானத்தோடு இறைவனுக்கு நேமக்கடன் முடிக்க இயலும்.

நாட்டுக் குடிமக்களின் சிந்தனையும் செயலும் என்னவாக இருக்க வேண்டும்? கீழோர், மேலோர் வேறுபாடு நாங்கள் பார்ப்பதில்லை என்ற வாய்ப்பேச்சினால் மட்டும் இன்னொருவர் நலம் காண முடியுமோ? எங்கள் வேலைக்காரர்களையும், பண்ணை அடிமைகளையும் அண்ணன் தம்பியாகவே பாவிக்கிறோம் என்ற வாயுரை மட்டும் நேசம் அளந்த நெஞ்சாமோ? ''அந்தக் காலத்திலிருந்து எங்கள் வீட்டில் சமையல் வேலை செய்வது தாழ்த்தப்பட்டவர்கள்தான்; நாங்கள் தாழ்த்தப்பட்டவர்களை ஒதுக்கியது கிடையாது'' என்று தீண்டாமை ஒழிப்பு மாநாட்டு மேடைகளில் தாம் சமத்துவம் படைத்தவர்களாக, படைப்பவர்களாகச் சிலர் புடைத்துக் கொள்கின்றனர்.

மடப்பள்ளியிலல்ல... நமது வரவேற்பறையில் - நமது 'சோபா'க்களில் நமக்கடுத்து எவரை அமர்த்துகிறோம் என்பதிலும், நமக்கு அடுத்த மனையில் யார் வீடு கட்டினார், யார் குடியேறினார் என்பதில் நமக்கேற்படும் ஒப்புரவிலும், நம் வீட்டிற்கு யாரை மருமகளாய், மருகனாய் வருவதைக் கருத்தாக்குகிறோம் என்பதிலும், மண்ணாய்ச் சமையும்போது ஆறடிக்கு அண்டைச் சவம் யாரடி? என்று நோக்காது புதைவதிலும்தான் சமத்துவம் காணலாகும். அவர்தாமே சமத்துவம் பேசலாகும். பிறரெல்லாம் சமத்தவராய்த்தாம் பீற்றலாகும்.

தீண்டாமையைக் கையாளாதவன் என்பாரும் தீண்டாமையை ஒழிப்பேனெனச் சூளுரைப்பாரும் செய்ய வேண்டுவன - நீவிராய் நச்சிய வண்ணமல்ல, எம்மனோரால் உவந்தவழி - இவையாம் : பட்டியல் இனத்தவர் வேறினத்த



படிப்பகம்

www.padippakam.com

வரைத் திருமணம் செய்கையில் அவரைப் போற்றி விழா எடுப்பது. பட்டியல் இனத்தவருடன் மணம் செய்ய மனம் உங்களுக்கு இல்லை எனினும், இத்தகு கலப்பு மணங்களை வெளிப்படையாகப் போற்றுதல்.

தூற்றாமலிருப்பதும், தடை செய்யாமல் இருப்பதுமே தீண்டாமை ஒழிப்புக்குத் துணை நிற்கும் செயலாகாதா என்றே பலர் துணிகிறார்கள். தூற்றுவதும், தடைசெய்வதும் சட்டப் படியான குற்றம் என்பதையும் அதுவே வன்கொடுமை என்பதையும் அவர்கள் உணரவல்லவரே. அவ்வாறு குற்றம் எத்தனிக்காதவர் ஒருவேளை தீண்டாமை இழைக்காத வராக - அவ்வேளைவரை - தீண்டாமை இழைக்காதவராக வேண்டுமானால் இருக்கலாம். ஆனால், அவ்வேளை வரையும் அவர் தீண்டாமையை ஒழித்தவராய் ஆகவில்லை என்பதே நிலைபெறும் உண்மையாகும்.

நமக்கு உயர்பதவியிலோ, நமக்குத் தலைமையேற்கவோ, நம்மைக் கட்டளையிடும் கோமகனாகவோ, நமக்கு நாட்டாமையாகவோ, அம்பலமாகவோ, மூப்பராகவோ பட்டியல் இனத்தவர் அமரும்போது - நமக்குள் மருகாது செம்மாந்து போதல்; ஏதம் பேசாமல் இறுமாப்புக் கொள்ளுதல்.

தனித் தொகுதிகளைத் தவிர்த்துப் பிற தொகுதிகளில் பட்டியல் இனத்தவரை நிறுத்துவதில்தான், கட்சிகள் பட்டியல் இனத்தவருக்கான உணர்வுகளை வெளிப்படுத்திக் காட்ட முடியும். ஒதுக்கீட்டுத் தொகுதிகளால் அம்பது ஆண்டுகளில் பட்டியல் இனத்தவர் நிகராயினர், உயர்ந்தே விட்டனர் என நீட்டிப் பேசுவோர், இந்த அம்பது ஆண்டுகளில் அனைத்துக் கட்சிகளும் கூட்டாக இதுவரை எத்தனைப் பொதுத் தொகுதிகளில் பட்டியல் இனத்தவரை நிறுத்தியுள்ளனர் என்ற கணக்கைக் காட்ட வல்லாராயின், நாடு பொதுமைச் சமுதாயம் ஆனமை பற்றிப் பேசலாம். பொதுமைக்கு இதுவரை ஏதும் செய்யவும் மனமில்லாதோர், பட்டியல் இனத்தாருக்கென்று இருக்கும் ஒதுக்கீட்டு நன்மையை மட்டும் ஒழிப்பதில் ஏன் ஓங்காரம் காட்டுகின்றனர்? இதுதான் தீண்டாமையின் அகங்காரமா?

பட்டியல் இனத்தவர்க்குச் சிறப்பான நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொள்வது, அரசியல் சட்ட உறுத்தக்கட்டளை என்பதை அதிகாரிகள் உணர வேண்டும். பட்டியல் இனத்தவர்க்கெனத் தனித்துச் செய்யும் செயல்கள் ஒரு சார்பு கோடியது என்றோ, பிறரை ஓரங்கட்டும் செயல் என்றோ கருதுவதையும், கூறுவதையும் கைவிட வேண்டும். இத்தகைய செயல்பாடுகள், தமது விரிந்த மனத்தால் உண்டான காருண்ய செயல்கள் என அறவாணிபம் பேசுவதை விட்டொழிக்க வேண்டும். இவையாவும் நும்கடமையாக நீவிர் செய்தே ஆகவேண்டிய கூறுகள் என்பதை உங்களுக்கு நீங்களே உணர்த்திக் கொள்வதோடு, ஊருக்கும் உரக்கச் சொல்லலாகும்.

அதிகாரிகளைப் பட்டியல் இனத்தவர் அண்டுவதுகூட இன்னும் அரிதாக உள்ள அதிகாரச் சூழ்நிலையையே சுதந்திரப் பிறப்பெடுத்த அம்பது ஆண்டுகளுக்குப் பின்னும் கையாண்டு வருகிறீர்கள் என்பதை நிர்வாகிகள் உணர்ந்து திருந்த வேண்டும். மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திலும், அரசுச் செயலர் அலுவலகத்திலும் ஒரு அரிசி ஆலை அதிபரால், ஒரு திரைப்பட கொட்டகையாளரால், அரிமா சங்க உறுப்பினராயுள்ள ஒரு நகைக் கடையாளரால், மதுக்கடை உரிமையாளரால் என்றின்னவகையினரால் - அவருக்கெதிரே சரிநிகராக அமர்ந்து பேசும் நிலை இன்றுள்ளது. ஆனால், பட்டியல் இனத்தவரை எத்தனை அதிகாரிகள் நிற்க வைத்தே பேசுகிறார்கள் என்பதை அதிகாரிகள் உணரவேண்டும். எத்தனை பேரை முதலில் பார்க்க விடுகிறார்கள் என்பதைச் சிந்திக்க வேண்டும்.

பட்டியல் இனத்தவரை இரவலராக அன்றி நுகர்வோராயும், உரிமை பகர்வோராயும் பார்க்கும் பக்குவம் அதிகாரிகளுக்கு வருங்காலமே பட்டியல் இனத்தவர்க்குப் புலர் காலம். புனர் வாழ்வு.

சிறுதொழில் வரம்பு மூன்று கோடி ரூபாய் என வரையறுக்கப்பட்டுள்ளது. நாட்டின் எந்தவொரு மூலையிலும் பட்டியல் இனத்தவர் 'சிறுதொழில்' தொடங்கவும் யாதொரு திட்டமும் இதுவரை வகுக்கப்படவில்லை என்பதே விதிர்க்க வைக்கும் உண்மையாகும். தனியொருவர் முதலீட்டுக்காக பல்லாயிரம் கோடி ரூபாய்கள் வழங்கவும், பல நூறுகோடி ரூபாய் மானியம் வழங்கவும் திட்டங்கள் நாடொறும் புதுப்புதுப் பாணியில் வந்து கொண்டிருக்க, சிறுதொழில் முதலீடு செய்யக்கூட பட்டியல் இனத்தவரை அருகதை இல்லாதவராய் ஆக்கி வைத்திருப்பது, நிர்வாகிகளின் நினைப்பொழிந்த செயலா, நீசச் செயலா எனப் பட்டியல் இனத்தவர் பொருமிக் கொண்டிருப்பதை அதிகாரிகள் இன்னும் புவிமறவாது செவிமறவாது செவியுணர வேண்டும்.

அரசு என்ற மேலோச்சிய திறல், தீண்டாமையைத் தீய்த்து - மறைவிடமில்லாமல் மாய்த்து - ஓரிடத்தும் ஒழியாது ஒய்த்து - சார்பிடமில்லாமல் சாய்த்து - வேறிடமில்லாமல் வீழ்த்தி, துளிர்க்க மாட்டாமல் தூர்த்து - ஆதியுடன் அந்தமாய் ஒழிக்க, ஒன்றே ஒன்றுதான் செய்ய வேண்டும். அதுவே சாதி ஒழிப்பு என்பது. சாதிமுறை உள்ளவரை தீண்டாமை உள்ளவரை மாற்ற முடியாது. மடிக்கவும் முடிக்கவும் முடியாது. சாதி ஒழிப்பைக் கைக்கொள்ளும் ஆற்றலும் அரசு என்ற அந்த விதந்து நிற்கும் அமைப்பிற்கே உண்டு. இதைக் கைக்கொள்ள அரசுகள் மருண்டு நிற்க நிற்க, பட்டியல் இனத்தவர் இருண்டு கொண்டே போவர். தீண்டாமையும் திரண்டு கொண்டே இருக்கும் என்பது நிச்சயம்.

**பட்டியல் இனத்தவர் புண்ணுக்கு மருந்து தடவினால் பக்கத்தில் உள்ளவன் வேட்டியில் கரைபடியும் என்று வாளா இருக்கும் வாலறிவனாய் அதிகாரிகள் பெருத்தென்ன? சிறுத்தென்ன? இருந்தென்ன? இறந்தென்ன?**



படிப்பகம்

www.padippakam.com

# தலித்துகளுக்கான ஆவணக் காப்பகம்

## தமிழக அரசின் வரவேற்கத்தக்க முடிவு

வேலூரில் புதிதாக அமைக்கப்படும் திருவள்ளுவர் பல்கலைக் கழகத்தில், தலித் மக்களுக்கு என ஆவணக் காப்பகம் அமைக்கப்படும் என்று ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் சொ. கருப்பசாமி, சட்டப் பேரவையில் அறிவித்துள்ளார். ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்குப் பதிலளித்துப் பேசியபோது, மேலும் சில வரவேற்கத்தக்க திட்டங்களை அவர் அறிவித்தார்.

அதன்படி, அயோத்திதாசப் பண்டிதர், ரெட்டமலை சீனிவாசன், எம்.சி. ராஜா மற்றும் பிற தலித் மேதைகளின் படைப்புகள், பல்வேறு வெளியீடுகள், இதழ்கள் போன்றவற்றைத் தொகுத்து நுண்படச் சுருள்கள் மற்றும் சி.டி.க்களில் பாதுகாப்பதற்காக ஓர் ஆவணக் காப்பகம் அமைக்கப்படும்.

தலித் மக்களின் கலை இலக்கியங்களை முன்னேற்றும் வகையில் ஆய்வு மய்யமும் நிகழ்கலைகளுக்குப் பயிற்சி மய்யமும் அமைக்கப்படும். தலித்துகளின் கலை வெளிப்பாட்டுக்காக சோழ மண்டலம் அல்லது படப்பையில் தனியாக கலைக் கிராமம் அமைக்கப்படும். அங்கு அவர்களின் ஓவியம் சிற்பம் படைக்கப்பட்டு, அவற்றைக் காட்சிக்கு வைக்கவும் ஏற்பாடு செய்யப்படும்.

தலித் மக்களின் படைப்புகளை வெளிக்கொணர்வதற்கென தனியாகப் பதிப்பகம் ஏற்படுத்தப்படும். திருவள்ளுவர் பல்கலைக் கழகத்தின் மூலம் இப்பணிகள் மேற்கொள்ளப்படும். தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் தலித் மற்றும் பழங்குடியின மக்களுக்கு நிலம் வழங்கப்பட்டு - அந்நிலத்தை அவர்களுக்குப் பயனுள்ளதாக்க 'தாட்கோ' மூலம் கடனுதவி வழங்கப்படும். ■


### பழங்குடியினர்களுக்குத் தனி தேசிய ஆணையம்

ஒரு கோடிக்கும் மேற்பட்ட பழங்குடியின மக்களின் நலன்களுக்காக நிரந்தரமான ஒரு தேசிய ஆணையம் விரைவில் அமைக்கப்படும்'' என்று மத்திய பழங்குடியினர் துறை அமைச்சர் ஜுயல் ஓரம் டெல்லியில் 29.4.2002 அன்று செய்தியாளர்களிடையே தெரிவித்தார்.

அவர் மேலும் சில தகவல்களைத் தெரிவித்தார்: பழங்குடியின மக்களுக்காக தனி தேசிய ஆணையம் அமைக்க, அரசியல் சட்டத்தில் திருத்தம் செய்யப்படும். இந்த மக்களின் நலன்களுக்காகவும் அவர்களுக்கு அதிகாரம் அளிக்கவும் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் தற்போது நல்ல பலனைத் தந்துள்ளன. பழங்குடியின மக்களின் நலனுக்காக மத்திய அரசால் ஒதுக்கப்படும் நிதிகளை, மாநில அரசுகள் வேறு காரணங்களுக்காகப் பயன்படுத்தும் நிலையே உள்ளது. இதைத் தடுக்க, நிதிகள் நேரடியாக மாவட்ட நிர்வாகத்தினரைச் சென்றடையவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ■


Heralding the importance of women in the dalit movement

**THE DALIT** brings out an exclusive issue on **Dalit Feminism**




- Anand Teltumbde analyzes the Bhopal document
- BC leaders 'Hijacking Periyar'- An outline
- K. R. Narayanan on the mistreatment of women
- Feminism's caste: Rekha Thakur on Women's Bill
- Mudnakudu Chinnaswamy's short story
- Eleanor Zelliot explores Chokhamela, a dalit saint
- 'Nobel to Naipaul' an essay on the perversion prince
- Pratima Pardeshi writes on Ambedkar's dalit feminism
- An interview with Udit Raj on Buddhist conversions
- Vithabai: Profiling the Tamasha Queen
- An investigation into 'encounters' in Warangal

SUBSCRIPTIONS: Annual Rs. 150 (institutions: Rs. 200) Life: Rs. 3,000 (institutions: Rs 5,000) DDs should be in the name of DALIT MEDIA NETWORK Addressed to : E-21, TNHB Anna Main Road, KK Nagar, Chennai - 600078 Ph:3716688/ Fax:4741188, email: ambedkar@md4.vsnl.net.in




படிப்பகம்

www.padippakam.com

திறனாய்வு

# ஈரம் கசியும் வேர்கள்

■ யாக்கன்

நிலத்தின் மாண்பினைப் புரிந்து கொண்ட நொடியிலிருந்துதான் மனித வரலாறு உருக்கொள்கிறது. நிலம் கொடுத்த நம்பிக்கையினால்தான், மனிதனுக்கு அறிவும் சிந்தனையும் ஆற்றலும் வாய்த்தது. காலப் பருவங்களையும் விண்ணின் ஆச்சர்யங்களையும் பண்பாட்டையும் அரசியலையும் ஆட்சியையும் மாட்சியையும் வீழ்ச்சியையும் மனிதனுக்குக் கற்றுக் கொடுத்தது நிலம்தான்.

வாழ்வையும் வாழ்வின் மீதான பற்றுதலையும் துயரங்களையும் துயரங்களிலிருந்து விடுதலையையும் தரும் மண்ணை - உடலாக, உயிர் மூச்சாகக் கொண்டு, தனது உழைப்பை உரமாக்கி அதை வளமாக்கிய மக்கள் திரளின் ஒரு துளியான அம்மாசியின் காலடி வேர்களின் வாழ்க்கைதான் 'தகப்பன் கொடி'. அறிவுக்குள் சிறைப்படாத படைப்புகளைத் தந்து கொண்டிருக்கும் எழுத்தாளர் அழகிய பெரியவனின் மூன்றாம் படைப்பு இது.

நவீனங்களால் நிலவுலகம் மூடி முழுகப்பட்டுவிட்ட பின்னரும் கூட, ஈரம் கசியும் வேர்கள் இன்னும் உயிரோடுதானிருக்கின்றன. உடலோடு உடலாக ஒட்டியிருந்த மண்ணிலிருந்து பிடுங்கியெறியப்பட்ட மனிதர்களின் தவிப்பு, மற்றவரின் சிந்தனைக்குச் சாத்தியமற்றது. ஆனால், அறுந்து தொங்கும் தகப்பன் கொடியைப் பற்றி அசைக்கும் அழகிய பெரியவனுக்கு அது சாத்தியப்பட்டிருக்கிறது. அவரது உயிரின் துவக்கமல்லவா அது.

வெள்ளைக்கார அரசாங்கம், நிலமில்லாத பறைக்குடிகளுக்கு நிலம் அளந்து விட்டபோது, வெள்ளைக்கடல் போல் புரண்டோடும் பாலாற்றங்கரையடியில் அம்மாசியின் அப்பன் நல்லான் வளைத்துப் போட்ட அஞ்சு காணி நிலத்தை ''டே அம்மாசி, ஒரு கெணத்த வெட்டிப்புடனும்டா, ஒங்காண்ட மேட்டுலேர்ந்து பாத்தான்னா பச்ச போத்துனாப்பிடி தெரியனும் நம்ம காணி'' என்று நெஞ்சு நிறைய கனவு கண்ட நல்லானின் கண்ணெதிரிலேயே கொலையைப் பிடுங்கியெறிந்தாற் போல் நிலத்தைப் பிடுங்கிக் கொள்கிறான் திருமல்லயன் ஆண்டை.

தாத்தனும் பூட்டனும் ரத்தம் நனைந்த உடலோடு பிறந்து விழுந்த மண்ணை, பொன்னாய் விளைந்தபோது கண்ணில் ஒற்றிக் கொண்ட மண்ணை தவியாய்த் தவிக்கவிட்டு, நெஞ்சு கொதிக்க பிள்ளை குட்டிகளுடன் தயங்கி நின்ற அப்பன் நல்லானை இழுத்துக் கொண்டு குடிபெயர்கிறான் அம்மாசி.

நாதம்பட்டியிலிருந்து சின்னச்சேரிக்கு வந்து குடியேறிய பிறகு, அம்மாசியின் குறி தப்புகிறது. அம்மாசியின் அப்பன் நல்லானுக்கோ இரவு நேர விடுகதைகள் விடுபடவில்லை. மண்ணைவிட்டு விலகிய பாவம். சாவின் இறுதி மூச்சிலும் தவியாய்த் தவிக்கிறான் நல்லான். ''உம் மண்ணுலேர்ந்து பிரிச்சதுக்கு மன்னிப்பு குடு'' கண்ணீர் நிரம்பிய கண்களுடன் அம்மாசி கெஞ்சுகிறான். பாலாற்றங்கரையிலிருந்து எடுத்துவந்த பிறந்த மண் கரைசல் தொண்டைக் குழிக்குள் இறங்கிய பிறகே உயிர் விடுகிறான் நல்லான். இந்த இடத்தில், வெளியேற மறுக்கும் நல்லானின் கடைசி மூச்சைப் போலவே நாவலும் ஆவேசம் கொண்டு போராட்டத்தைத் தொடங்குகிறது. எங்கோ எப்போதோ நடந்து மறைக்கப்பட்ட ஒரு உயிர்ப் போராட்டத்தை அதே வேதனைகளுடன் வெளிக்கொண்டுவந்திருக்கிறது இந்நாவல். எழுதப்படாத வேதனைகள் எத்தனையோ!

ஆனால், அப்பன் நல்லானின் சாவிற்குப் பிறகு, அம்மாசியின் வாழ்க்கை, பாறையில் வீசப்பட்ட தேங்காய் போல் சிதறுகிறது. மண்ணின் வாசத்தையே சுவாசித்து, மண்ணுக்காக ஏங்கி நிற்கும் அம்மாசியின் வாழ்க்கையும் பெரும்பாலான தலித் மக்களின் வாழ்க்கையும் ஒன்றுதான். நிலத்திற்கும் தலித்துகளுக்குமான தொப்புள் கொடி உறவு அறுந்தது எப்படி என்பதை நாவல் அறுதியிட்டுக் கூறுகிறது.




■ நூல் : தகப்பன் கொடி
■ ஆசிரியர் : அழகிய பெரியவன்
■ வெளியீடு : தமிழினி
342, டி.டி.கே. சாலை,
ராயப்பேட்டை, சென்னை - 14
■ பக்கங்கள் : 178 ■ விலை : 65

## நூலிலிருந்து...

*"நிலத்தை விட்டு ஒரு அடி கூட எடுத்து வைக்க கால்களுக்குத் திராணியில்லை. பூமிக்குள்ளிருந்து முளைக்கும் கைகள் அடியெடுக்கும் போதெல்லாம் பிடித்திழுக்கின்றன. அங்கேயே புதைந்து போய்விட விரும்புகிறது மனது. மண்துறைகளிலும் பொந்துகளிலும் வாழ்கின்றவை புண்ணியம் செய்தவை."*



படிப்பகம்

www.padippakam.com



அழகிய பெரியவன்

சின்னச் சேரியில் உழுவடை கொடுத்த நாதமுத்து நாய்க்கனுடன் சண்டை போட்டுவிட்டு, பெரியபட்டி தோல் பதனிடும் தொழிற்சாலையில் வேலை செய்யும் ரங்கசாமியின் நாடக கோஷ்டியில் சேருகிறான் அம்மாசி. பஞ்சபதி காலத்தில் வீட்டு முற்றத்தில் இட்லி அவித்து விற்று வீட்டைக் காப்பாற்றி வரும் மனைவி அபரஞ்சிக்கு உதவ நினைத்து தோல் தொழிற்சாலையில் வேலைக்குச் சேருகிறான். ரங்கசாமியுடன் சேர்ந்து, கோலாருக்கு வந்த அம்பேத்கரைப் போய் பார்த்து வருகிறான். தன்னோடு தொழிற்சாலையில், வேலை செய்யும் பூச்சியம்மாள் மீது காதல் கொள்கிறான். அவளோடு சேர்ந்து பக்கத்து ஊர் சினிமா கொட்டகைகளில், நாடகம் நடக்கும் இடங்களில் தூங்கி எழுகிறான். பொண்டாட்டி பிள்ளைகளைப் பற்றிய எண்ணம், கவலை இல்லாது கால்போன போக்கில் திரிகிறான். இழந்த மண்ணை மீட்கும் சிந்தனையே அவனுக்கு இல்லாமல் போகிறது.

குடிபெயர்ந்து வந்த நாளிலிருந்து பெற்றது பிறந்தது களின் ஆதரவில்லாமல், வீட்டுக்கும் காட்டுக்குமென இடைவிடாத உழைப்பால் பிள்ளைகளை வளர்த்து வந்த அபரஞ்சி, நிறைமாத கர்ப்பிணியாக இருக்கும்போது, பால்மாட்டுக்கு மோசி உடைத்து வர கரும்புக் காட்டுக்குப் போனபோது பாம்பு கடித்துச் சாகிறாள். தலித் பெண்களைப் பற்றிய பரிதாபச் சித்தரிப்பு 'தகப்பன் கொடி'யிலும் தொடர்கிறது.

விவசாயத்திலாகட்டும், வேசம் கட்டும் கூத்திலாகட்டும், தோலை அறுத்துச் சுத்தம் செய்யும் வேலையிலாகட்டும் கைகளில் துண்டைப் போட்டு மூடி விரல்களால் பேரம் பேசும் தரகுத் தொழிலாகட்டும், சேரிப் பெரியா பெருந்தலைகளின் பிரதியாக நின்று நாவலில் நிரவி நிற்கிறான் அம்மாசி. ஏற்ற இரக்கங்களுடன் மேல் கீழ் முறையில் சித்தரிக்கப்படும் அம்மாசியின் வாழ்க்கை, எதார்த்த வகைப்பட்டது. நாவலாசிரியரின் சமூகப் பார்வையும் கிராமத் தொழில்கள் மீதான அறிவும் அம்மாசியின் மூலம் துல்லியமாக வெளிப்படுகிறது. தான் கண்டு, கேட்டு, உணர்ந்து, அனுபவித்த வேதனைகளினூடாக கலப்படமற்ற அம்மாசியை படைத்துக் காட்டியிருக்கிறார் நாவலாசிரியர்.

சின்னச்சேரி கருவா சேட்டுவின் பாட்டி பெயரில் இருக்கும் டி.சி. நிலத்தை கள்ளப்பத்திரம் போட்டுக் கொண்ட மணியக்காரன் வெங்கடாசலத்திடமிருந்து நிலத்தை மீட்க, அம்மாசி மேற்கொள்ளும் போராட்டங்கள் வியக்க வைக்கின்றன. பறிபோன நிலங்களைப் பற்றிப்பேசும் முதல் தலித் நாவல் இதுவாகத்தானிருக்க வேண்டும். போலிசு, கேஸ், கோர்ட் என்று அலைந்து அடிபட்டு உதைபட்டு பஞ்சமி நிலத்தை மீட்கிறான் அம்மாசி. அதற்கு நன்றியாக கருவா சேட்டு கொடுத்த கொஞ்சம் நிலம் அம்மாசியின் கைக்கு வருகிறது. பழைய பெருமிதம் அம்மாசியின் நெஞ்சில் குடியேறுகிறது.

ஆனாலும் பலன் என்ன? அம்மாசியின் பிள்ளைகள் காட்டையனும், அர்ச்சுனனும் ஒன்றுக்கும் உதவாக்கரைகளாக, கையிலிருக்கும் நிலத்தைக் கூட, மராமத்துப் பார்க்க தெம்பற்றவர்களாகத் திரிகிறார்கள். அந்தக் கையகல நிலத்தைக்கூட பங்கு போடச் சொல்லி பஞ்சாயத்தில் பிராது கொடுக்கிறார்கள்.

சமூக/வாழ்க்கை அவலங்களால் சிதறுண்டு போகும் சக்தி, தலித்துகளுக்கு மட்டும் கடைசிவரை திரும்பக் கிடைப்பதில்லை - இலக்கியங்களிலும் கூட. நாதம்பட்டி ஆண்டை திருமல்லயனால் வீழ்த்தப்படும் அம்மாசி, ஆற்றுக்குடி மணியக்காரன் வெங்கடாசலத்திடமிருந்து டி.சி. நிலத்தை மீட்கிறான். அவன் பெற்ற மாபெரும் வெற்றி அது. ஆனாலும் பொறுப்பற்ற தனது மகன்களினால் மீண்டும் நொறுங்கி வீழ்கிறான். இலக்கியங்களில் இதுபோன்ற பரிதாப முடிவுகளைச் சந்திப்பது தலித்துகளுக்கு ஒன்றும் புதிதல்ல.

புதைக்கப்பட்ட உண்மைகளுடன், எம் மக்கள் நடத்திய மகத்தான மண்ணுரிமைப் போராட்டங்களைப் பதிவு செய்திருக்கக் கூடும் என்ற எண்ணத்தைத் தொடக்கத்தில் ஏற்படுத்தும் நாவல், நேருங்கூறு மற்ற நினைவுகளையும், கலப்படமற்ற மண்ணின் உணர்வுகளையும் பதிவு செய்ய முற்படுகையில் திசை மாறுகிறது. ஆயினும் ஊனிலும் உயிரிலும் கலந்து தொப்புள் கொடியாய்த் தொடரும் உறவை - உயிரின் தொடக்கத்தைத் தெள்ளத் தெளிவாகப் பதிவு செய்திருக்கிறார் அழகிய பெரியவன்.

> **“உடலோடு உடலாக ஒட்டியிருந்த மண்ணிலிருந்து பிடுங்கி எறியப் பட்ட மனிதர்களின் தவிப்பு, மற்றவரின் சிந்தனைக்குச் சாத்திய மற்றது. ஆனால், அறுந்து தொங்கும் தகப்பன் கொடியைப் பற்றியசைக்கும் அழகிய பெரியவனுக்கு அது சாத்தியப்பட்டிருக்கிறது.”**

தெளிவான இலக்கியப் புரிதலுடன், உணர்வுகளை வடிவங்களாக்கிக் காட்டுவதிலும், மொழியைத் தன் உணர்வுகளால் செழுமைப் படுத்துவதிலும் அழகிய பெரியவனின் அசாத்தியம், நாவல் நெடுகிலும் வெளிப்படுகிறது. ஆண்டைகளின் திட்டமிட்ட சதிச் செயல்களால் கொன்று புதைக்கப்பட்ட தன்முன்னோர்களின் காலடித் தடங்களை உயிர்ப்பித்து 'தகப்பன் கொடி'யாய் படரவிட்டிருக்கிறார்.

எம்முன்னோர்களின் காலடி பட்டுக் காய்த்துக் கிடக்கும் நிலங்களில் புதைந்துள்ள மண்ணுரிமைப் போராட்டங்களை வெளிக்கொணர்வதில் - முதலடி வைத்திருக்கிறது 'தகப்பன் கொடி'. இனிமேல்தான் பிரளயம் இருக்கிறது.



படிப்பகம்

www.padippakam.com

# குஜராத் இனப்படுகொலை 2002



''இந்துக்கள், பெண்களைத் துரத்தினார்கள். பிடித்த இடத்திலேயே நிர்வாணமாக்கி, நடுரோட்டிலேயே தப்பு செய்தார்கள். ஒருவர் பின் ஒருவராக மாறிமாறி தப்பு செய்தார்கள். விட்டு விடுங்கள் என்ற கதறலை அவர்கள் கண்டு கொள்ளவில்லை. வலியோடு சோர்வாய் கிடந்தவர்களை எரித்து விட்டு, வேறு பெண்களைத் தேடி ஓடினார்கள். இந்துக்கள் கெட்டவர்கள். அவர்கள் எங்களை வெறுக்கிறார்கள்''.

- 12 வயது சாய்ரா, உண்மை அறியும் குழுவினரிடம் மிரட்சியோடு சொன்ன வார்த்தைகள் இவை.

'அஸ்ஸலாமு அலைக்கும்' என்ற நட்புக் குரல்களில்லை. பிணக்குவியல்களில் உறவுகளை அடையாளம் தேடும் அவலம் தொடர்கிறது. எரிக்கப்பட்ட வீடுகள், உடைமைகள், நியாயம் கேட்டு மவுனவிரதம் இருக்கின்றன. தப்பித்த உயிர்கள், இப்போதும் வெட்டப்படுவோமோ, பலாத்காரம் செய்யப்படுவோமோ, எரிக்கப்படுவோமோ என்ற அச்சத்தில் நிமிடங்களை நகர்த்துகின்றன... ஜனநாயகம் செத்துவிட்ட குஜராத்தில், இரண்டு மாதங்களுக்கு மேலாக பிணங்கள் எரிந்து கொண்டிருக்கின்றன கேட்பாரற்று.

இந்து தீவிரவாதிகள் ஆட்சிக்கு வந்தால், ஜனநாயகத்தை கொன்றுவிடுவார்கள்; சிறுபான்மையினரையும், தலித் மக்களையும் வேரோடு வெட்டிச் சாய்ப்பார்கள்; கலவரங்களைத் தூண்டி 'இந்து' துதிபாடாதவர்களை காவு வாங்கி வெறியாறுவர்கள் என்ற வாதங்கள் - குஜராத் மண்ணில் நிஜமாகியிருக்கின்றன.

ரத்தமும் ஓலமும் வலியும் நிறைந்த கலவரங்கள் குஜராத்துக்கு புதிதல்ல. இஸ்லாமியர்கள் பெரும்பான்மையாக வசிக்கும் பூமி என்பதாலேயே இந்துத்துவவாதிகளுக்கு குஜராத் மேல் எப்போதும் எரிச்சல். கலவரங்களை உருவாக்கி உயிர்களை வேட்டையாடி அவ்வப்போது தாகத்தைத் தீர்த்துக் கொள்வது அவர்களின் வழக்கம். பாபர் மசூதி இடிக்கப்பட்டதற்கும், பல்லாயிரக்கணக்கானோர் கொலை செய்யப்பட்டதற்குமே இன்னும் நியாயம் கிடைக்கவில்லை. மசூதி இடிக்கப்பட்டு சிதறிய போது, இஸ்லாமியர்கள் ரத்தமும் சதையுமாக சரிந்தபோது - கட்டிப்பிடித்து, கைதட்டி, ஆர்ப்பரித்தவர்களை நாடாளுமன்றத்திற்கு அனுப்பியதன் விளைவைத் தான் ஊமையாகப் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

கோத்ரா ரயில் சம்பவம் எப்படி நடந்தது என்பதற்கான காரணம், இன்று வரை கண்டறியப்படவில்லை. கரசேவகர்கள் வந்த ரயில் எரிக்கப்பட்டபோது, முதல் அதிர்ச்சியைக் காட்டியவர்கள் இஸ்லாமியர்கள்தான். இந்துத்துவ







படிப்பகம்

www.padippakam.com



"அவர்களை வெட்டியெறியுங்கள் என்ற அகங்கார குரல் கேட்டது. உடல்களுக்குத் தீ வைத்தனர். என் மகள் செத்து விட்டாள். என்ன மனிதர்கள் இவர்கள்? இந்த பிசாசுகள் அன்பான என் மகளைத் துண்டு துண்டாகக் கிழித்து விட்டனர்."



வாதிகள் சும்மா இருக்க மாட்டார்கள் என்பது எல்லோரும் அறிந்ததே. கோத்ரா சம்பவம் நடந்த அன்றிரவே ராணுவத்தை வரவழைத்து விட்டதாக குஜராத் முதல்வர் சொல்லியிருக்கிறார். அரசாங்கப் புள்ளி விவரப்படி, இறந்த 899 பேரில் 127 பேர் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்துள்ளனர். கலவரக்காரர்களைக் கட்டுப்படுத்தி சட்டம் ஒழுங்கை காப்பாற்ற வேண்டிய ராணுவமும், காவல் துறையும் இந்துத்துவவாதிகளுக்குத் துணை போகிறது.

"காவலர்களாக இருந்தாலும், அவர்களுக்கும் மதம் பற்றிய 'சென்டிமென்ட்ஸ்' இருக்கின்றன. சட்டப்படி நடப்பதைவிட சென்டிமென்ட்ஸ்படி தான் அவர்கள் செயல்படுவார்கள்" என்று காவல்துறை ஆணையர் பிசி பாண்டயாவும், "காவல்துறையின் செயல்பாடு எனக்கு முழு திருப்தியளிக்கிறது. தீவிரவாதிகளை அரசு சரியாக கையாள்கிறது. வன்முறை பெருமளவில் நடந்தேறியதில் முழு மகிழ்ச்சி" என்று முதல்வர் நரேந்திர மோடியும், "அடிப்படையில் நான் ஒரு ஆர்.எஸ்.எஸ். உறுப்பினர்..., கோத்ரா சம்பவத்தின் தொடர்ச்சிதான் இந்தக் கலவரம். சாதுக்களின் செயல்கள் என்னை காயப்படுத்தவில்லை" என்று பிரதமர் வாஜ்பாயும் பகிரங்கமாக கோத்ராவிற்கு எதிர்வினையாக கலவரத்தை ஆதரித்துள்ளதைப் பார்த்தால் - இந்து வெறியர்கள் தங்கள் மதத்தைக் காக்கவும், வளர்க்கவும் எந்த அக்கிரமத்தையும் செய்யத் துணிவார்கள் என்பது உறுதியாகத் தெரிகிறது.

திடீரென பத்தாயிரம், இருபதாயிரம் என்று கலவரக்காரர்கள் எங்கிருந்து வருவார்கள்? இந்தக் கேள்வி எல்லோரையும் அரிக்கிறது. கலவரத்தை பல இடங்களில் நேரில் பார்த்த ஷரீப் கான், அகமதாபாத்தில் நடந்த பல கலவரங்களில் பார்த்தது போல அது சாதாரண கும்பலில்லை. கலவரத்திற்கு ஏவி விடுவதற்கென்றே உருவாக்கப்பட்ட கும்பல் அது. வழக்கமாக கலவரக்காரர்கள் குறைவாகவும் பொது மக்கள் அதிகம் பேரும் இருப்பார்கள். இந்த முறையோ கலவரக்காரர்கள் அதிக எண்ணிக்கையில் இருந்தார்கள். அவர்களின் செயல்கள் திட்டமிடப்பட்டதாகவும், ஒருவரையொருவர் இயக்குவதாகவும் கட்டுப்படுத்துவதாகவும் இருந்தது என்று கூறியுள்ளார்.

காவல் துறையின் பட்டவர்த்தனமான அலட்சியம், இந்துத்துவவாதிகள் சுதந்திரமாக செயல்படுவதற்கு, சுதந்திரமாக வாசல் திறந்துவிட்டிருக்கிறது. அகமதாபாத் - மோட்சா நெடுஞ்சாலை வழியாக ஆயிரக்கணக்கான கலவரக் கும்பல் நுழைவதற்கு காவல் துறை உதவியதாகக் கண்டறியப்பட்டுள்ளது. மோட்டார் சைக்கிள்களில் வந்த இவர்கள் முதலில் கிராமத்தினரையும் குடும்பத்தினரையும் மடக்கி, பின்னர் பலாத்காரம், வன்முறை, கொலை போன்ற செயல்களில் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த இரண்டு ஆண்டுகளாக சட்டம் ஒழுங்கை மீறிய ஆர்.எஸ்.எஸ்., பா.ஜ.க., வி.எச்.பி., பஜ்ரங்தள் ஆகிய அமைப்புகளின் செயல்களை காவல் துறை கண்டு கொள்ளவில்லை. தங்களை காப்பாற்றுமாறு நரோடாகோன், நரோடா பாட்டியா ஆகிய இடங்களிலிருந்து வந்த ஆயிரக்கணக்கான தொலைபேசி அழைப்புகளை காவல் துறை உதாசீனப்படுத்தியுள்ளது.

கலவரங்களின் போதெல்லாம் கூடுதல் வன்முறையை பெண்கள் அனுபவிக்கிறார்கள். "இப்படித்தான் நாங்கள் பலாத்தகாரம் செய்யப்பட்டோம் என்று பாதிக்கப்பட்ட எந்தப் பெண்ணும் வெளியில் சொல்ல முடியாது. அது கொடூரத்தின் உச்சகட்டம்" என்று உண்மை அறியப் போன பெண்கள் குழு அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

விசாரணையின் போது வெளியிடப்பட்ட 'டாக்குமெண்டரி' படத்தில் 'இஸ்லாமியர்களே இந்தியாவை விட்டு ஓடுங்கள்! இல்லையென்றால் உங்கள் அம்மாக்களை நாங்கள் பலாத்காரம் செய்வோம்" என்று சுவற்றில் எழுதப்பட்டிருந்த வாசகங்கள் அப்பட்டமாக குற்றவாளிகள் யார் என்று காட்டிக் கொடுக்கவில்லையா? என்றாலும் காவல் துறை அதன் வேலையை செய்யவில்லை. எங்களை ஏன் காப்பாற்ற மறுக்கிறீர்கள் என்ற கேள்விக்கு 'மேலிடத்து உத்தரவு வரவில்லை' என்பதே காவலர்களின் பதில்.


பெண்களும், பெண் குழந்தைகளும் பலாத்காரத்திற்கு பின்னர்தான் எரித்தும் வெட்டியும் கொலையாகியிருக்கின்றனர். பலாத்காரம் செய்தது போக, பிறப்புறுப்பில் இரும்புக் கம்பிகளையும், மரக்கட்டைகளையும் சொருகி வெறியைத் தீர்த்துக் கொண்டிருக்கிறது கலவரக்கும்பல். பஞ்ச்மகால் மாவட்டம் ரால் கிராமத்தைச் சேர்ந்த மெடினா முஸ்தபா இஸ்மாயில் ஷேக், தன் மகள் பலாத்காரம் செய்யப்பட்டதை விவரிக்கிறார் :

"என் மாமனார் பள்ளி ஆசிரியர். அவருக்கு இந்த ஊரையும் மண்ணையும் ரொம்ப பிடிக்கும். கலவரம் மூண்ட சூழலிலும் இந்த மண்ணை விட்டுப் போக அவருக்கு விருப்பமில்லை.



படிப்பகம்

www.padippakam.com



தனக்கு ஏதும் நேர்ந்துவிடாது என்று நம்பினார். நண்பர் வீட்டில் தங்கியிருந்த எங்களை மோப்பம் பிடித்து துரத்தினார்கள். புதர்களுக்குள் ஓடி ஒளிந்தோம். எங்களில் சிலரை கண்டு பிடித்து அடித்து நொறுக்கினர். உயிருக்காகப் போராடிய அவர்களின் அழுகை எனக்கு கேட்டது. என் மகள் ஷபானாவின் குரலும் சேர்ந்து ஒலிக்கவே புதரை விலக்கி என்ன நடக்கிறது என்பதை பார்த்தேன். அங்கே அவள் நிர்வாணமாக்கப்பட்டு மாறிமாறி பலாத்காரம் செய்யப்பட்டாள். அவர்களை வெட்டியெறியுங்கள் என்ற அகங்கார குரல் கேட்டது. இறுதியில் உடல்களுக்கு தீ வைத்தனர். என் மகள் செத்தே விட்டாள். இரண்டு மாதங்களுக்கு முன்தான் திருமணத்திற்கு நிச்சயம் செய்திருந்தோம். அவள் பூ மாதிரி. வாழ்க்கையில் ஒன்றுமே அவள் அனுபவிக்கவில்லை. ''என்ன மனிதர்கள் இவர்கள்? இந்த பிசாசுகள் அன்பான என் மகளைத் துண்டு துண்டாக கிழித்து விட்டார்கள்''. குஜராத் மறுவாழ்வு மய்யங்களில் இருக்கும் உயிர் தப்பிய எல்லோரிடமுமே இதே மாதிரியான குமுறல்கள் வெளிப்பட்டிருக்கிறது.

பாதிக்கப்பட்டவர்கள் உயிர் பிழைக்க மருத்துவமனைக்கு தூக்கிவரப்பட்டபோது, வாசலிலேயே தடுத்து நிறுத்தப்பட்டிருக்கிறார்கள். உயிரிழந்தவர்களை மூட்டையாகக் கட்டி எறிந்து அப்புறப்படுத்துவதில்தான் மருத்துவர்கள் குறியாக இருந்தனர் என்கிறார் ஷரிப்கான். ஆயிரமாண்டு வெறுப்பு இது. இப்படித்தான் வெளிப்படும் என்ற ஒரு மருத்துவர், உயிருக்குப் போராடுபவர்களைப் பார்த்து அகங்காரமாக கத்தும் போது அந்த உள்ளங்கள் எப்படித் துடித்திருக்கும்.

பத்திரிகைகள் பற்றி கேட்கவே வேண்டாம். இந்துத்துவவாதிகளுக்கான சரியான பிரச்சார ஆயுதமாக பெரும்பாலான பத்திரிகைகள் முழங்கி வருகின்றன. கலவரக்காரர்கள் கைகளில் இருந்த ஆயுதங்களுடன் நம் குழந்தைகளையும் பெண்களையும் தாக்கிவிட்டனர். நாம் பழி வாங்க வேண்டும். 'ரத்தத்திற்கு ரத்தம்' என்று கோத்ரா சம்பவத்தின் போது தலைப்புச் செய்தி வெளியிட்ட 'சந்தேஷ்' என்ற பத்திரிகையும் ஒன்று. இந்தப் பெண்கள் பலாத்காரம் செய்யப்பட்டதாகவும் தாக்கப்பட்டதாகவும் செய்திகளைத் திரித்து எழுதி நிலைமையை மோசமாக்கியிருக்கின்றன.

**இஸ்லாமியர்களே இந்தியாவை விட்டு ஓடுங்கள். இல்லை என்றால் உங்கள் அம்மாக்களை பலாத்காரம் செய்வோம் என்று சுவர்களில் எழுதப்பட்டிருந்த வாசகங்கள் குற்றவாளிகளை காட்டிக் கொடுக்கவில்லையா?**



அரசு, காவல் துறை, மருத்துவமனை, பத்திரிகை என எல்லாமே இஸ்லாமியர்களுக்கு எதிராகத் திரும்பியிருப்பதால், இன்றும் கலவரம் ஓய்ந்தபாடில்லை. நரேந்திர மோடி தார்மீகப் பொறுப்பேற்று பதவி விலகத் தயாராக இல்லை. நிலைமை நாளுக்கு நாள் மோசமாகப் போகிறதே என அரசைக் கலைத்துவிட்டு - குடியரசுத் தலைவர் ஆட்சியை அமல்படுத்த மத்திய அரசுக்கும் அக்கறையில்லை.

சிறுபான்மையினரை அழித்து நாடு முழுவதும் இந்துத்துவ கொடியேற்றுவதுதான் கரசேவகர்களின் திட்டம். இந்து தர்மம் அதைத்தானே வலியுறுத்துகிறது. சாம, தான, பேத, தண்ட என்றால் என்ன? பேசிப்பார், பொருள் கொடு, இல்லையா அச்சுறுத்து, அதுவுமில்லையா அடி, அழி. சாதிக் கொடுமை தாங்க முடியாமல் தலித் மக்கள் இஸ்லாத்தை தழுவுவது, இந்துத்துவவாதிகளுக்கு மிகப் பெரிய அடி. இந்து மதத்தின் சாதிக் கொடுமைகளுக்கு எதிராக இந்தியாவில் இருக்கும் மாற்று இஸ்லாம். அதனால் தான் இந்து வெறியர்களுக்கு கோபம் வருகிறது.

''சுதந்திர இந்தியாவில் இப்படியொரு சம்பவம் நடந்ததில்லை. இந்து சமுதாயம், கோத்ரா படுகொலைக்கு பழி வாங்கும். இந்துக்கள் வளையல் போட்டிருக்கவில்லை என்பதை இஸ்லாமியர்களுக்குப் புரியவைப்போம். இந்த சம்பவத்திற்கு மிக விரைவில், வெறித்தனமாக பதில் சொல்வோம்'' என்று விசுவ இந்து பரிஷத்தின் சர்வதேச பொதுச் செயலாளர் ப்ரவின் பொகாடியா கொக்கரித்ததின் காரணமும் இதுதான்.

*கலவரங்களுக்காக மட்டும் 'சாதி மறந்து' - எல்லா இந்துக்களையும் ஒரு குடையின் கீழ்க் கொண்டு வந்து காய் நகர்த்துவது, பார்ப்பனர்களின் நரித்தனம் என்று சாமானியர்களுக்கு புரியப் போகிறதா தெரியவில்லை.*

ரத்தம் சொட்டச் சொட்ட வெட்டிச் சாய்ப்பதும்,

உடல் கருக தீ வைப்பதும்,

கதறக் கதற பலாத்காரம் செய்வதும்.....

இந்து வெறியர்களுக்கு அருவெறுப்பாக இல்லை. இத்தனையும் செய்யும் இவர்களுக்கு இன்னொரு பெயரும் உண்டு!

அது 'சாதுக்கள்'!

எங்கு போய் முட்டிக் கொள்ள?

நன்றி : Communalism Combat



படிப்பகம்

# வந்துவிட்டது ஆபத்து !

இந்தியாவில் பல கோடிக்கணக்கான மக்கள், நாளொன்றுக்கு ஒரு வேளை உணவுகூட கிடைக்காமல் பட்டினியால் வாடும்போது, 1974இல், 'அமைதிக்கான' அணுகுண்டு ராஜஸ்தான் மாநிலம் பொக்ரானில் வெடிக்கப்பட்டது. அப்பொழுது இந்த அணுகுண்டுக்கான மூலப்பொருள், இந்தியாவில் இயங்கிக் கொண்டிருந்த அணுமின் நிலையங்களில் இருந்துதான் பெறப்பட்டது. ஆனால், அரசு இதை மறுத்தது. அதற்குப் பிறகு, 1998இல் 'சுதேசி' அணுகுண்டு, பா.ஜ.க. அரசால் பொக்ரானில் வெடிக்கப்பட்டது.

இந்தியாவில் அணுமின் நிலையங்கள் இயங்குவது, அணுவில் இருந்து மின் சக்தி பெறுவதற்காக அல்ல; அதிலிருந்து கிடைக்கும் யுரேனியத்தில் அணுகுண்டு செய்வதற்காகவே. இது உலகறிந்த ரகசியமாகும். அணு உலைகள் அழிவுக்காகவே பயன்படுத்தப்படுகின்றன என்ற கருத்து வலுப்பெற்று வருவதால், உலகளவில் மக்கள் இதை எதிர்க்கத் தொடங்கியுள்ளனர்.

பல நாடுகளில், அணுமின் நிலையங்கள் மூடப்பட்டு வருகின்றன. ஆனால், கூடங்குளத்தில் அணுமின் நிலையம் நிறுவ மய்ய அரசு முயற்சித்து வருகிறது. ஒவ்வொரு அணுமின் நிலையங்களிலும் விபத்துகள் ஏற்படும்போது, ஒவ்வொரு விபத்தும் புதுவிதமானது என அணுவியல் 'அறிஞர்கள்' கூறிவருகின்றனர். ஆனால், அதில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எவ்வித இழப்பீடும் வழங்கப்படுவதில்லை.

கூடங்குளம் அணுமின் நிலையம் கட்டுவதால், அதில் தமிழகத்திற்கு எத்தகைய ஆபத்துகள் ஏற்பட உள்ளன என்பதை மருத்துவர் ரா. ரமேஷ் இந்நூலில் தகுந்த ஆதாரங்களோடு கூறியுள்ளார். குறிப்பாக கூடங்குளம், நில நடுக்கம் ஏற்படக்கூடிய பகுதியில் அமை துள்ளது குறித்தும், ஏற்கனவே திருநெல்வேலி மாவட்டத்தில் உருகிய பாறைக் குழம்பு வெடித்து மேலெழும்பியுள்ளது குறித்தும் இந்நூலில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

இந்நூலில், அடுக்கடுக்கான ஆதாரங்களோடு நிலவியல் அறிஞர்களின் அறிக்கைகள், தொகுப்பாகக் கொடுக்கப்பட்டுள்ளன. தமிழில் இதுபோன்ற ஆய்வறிக்கைகள் கொண்ட நூல் இதுவேயாகும். இந்நூலில் உள்ள வரைபடங்கள் இந்நூலுக்குப் பெருமை சேர்க்கின்றன.




நூல்: கூடங்குளம் அணுமின் நிலையமும் தென்தமிழ் நாட்டின் பூகம்பவியலும், • ஆசிரியர் : டாக்டர் ரா. ரமேஷ் வெளியீடு : Docotors for Safer Environment 267, ஆசிரியர் காலனி, கணுவாய், கோவை -108 பக்கங்கள் : 82 • விலை : ரூ. 30

குறைந்த விலையில் வெளியிடப்பட்டுள்ள இந்நூல், அணு மின் நிலையத்திற்கு எதிரான போராட்டத்தில் ஈடுபட்டுள்ள ஆர்வலர்களுக்கு ஓர் ஆயுதமாகத் திகழும் என்பதில் மிகையில்லை.

மருத்துவர் ரமேஷ், அணுமின் நிலையத்திற்கு எதிரான போராட்டத்தை நடத்தி வருகிறார். அவர் வெளியிடும் 'எதிரொலி' எனும் பத்திரிகை மூலம் அணுமின் நிலைய ஆபத்து பற்றிய கட்டுரைகளைத் தொடர்ந்து பதிவு செய்து வருகிறார்.

மக்கள் நலனில் உண்மையான அக்கறையுள்ளவர்கள், கூடங்குளம் அணுமின் நிலையம் காலூன்றுவதற்கு எதிரான போராட்டத்தை நடத்த முன்வர வேண்டும்.

**- பூவுலகின் நண்பர்கள்**

---

- நூல்: ஆதிதிராவிடர் நலப்பள்ளிகள் மூடப்படுமா?
  ஆசிரியர் : ரவிக்குமார் வெளியீடு : 'தலித்', 28, வீரபத்திரசாமி கோயில் தெரு, லாஸ்பேட்டை, புதுவை - 605 008
  பக்கங்கள் : 32 • விலை : ரூ. 5
- நூல்: பூனா ஒப்பந்தம் ஆசிரியர் : டாக்டர் பி.ஆர். அம்பேத்கர்
  தமிழாக்கம் : அ. ஜெய்சன், வெளியீடு : அன்னை ரமாபாய் அம்பேத்கர் பதிப்பகம், 43/214, கிருஷ்ணா நகர் பெரியகுப்பம், திருவள்ளூர் - 602 001
  பக்கங்கள் : 192 • விலை : ரூ. 60
- நூல்: மனிதனாய் இரு ஆசிரியர் : கு. தென்னவன்
  வெளியீடு : ஏகவள்ளி பதிப்பகம், 40, கல்யாண மேஸ்திரி தோட்டம், 13ஆவது தெரு, சென்னை - 12
  பக்கங்கள் : 96 • விலை : ரூ. 30
- நூல்: அம்பேத்கர் காவியம் ஆசிரியர் : சி.ந. சந்திரசேகரன்
  வெளியீடு : தமிழ்ச் சுற்றம், 46, 2 ஆவது தெரு காமராச நகர், ஆவடி, சென்னை - 71
  பக்கங்கள் : 270 • விலை : ரூ. 60










www.padippakam.com



# உங்கள் எதிரி யாரென்று உணருங்கள்

## மால்கம் எக்ஸ் : ஒரு போராளியின் வரலாறு - 11

■ ரவிக்குமார்

ஆர்சன் வெல்ஸ் 1930களில் ஒரு வானொலி நிகழ்ச்சியைக் கொடுத்தார். வேற்று கிரகத்திலிருந்து அமெரிக்கா மீது படையெடுத்து வருவதாகச் சொன்ன அந்த நிகழ்ச்சியை நம்பி அமெரிக்கர்கள் பயந்து நடுங்கினார்கள். அதைப்போல 'வெறுப்பு உற்பத்தி செய்த வெறுப்பு' நிகழ்ச்சி அமெரிக்காவை அதிர வைத்தது.

கறுப்பர்கள் தங்களது கருத்துகளை ஏற்காவிட்டால், வெள்ளையர்கள் திகைத்துப் போய்விடுவார்கள். பாதிக்கப்பட்ட, நசுக்கப்பட்ட கறுப்பின மக்கள் தங்கள் எஜமானர்களிடம் அய்யா அய்யா என்று கையேந்தி நிற்கும் வரை வெள்ளையர்களுக்கு ஒரு பிரச்சனையும் இல்லை. ஆனால், நிலைமை மாறி விட்டது. அதை வெள்ளையர்களால் தாங்க முடியவில்லை.

அவர்களது பத்திரிகைகள் அலறத் தொடங்கின. 'இனங்களுக்கு இடையிலான நல்லுறவைக் கெடுக்கிறார்கள்', 'வெறுப்பை போதிக்கிறார்கள்', 'பிரிவினைவாதிகள்', 'இனவெறியர்கள்' இப்படிப் பலவாறாக தலைப்பிடப்பட்டு, ஏராளமான செய்திகள் அந்தப் பத்திரிகைகளின் மை உலர்வதற்கு முன்பே வாரப் பத்திரிகைகள் எழுத ஆரம்பித்தன. 'கறுப்பின வெறியர்கள்', 'கறுப்பு ப்பாசிஸ்டுகள்' மனித குல வரலாற்றில் மிகப் பெரும் ஆபத்து என அந்தத் தொலைக்காட்சி நிகழ்ச்சி வர்ணிக்கப்பட்டது.

வெள்ளையர்கள் தங்களது அடிமைகளில் சிலருக்கு, அதிகமாக எலும்புத் துண்டுகளை வீசி தங்களது விசுவாசிகளாக வைத்திருந்தார்கள். வெள்ளையர்கள் விரல் நீட்டும் பக்கமெல்லாம் தாவிப் பாயத் தயாராக இருந்தார்கள் அந்த விசுவாசிகள். இப்போதும் அவர்கள் களமிறக்கப்பட்டனர். 'கறுப்பின மக்களின் பிரதிநிதிகளல்ல இந்த முஸ்லிம்கள்' என்பதுதான் முதலில் வந்த தாக்குதல். ''இனவாதப் போக்கில் சற்று முன்னேற்றமும் மாற்றமும் தெரிகிற நேரத்தில் இவர்கள் அதைக் கெடுக்கிறார்கள்'' என அந்த விசுவாசிகள் கூச்சலிட்டனர்.

'விசுவாசிகள்' பேசியதற்கு முஸ்லிம் தரப்பு என்ன பதில் கூறுகிறதெனக் கேட்டு மால்கமின் தொலைபேசி அலறத் தொடங்கி விட்டது. ஒரு நாளில் சுமார் அய்ந்து மணி நேரம் தொலைபேசிக்கே சரியாகப் போனது. வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகைகள் எல்லோரும் கேள்விகளால் குதறியெடுத்து விட்டார்கள். மால்கம் எல்லாவற்றையும் குறிப்பெடுத்துக் கொண்டு எலிஜா முகம்மதுவிடம் தொலைபேசியில் படித்துக் காட்டி விளக்கம் பெற்று அதன் பின்பே பதில் கூறினார்.

''திரு. மால்கம் எக்ஸ் அவர்களே, எதற்காக நீங்கள் வெறுப்பை போதிக்கிறீர்கள்?'' இந்தக் கேள்வி கேட்கப்பட்டதும் மால்கமுக்கு கொதிப்பு கூடிவிடும். தொலைபேசியில் நெருப்பைத் துப்புவார் மால்கம். ''வெள்ளை ஆதிக்



படிப்பகம்

www.padippakam.com

கம் என்ற குற்றத்தைச் செய்தவன் வெள்ளையன். கறுப்பின மக்களை வெறுப்பை வளர்ப்பவர்கள் எனக் குற்றம் சாட்டுவதன் மூலம் தன்னுடைய குற்றத்தை மறைத்துக் கொள்ள முடியாது'' என மால்கம் பதிலளித்தார்.

''வெள்ளையர்களோடு கலந்து வாழ விரும்பியதால், எண்ணற்ற கறுப்பர்கள் கொல்லப்பட்டார்கள். ஆனால், எலிஜா முகம்மது கறுப்பர்கள் தனியே பிரிந்துவிட வேண்டும் எனப் பேசினால் - வெறுப்பை போதிப்பதாகவும், பிரிவினையைத் தூண்டுவதாகவும் குற்றம் சாட்டுகிறார்கள். அதுதான் வெள்ளையர்களின் மனப்பாங்கு.

'கறுப்பர்களைப் பார்த்து' எங்களை நீங்கள் வெறுக்கிறீர்களா? எனக் கேட்பது, கற்பழிக்கப்பட்ட பெண்ணிடம் 'என்னை வெறுக்கிறாயா?' என கற்பழித்தவனே கேட்பது போல இருக்கிறது'' என்று பதில் சொன்னார் மால்கம்.

''மால்கம், கறுப்பர்களில் எவ்வளவு முஸ்லிம்கள் இருக்கிறார்கள்? நூறு பேர்தான் இருப்பீர்கள் என சொன்னார்களே?'' என மால்கமிடம் கேட்டார் ஒரு பத்திரிகையாளர். ''நாங்கள் எத்தனைபேர் இருக்கிறோம் என உங்களுக்குத் தகவல் தந்தவர்களுக்கு எங்களைப் பற்றித் தெரியாது. தெரிந்தவர்களோ உங்களுக்கு அதைச் சொல்லவே மாட்டார்கள்'' என்றார் மால்கம்.

மால்கமிடம் பேசிய வெள்ளையினப் பத்திரிகையாளர்களின் ஆத்திரமான குரல், மால்கமின் குரலின் முன் அமுங்கிப்போனது. மால்கம் வரலாற்றை நோக்கி அவர்களை அழைத்துச் சென்றால், அவர்களோ அதன் வெளிச்சத்தில் கண்கள் கூசி மால்கமை நிகழ்காலத்துக்கு இழுத்து வருவதிலேயே குறியாய் இருந்தார்கள். அவர்கள் ஆபிரகாம் லிங்கனைப் பற்றியும் அவர் அடிமைகளை விடுவித்தது பற்றியும் மால்கமுக்கு வகுப்பெடுக்கத் தொடங்கியபோது, மால்கம், லிங்கன் கறுப்பர்களுக்கு எதிராகப் பேசியவற்றை எடுத்துக் காட்டினார்.

பொறுமையிழந்த பத்திரிகையாளர்களில் ஒருத்தர் கோபம் பொங்க மால்கமிடம் கேட்டார் : ''அப்படியானால் வெள்ளையர்களில் கறுப்பர்களுக்கு உதவி செய்தவர் ஒருத்தர் கூட இல்லையா?'' ''இருக்கிறார்கள் இரண்டுபேர். ஒருத்தர் ஹிட்லர். இன்னொருத்தர் ஸ்டாலின்'' என பதில் சொன்னார் மால்கம்.

மால்கம் சொன்னவற்றைப் பத்திரிகைகள் திரித்து வெளியிட்டன. எதிரான அர்த்தம் தொனிக்கும் விதமாக எழுதின. ஆனாலும் மால்கம் அந்தப் பத்திரிகைகள் மீது ஆத்திரப்படவில்லை. வெள்ளையர்களின் விசுவாசிகளாயிருந்த கறுப்பர்கள் மீதுதான் அவருக்குக் கோபம். எலிஜா முகம்மது மால்கமைக் கட்டுப்படுத்தினார். கறுப்பர்களிடையே பிளவை உண்டாக்கி அவர்களை ஒருவரோடு ஒருவர் மோதச் செய்வது, வெள்ளையின வெறியர்களின் தந்திரங்களில் ஒன்று. இதற்கு பலியானதால்தான் கறுப்பின மக்களிடையே ஒன்றுமையை ஏற்படுத்த முடியவில்லை'' என எலிஜா முகம்மது மால்கமிடம் கூறினார்.

ஆனால், முகம்மதுவும் சகித்துக் கொள்ள முடியாத நிலை வந்தபோது 'வெள்ளை விசுவாசிகளுக்கு' பதில் சொல்லும் பணியை மால்கமுக்கு கொடுத்தார். மால்கம் கூறிய பதில்களுக்கும் விளக்கங்களுக்கும் முகம் கொடுக்க முடியாத அந்த 'விசுவாசிகள்' - தாங்கள் பின்வாங்கிக் கொண்டு தமது நிறுவனங்களை மால்கமுக்கு எதிராக ஏவினார்கள்.

**உங்களது மதம் எதுவாக இருந்தாலும் சரி அல்லது உங்களுக்கு மத நம்பிக்கையே இல்லாவிட்டாலும் சரி, நம் எல்லோரையும் இணைக்கிற ஒன்று உள்ளது. நாம் எல்லோரும் கறுப்பினத்தவர் என்பதுதான் அது.**



மால்கம் எக்சின் உரையை ஆவலுடன் கேட்கும் மக்கள்

''வெள்ளைத் தலைகளைக் கொண்ட கறுப்பு உடல்கள்'' என அவர்களை விமர்சித்தார் மால்கம். கறுப்பர்கள் பேசுவது போலத்தான் தெரியும். ஆனால், அவர்களை திரைக்குப் பின்னாலிருந்து இயக்கிக் கொண்டிருப்பவர்கள் வெள்ளையர்கள்தான் என மால்கம் விளக்கினார். 'டைம்', 'நியூஸ் வீக்' போன்ற பத்திரிகைகள் உட்பட தொடர்ந்து நேஷன் ஆஃப் இஸ்லாம் பற்றி எல்லா பத்திரிகைகளும் செய்திகளை வெளியிட்டன.

மால்கம் வானொலியிலோ, தொலைக்காட்சியிலோ விவாதங்களில் கலந்து கொண்டு அனுபவம் பெற்றவரல்ல. சிறையிலிருந்தபோது அங்கே இப்படியான விவாதங்கள் நடக்கும். அதில் தவறாமல் பங்கு பெறும் மால்கம், எதிராளியின் பலவீனமான இடம் எதுஎன்பதை பேச்சின் போக்கிலேயே கண்டுபிடித்து விடுவார். அதைப் பிடித்துக் கொண்டு பேசி எதிராளியை கவிழ்த்து விடுவார்.

வானொலியில் இப்படியான விவாதங்களை எப்படி நடத்துகிறார்கள் என்பதைப் பார்க்க மால்கமுக்கு ஆர்வம் துடித்தது. அவராகவே வானொலி நிலையங்களுக்கு, தொலைக்காட்சி நிலையங்களுக்குச் சென்று வாய்ப்பு கேட்டார். உடனே வாய்ப்பு கிடைத்தது. அதில் கலந்துகொண்டதால் 'வெள்ளை விசுவாசிகள்' ஒற்றுமைக்கு எதிரானவர் என மால்கம் மீது அவதூறு கிளப்பினார்கள்.

தெளிவான புத்தி கொண்ட கறுப்பனோ, வெள்ளையனோ, இந்த ஒருங்கிணைப்பை விரும்பவில்லை. வெள்ளையர்கள் தமக்கு நியாயம் வழங்குவார்கள் என ஒரு கறுப்பனும் நம்பமாட்டான். ''அமெரிக்காவிலுள்ள கறுப்பினத் தவருக்கு ஒரே விடிவு'' வெள்ளையர்களிடமிருந்து முற்றிலுமாகத் துண்டித்துக் கொள்வதுதான்'' என எலிஜா முகம்மது பேசினார்.

வானொலி நிகழ்ச்சிகளில் ஒரு தந்திரத்தை மால்கம் கையாண்டார். நிறுத்தாமல் தான் சொல்ல வந்த விஷயங்களை சொல்லி முடித்ததன் பின்பே கேள்வி கேட்க அனுமதித்தார். அந்த 'டெக்னிக்' நன்றாகவே வேலை செய்தது.

பிரிவினை குறித்து மால்கம் பேசியதைக் கேட்ட 'வெள்ளை விசுவாசிகள்' பெரும் கூப்பாடு போட்டனர். முஸ்லிம்கள் கூறுவது,



படிப்பகம்

www.padippakam.com

வெள்ளை நிறவெறியர்களின் பேச்சை ஒத்துள்ளது எனக் கூச்சலிட்டனர். ஆனால் அதை மறுத்த மால்கம், ''நாங்கள் இன ஒதுக்கலை வேறு எவரையும்விட அதிகமாக எதிர்க்கிறோம். வெள்ளை நிறவெறியர்கள் கூறுவதும் நாங்கள் சொல்வதும் ஒன்றல்ல. உங்களது வாழ்வும், சுதந்திரமும் மற்றவர்களால் கட்டுப்படுத்தப்படும்போதுதான் - இன ஒதுக்கல் சாத்தியமாகிறது. ஒதுக்குதல் என்பதே கட்டுப்படுத்துதல்தான்.

சமூகத்தின் கீழான நிலையில் உள்ளவர்கள் மீது மேலான நிலையில் உள்ளவர்கள் திணிக்கும் ஒரு விஷயம் தான் இன ஒதுக்கல். ஆனால், பிரிவினையோதானே விரும்பிச் செய்வது. அது, சமமான இருவருக்கிடையே தான் சாத்தியமாகும். அமெரிக்காவிலுள்ள கறுப்பின மக்கள் வெள்ளையர்களை சார்ந்திருக்கும் வரை அவர்களிடம் வேலை கேட்டு, உணவு கேட்டு, உடைகள் கேட்டு, வீடு கேட்டு கெஞ்சிக் கொண்டு இருக்கும் வரை அவர்களது வாழ்க்கை வெள்ளையர்களால் கட்டுப்படுத்தப்பட்டே இருக்கும்.''

மால்கம் இப்படிப் பேசும்போதெல்லாம், ''வன்முறையைத் தூண்டுவதாக'' குற்றம் சாட்டப்பட்டார். ''அமெரிக்காவில் கிறித்துவ மதம் உண்டாக்கியுள்ள மிகப்பெரும் அதிசயம், வெள்ளையர்களால் கொடுமைப்படுத்தப்படும் கறுப்பர்கள், ஒருபோதும் எதிர்த்துப் போராடாமல் இருப்பதுதான். அவர்கள் எதிர்த்துக் குரல் கொடுக்காதபடி அத்தனை தார்மீகத் தடைகளையும் கிறித்துவ மதம் ஏற்படுத்தியுள்ளது.

ஒரு கன்னத்தில் அடித்தால் மறு கன்னத்தைக் காட்டு என்பதையும், செத்ததற்குப் பிறகு சொர்க்கத்துக்குப் போகலாம் என்பதையும் கறுப்பின மக்கள் நம்புகின்றனர். இப்போதும் அவர்கள் பொறுமையோடு இருக்கிறார்களே அதுதான் மிகப்பெரும் அதிசயம்'' என்று பேசினார் மால்கம்.

நேஷன் ஆஃப் இஸ்லாம் சார்பில் பல்வேறு கண்டனப் பேரணிகள் நடத்தப்பட்டுக் கொண்டிருந்த நேரத்தில் தான், 'வெறுப்பு உற்பத்தி செய்த வெறுப்பு' நிகழ்ச்சியும் எரிக் லிங்கன் எழுதிய நூலும் வெளியாயின. 'அமெரிக்காவில் உள்ள கறுப்பு முஸ்லிம்கள்' என லிங்கன் தனது நூலுக்கு பெயர் வைத்திருந்தார்.



**வெள்ளை ஆதிக்கம் என்ற குற்றத்தைச் செய்தவன் வெள்ளையன். கறுப்பின மக்களை வெறுப்பை வளர்ப்பவர்கள் எனக் குற்றம் சாட்டுவதன் மூலம் தன்னுடைய குற்றத்தை மறைத்துக் கொள்ள முடியாது**

''கறுப்பு முஸ்லிம்கள் என்று குறிக்கப்படுவது அதன் பிறகு இயல்பானதாக மாறிவிட்டது. அப்படிச் சொல்வது, கறுப்பின மக்களைக் கூறுபடுத்துவதாகும். அது, நேஷன் ஆஃப் இஸ்லாம் உறுப்பினர்களை மிகவும் பாதித்தது. ''நாங்கள் கறுப்பின மக்கள். எங்களது மதம் இஸ்லாம். எங்களை கறுப்பு முஸ்லிம்கள் என குறிப்பிட வேண்டாம்'' என மால்கம் எவ்வளவோ சொல்லிப் பார்த்தார். ஆனால் அதை மாற்ற முடியவில்லை.

லிங்கன் புத்தகத்தில் நேஷன் ஆஃப் இஸ்லாம் குறித்து விமர்சனமாக எழுதப்பட்டிருந்தவற்றையே பத்திரிகைகள் பெரிதுபடுத்திக் காட்டின. எரிக் லிங்கனைப் புகழ்வது; ஆனால், அவரது வார்த்தைகளைக் கொண்டே கறுப்பர்களை இகழ்வது என்ற தந்திரத்தைதான் வெள்ளையர்களின் பத்திரிகைகள் பின்பற்றின.

நேஷன் ஆஃப் இஸ்லாம் நடத்திய பேரணிகள் பெரும் வெற்றி பெற்றன. எலிஜா முகம்மது பேசும் இடங்களிலெல்லாம் முன்னூறுக்கும் அதிகமான பேருந்துகளில் கறுப்பினத்தவர் வந்து குவிந்தனர். நேஷன் ஆஃப் இஸ்லாம் உறுப்பினர்கள் மட்டுமின்றி அதில் ஆர்வம் கொண்ட கறுப்பினத்தவர், நூற்றுக்கணக்கான கார்களில் அந்தப் பேரணிகளுக்கு வந்தனர். எலிஜா முகம்மது தனி விமானத்தில் சிகாகோவிலிருந்து வந்தார்.

விமான நிலையத்திலிருந்து பேரணி நடக்கும் இடம் வரை எலிஜா முகம்மதுக்கு சைரன் பொருத்திய போலிஸ் ஜீப்கள் பாதுகாப்பாக அணிவகுத்துச் சென்றன. எந்த போலிஸ் 'நேஷன் ஆஃப் இஸ்லாமை' கிரிமினல் கும்பலைப்போல நடத்தியதோ அதே போலிஸ் வணக்கம் வைத்து மரியாதை செய்தது. அந்தப் பேரணிகளில் மால்கம் பேசியது எல்லோரையும் சிந்திக்க வைத்தது.

''எனது கறுப்பினச் சகோதரர்களே, சகோதரிகளே, உங்களது மதம் எதுவாக இருந்தாலும் சரி அல்லது உங்களுக்கு மத நம்பிக்கையே இல்லாவிட்டாலும் சரி, நம் எல்லோரையும் இணைக்கிற ஒன்று உள்ளது. நாம் எல்லோரும் கறுப்பினத்தவர் என்பதுதான் அது. நான் எலிஜா முகம்மதுவின் அருமை பெருமைகளை எடுத்துச் சொல்லப் போவதில்லை. ஆனால், ஒன்று. அவர்தான் நம்முடைய எதிரியாரென்று நமக்குக் காட்டினார்.

**நம்முடைய எதிரி வெள்ளையன்.**

எலிஜா முகம்மதுவின் போதனையின் மகத்துவம் என்ன? நீங்கள் உங்களது எதிரிகள் யாரென்று உணர்ந்துவிட்டால், வெள்ளையர்கள் உங்களிடையே பிரிவினையை உண்டாக்க முடியாது. உங்களில் ஒருவரையொருவர் அடித்துக் கொண்டு சாக வேண்டும் என எதிர்பார்க்கும் வெள்ளையர்கள் ஏமாந்து போவார்கள். உங்கள் எதிரியாரென்று தெரிந்து கொண்டால் வெள்ளையரின் பொய்கள், வாக்குறுதிகள், தந்திரங்கள் உங்களை செவிடர்களாக, ஊமையாக, குருடர்களாக மாற்றுவதைத் தடுக்க முடியும்''.

''புரட்சி என்பது ரத்தம் சிந்துவது, புரட்சி என்பது சமரசமற்றது. புரட்சி என்பது, தனது பாதையில் எதிர்ப்படும் அனைத்தையும் தலைகீழாகப் புரட்டிப்போடுவது.'' ●

- தொடரும்



படிப்பகம்

www.padippakam.com



# அன்றும் இன்றும்



புதுவை ஈசுவரன் கோயிலில் தலித் மக்களின் கோயில் நுழைவுப் போராட்டம்

■ **கோ. சுகுமாரன்**

திராவிட இயக்கத்தின் அன்றைய வரலாறு - பள்ளர் கட்சி, பறையர் கட்சி என்று மற்றவர்கள் இக்கட்சியைப் பார்த்து கூறும் நிலையிலிருந்தது. ஆனால், இன்றைய திராவிட கட்சிகளோ - பார்ப்பனர் அல்லாத, தலித் அல்லாத கட்சிகளாகக் காட்சியளிக்கின்றன. அன்றைய திராவிட இயக்கம், தலித் மக்களுக்கான கோயில் நுழைவுப் போராட்டங்களை முன்னின்று நடத்தியது. ஆனால், இன்றைய திராவிட இயக்கமோ - 'அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராக வேண்டும்' என்ற காகிதத் தீர்மானங்களுடன் தங்கள் கடமை முடிந்துவிட்டதாக நினைக்கிறது. திராவிட இயக்க 'மாயை'யில் சிக்குண்டு கிடக்கும் இளைஞர்களுக்கு - திராவிட இயக்கத்தின் கடந்த கால வரலாற்றைப் புரியவைப்பது அவசியம்.

புதுச்சேரி திராவிட இயக்கத்தின் தொடக்க கால வரலாறு என்பது, அடிப்படையில் தலித் மக்களின் உரிமைக்கானப் போராட்ட வரலாறாகவே இருந்தது. பல்வேறு சமூகத்தைச் சேர்ந்தவர்களின் பங்களிப்போடு செயல்பட்ட போதிலும், தலித் மக்களின் சிக்கல்களுக்கு முன்னுரிமை கொடுத்து செயல்பட்டது என்பது கவனிக்கத்தக்கது. இதனை புதுவையைச் சேர்ந்த கோகுல் காந்தி நாத் எழுதியுள்ள 'கறுப்பு மலர்களின் நெருப்புப் பயணம்' எனும் நூல் வெளி உலகிற்குத் தெரியப்படுத்தி உள்ளது.

''... இந்தக் கோயில்கள் தான் சிறிதும் மாற்றுவதற்கு இடம் தராமல் சாதி வித்தியாசத்தை நிலை நிறுத்த உபயோகப்பட்டு வருகின்றது. ஆதலால்தான், நான் தீண்டாத மக்கள் என்போர் கண்டிப்பாய்க் கோயிலுக்குள் போய்த்தீர வேண்டும் என்று கூறுகின்றேனே ஒழிய - பக்திக்காகவோ, மோட்சத்திற்காகவோ, பாவமன்னிப்புக்காகவோ அல்லவே அல்ல. கோயிலில் சமத்துவம் அடைந்து விட்டால் மற்ற காரியங்களில் வித்தியாசம் இருக்க முடியவே முடியாது. கோயிலில் பிரவேசித்து நாம் செய்யும் ஒவ்வொரு முயற்சியும் சாதி வித்தியாசத்தை ஒழிக்கச் செய்யும் முயற்சியே ஒழிய வேறில்லை'' என தந்தை பெரியார் கூறியதைப் பின்பற்றிச் செயல்பட்டவர்களில் முன்னணியில் இருந்தவர் பொன். ராமலிங்கம்.

புதுச்சேரி முத்தியால்பேட்டையில் சாயத் தொழிற்சாலை வைத்து நடத்தியவர் பொன்.ராமலிங்கம். அப்போதைய பிரெஞ்சிந்திய திராவிடர் கழகத்தின் தலைவராக இருந்தவர். புதுச்சேரியில் புகழ்பெற்ற கோயில்களான ஈசுவரன் கோயில், பெருமாள் கோயில் ஆகியவற்றில் தலித் மக்கள் அனுமதிக்கப்படாத நிலை நீண்டகாலமாக இருந்து வந்ததை எதிர்த்துப் போராடியவர். 1947ஆம் ஆண்டு புதுச்சேரி முழுவதும் 'அரிஜனர் ஆலயப் பிரவேசம்' என சுவரொட்டி அச்சிட்டு ஒட்டி, ஏராளமான தலித் மக்களை அழைத்துக் கொண்டு, தற்போது புதுச்சேரி காந்தி வீதியிலுள்ள ஈசுவரன் கோயில், பெருமாள் கோயில் ஆகிய இரண்டிலும் மேள தாளத்துடன் ஆலய நுழைவுப் போராட்டம் நடத்தினார். இதனால், கடும் அடக்குமுறையைச் சந்தித்தார்.

புதுச்சேரி உப்பளம் பகுதியில் தலித் மக்களிடையே எழுச்சியை ஏற்படுத்தியவர் ம.நோயேல். தலித் கிறித்துவ வகுப்பில் பிறந்து திராவிடக் கொள்கையில் அதிக ஈடுபாடு ஏற்பட்டு - தந்தை பெரியார், குத்தூசி குருசாமி, பாரதிதாசன் போன்றவர்களோடு இணைந்து பணியாற்றியவர். 1921ஆம்



படிப்பகம்

www.padippakam.com

ஆண்டு 'குவேளோர் லாப்யா' என்னும் பிரெஞ்சு அரசு நூலகத்தில் தலித் மக்கள் பற்றிய நூலான 'ஆதி திராவிடர்' எனும் வரலாற்று நூல் இடம்பெற முழு முயற்சி செய்தார்.

பாரதிதாசன் எழுதிய 'தாழ்த்தப்பட்டோர் சமத்துவப் பாட்டு' நூலினை 1930ஆம் ஆண்டு வெளியிட்டார். இந்த நூல் பலரையும் சென்றடைய வேண்டுமென்பதற்காக அதைக் குறைந்த விலையில் வெளியிட்டார். தான் பிறந்த ஊரான உழவர்கரையில் பல்வேறு மதத்தினர், சாதியினர் 1,500 பேர் பங்கேற்ற சமபந்தி நடத்தினார். இதனால், அப்பகுதியிலுள்ள ஆதிக்கச் சாதியினரின் வெறுப்பைப் பெற்றார். திராவிடக் கொள்கையைப் பரப்பும் நோக்கத்துடன் 10.11.1930இல் 'புதுவை முரசு' இதழைத் தொடங்கினார்.




ம.நோயேல் - முதல் வரிசையில் இடமிருந்து 3ஆவது நபர்

புதுச்சேரி உப்பளம் பகுதியில் 'தன் மதிப்புக் கழகம்' தொடங்கி அப்பகுதியிலுள்ள கிறித்துவர் கல்லறையில் பிரெஞ்சு வெள்ளையர்கள், ஆதிக்க சாதியினர், தாழ்த்தப்பட்டவர்கள் ஆகியோருக்குத் தனித்தனியே கல்லறை இருந்ததை எதிர்த்துப் போராடினார் நோயேல். அவரின் இந்தப் போராட்டத்திற்கு சம்பூர்ன லத்தூர், மோங்கர் மேல், ஏசுஇபேர் போன்ற தன்மதிப்புக் கழகத் தோழர்கள் உறுதுணையாக இருந்துள்ளனர்.

இதன் பயனாக, கல்லறைக்குள் இருந்த பாகுபாடு நீக்கப்பட்டு அனைவரும் சமமாக அடக்கம் செய்து கொள்ள வழி ஏற்பட்டது. இன்றும் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் தனிச் சுடுகாடு, தனிக் கல்லறை நிலவி வரும் வேளையில், நோயேல் தலைமையேற்று நடத்திய இப்போராட்டம் குறிப்பிடத்தக்கது.

**"அன்றைய திராவிட இயக்கத்தின் வரலாறு – பள்ளர் கட்சி, பறையர் கட்சி என்று மற்றவர்கள் இக்கட்சியைப் பார்த்து கூறும் நிலையிலிருந்தது. ஆனால், இன்றைய திராவிட கட்சியோ – பார்ப்பனர் அல்லாத, தலித் அல்லாத கட்சியாகக் காட்சியளிக்கிறது."**

கிறித்துவ மதத்திற்குள் நிலவிய தீண்டாமையை 'புதுவை முரசு' இதழில் தொடர்ந்து எதிர்த்து எழுதினார். இதற்காக நோயேல், பிரெஞ்சு நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்டார். 'புதுவை முரசு' இதழில் வெளியிட்ட கட்டுரை ஒன்றுக்காக புதுச்சேரி பாதிரியார்கள் 18 பேர் நோயேல் மீது சிவில் நீதிமன்றத்தில் மான வழக்குத் தொடர்ந்தனர். இதனை விசாரித்த நீதிமன்றம், 18 பாதிரியார்களுக்கும் தலைக்கு 10 ரூபாய் வீதம் நஷ்டமாக, பிரெஞ்சு அரசுக்கு 500 பிராங்க் அபராதமாக செலுத்த வேண்டும் என்றும், ஒரு மாத சிறைத் தண்டனை இனி இக்குற்றம் செய்யாதிருக்கும் வரை அனுபவிக்க வேண்டியதில்லை என்றும் தீர்ப்பளித்தது.

இதனை எதிர்த்து மேல்முறையீடு செய்தார் நோயேல். கீழ் நீதிமன்றத் தீர்ப்பை உறுதி செய்த உயர்நீதிமன்றம், அரசாங்கத்திற்கான அபராதம் 500 பிராங்கை 250 ஆகக் குறைத்தது. இந்தத் தீர்ப்பின் மீது பாரிசிலுள்ள பிரெஞ்சு உயர்நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்தார் நோயேல். இந்த மேல் முறையீட்டு மனுவை தள்ளுபடி செய்த பாரீஸ் உயர்நீதி மன்றம் கீழ் நீதிமன்றத் தீர்ப்பை உறுதிசெய்தது. இதனால் நோயேல் பெரும் துன்பத்திற்கு உள்ளானார்.

தலித் மக்களுக்கு அரும்பணியாற்றி வந்த சுவாமி சகஜானந்தாவை 1924 ஆம் ஆண்டு சந்தித்த நோயேல், அவரை புதுச்சேரிக்கு அழைத்து வந்து பல பொதுக் கூட்டங்கள் நடத்தினார். இது, ஆதிக்க எண்ணமுடைய பலரிடத்தில் எதிர்ப்பை ஏற்படுத்தியது. நந்தனை தீக்கிரையாக்கிய சிதம்பரம் நடராசர் கோயிலில் மார்கழி மாதங்களில் நடைபெறும் 'திருமஞ்சனம்' போன்ற விழாக்களில் பங்கேற்று தலித் உரிமைகளைப் பாடினார். தன்னுடைய நண்பர் லூர்து பஸ்மீருடன் சிதம்பரம் சென்று, 'தாழ்த்தப்பட்டவருக்குத் தில்லைதாண்டவனை வேண்டவும் உரிமையும் வேண்டுமோ' என பஜனை பாடல்கள் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தினார் நோயேல்.

புதுச்சேரி நெல்லித்தோப்பு பகுதியில் இருக்கும் அதிமேற்றிராசன் ஆலயத்தில் தலித் மக்கள் நடுக்கூடத்தில் பீடத்தின் அருகே இருந்து பூசை செய்ய அனுமதி மறுக்கப்பட்டது. மற்ற சமூகத்தாருடன் கலந்து பிரார்த்தனை செய்ய முடியாதபடி ஆலயத்திற்குள் நடுக்கட்டை ஒன்று அமைத்து தலித் மக்களுக்கான எல்லை வரையறுக்கப்பட்டு இருந்தது. இதனை எதிர்த்துப் போராடி உரிமையைப் பெற்றுத் தந்தார் நோயேல்.

இதனை முன்னின்று நடத்திய ஆர்.பி. பாபிலோன் என்பவரோடு இணைந்து இப்போராட்டத்தை நடத்தி



படிப்பகம்

www.padippakam.com

வெற்றி கண்டார். இதற்காக எட்டு நாட்கள் சிறைவாசம் இருந்தார். அப்பகுதியைச் சேர்ந்தவர்கள் 150 பேரும் போராட்டத்தில் ஈடுபட்டுச் சிறை சென்றனர். இதனால், ஆலயத்தில் இருந்த நடுக்கட்டை நீக்கப்பட்டது.

புதுச்சேரியில் தலித் மக்களின் வாழ்வுரிமைக்காக 'ரெவேய் சொசியால் சங்கம்' 1907 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. தாழ்த்தப்பட்ட மக்களின் கல்வி வளர்ச்சி, பொது உரிமைக்காகப் பாடுபடுதல், வறுமையைப் போக்குதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு இச்சங்கம் தொடங்கப்பட்டது. குறிப்பாக தாழ்த்தப்பட்ட மக்களுக்கு கோயில், குளம், கிணறு, கல்லறை, நாடக அரங்கம், தேநீர் விடுதி ஆகிய பகுதிகளில் நிலவிய சாதிக் கொடுமைகளைப் போக்க பாடுபட்டனர்.

> **தலித் அல்லாத சமூகத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும் பொன். ராமலிங்கம் நடத்திய ஆலய நுழைவுப் போராட்டம் என்பது, புதுச்சேரி வரலாற்றில் நிகழ்ந்த - தலித் மக்களுக்கான மிகப் பெரிய உரிமைப் போராட்டமாகும்.**

இச்சங்கத்தில் இணைந்து பணியாற்றிய நோயேல், 1940இல் புதுச்சேரியில் தலித் மக்கள் வாழும் பகுதியை 'பறச்சேரி, பறத்தெரு' என்று இருந்ததை மாற்றி 'பேட்' என்று அழைக்க வழிவகுத்தார்.



பொன். ராமலிங்கம்

இதனால், தலித் மக்களுடைய இழிவுகள் ஒழிந்துவிடும் என்று கருதவேண்டாம். ஆனால், அன்றைய காலகட்டத்தில் தலித் மக்களின் மீதான சாதி முத்திரையை மாற்ற நோயேல் மேற்கொண்ட முயற்சியாக இதை நாம் பார்க்க வேண்டும். தன்மதிப்புக் கழகத்திலும், திராவிடர் கழகத்திலும் பல்வேறு முக்கிய பொறுப்புகள் வகித்த நோயேல், புதுச்சேரி தோழர்களால் 'புதுவைப் பெரியார்' என்றே அழைக்கப்பட்டார்.

இந்து மதத்தில் நிலவிய தீண்டாமைக் கொடுமை கிறித்துவ மதத்திலும் நிலவியது. புதுச்சேரி தேவாலயத்திற்குள் தலித் கிறித்துவர்களை பிற கிறித்துவர்களோடு ஒன்றாக சேர்க்க முயற்சித்த காரணத்திற்காக, புதுவை தமிழ்க் கிறித்துவ அன்யோன்ய சபைத் தலைவர் பதவியை 10.12.1930இல் ராஜினாமா செய்துள்ளார், தம்பியப்ப (முதலியார்) என்பவர்.

சுயமரியாதை இயக்கம் சார்பில், 1933 ஆம் ஆண்டு திருச்சியில் நடைபெற்ற 'சென்னை மாகாண தீண்டப்படாதார் முதல் மாநாட்டில்' தலைமை வகித்த காரணத்திற்காக அல்போன்ஸ் லகாஷ் மீது மான நஷ்ட வழக்கு தொடுத்துள்ளனர் புதுச்சேரி பாதிரியார்கள். இதில், அல்போன்ஸ் லகாஷிற்கு ஒரு மாத சிறைத் தண்டனையும், 200 பிராங்க் அபராதமும், வழக்கு தொடுத்த பாதிரியார்களுக்கு மான நஷ்டத் தொகையாக தலைக்கு 300 பிராங்குகள் அளிக்க வேண்டுமெனத் தீர்ப்பு அளிக்கப்பட்டது.

மேலும், அப்போதைய திராவிடர் கழகம் சார்பில் 15.7.1956இல் புதுச்சேரியில் புத்தர் விழா கொண்டாடப்பட்டுள்ளது. தந்தை பெரியார், பாரதிதாசன் போன்றவர்கள் இதில் பங்கேற்றுள்ளனர். அண்ணல் அம்பேத்கர் மறைவுற்றபோது, புதுச்சேரியில் 9.12.1956இல் இரங்கல் கூட்டம் நடைபெற்றுள்ளது. இதில் நோயேல் உட்பட பலரும் கலந்து கொண்டு இரங்கல் உரையாற்றியுள்ளனர்.

இவ்வாறாக, அம்பேத்கர் - பெரியார் ஆகியோருடைய செயல்தளம் ஒரு புள்ளியில் துவங்கி இரு கோடுகளாக இருந்துள்ளதை புதுவை திராவிட இயக்க வரலாறு நமக்கு உணர்த்துகிறது. புதுச்சேரியில் தொடங்கிய தன்மதிப்புக் கழகம், பிரெஞ்சிந்திய திராவிடர் கழகம் ஆகியவை தலித் மக்களின் உரிமைகளுக்குப் போராடியது கவனிக்கப்பட வேண்டியது. நீண்ட நெடிய போராட்டத்தைக் கண்டுள்ள தலித் மக்கள், இன்றும் சாதிக் கொடுமைகளுக்கு உள்ளாக்கப்படுவது அநீதியானது. இந்நிலையில், புதுச்சேரி திராவிட இயக்க வரலாறு நமக்கு உணர்த்துவது என்னவென்றால், தலித் மக்களுக்கான உரிமைப் போராட்டத்தைத் தொடர வேண்டும் என்பதுதான். ●



புதுவை பெருமாள் கோயிலில் தலித் மக்களின் கோயில் நுழைவுப் போராட்டம்

தகவல், புகைப்பட உதவி : கோகுல்காந்தி நாத், புதுவை நூல் : 'கறுப்பு மலர்களின் நெருப்புப் பயணம்' கிடைக்குமிடம் : 18, இருநூசி மேஸ்திரி தெரு, புதுச்சேரி - 605 001 விலை : ரூ. 75



படிப்பகம்

www.padippakam.com



பூபதி அம்மாள்

கூத்திரம்பாக்கம் - காஞ்சிபுரம் மாவட்டத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்திவரும் கிராமம். கடந்த 22 ஆண்டுகளாக தலித் மக்கள் இஸ்லாம் மதத்திற்கு மாறப்போவதாக அறிவித்து வருவதுதான் இந்தப் பரபரப்புக்குக் காரணம். சாதி இந்துக்களின் கொடுமைகளிலிருந்து விடுபடுவதற்காக அவர்கள் கையில் எடுக்கும் ஆயுதம் - மதமாற்றம். இவர்கள் மதம் மாறுவோம் என தேதி குறிக்கும் போதெல்லாம் அரசு அதிகாரிகள் ஓடோடி வந்து, பரிவோடு பேசி தங்கள் பிரச்சனைகளைத் தீர்த்து வைப்பதாகக் கூறுவார்கள்; சமாதானக் கூட்டமெல்லாம் கூட நடக்கும். ஆனால், பிரச்சனைகள் மட்டும் தீர்ந்தபாடில்லை.

■ ஆசூர் ராஜ்

# முஸ்லிமா? இந்துவா?

## 22 ஆண்டுகாலப் போராட்டம்

இருபத்திரெண்டு ஆண்டுகளாகத் தங்களின் அடிப்படை மனித உரிமைகளுக்காகப் போராடி வரும் கூத்திரம்பாக்கம் கிராம மக்களின் தற்போதைய நிலைதான் என்ன? உத்திரமேரூர் சட்டமன்றத் தொகுதியில் உள்ளது கூத்திரம்பாக்கம் கிராமம். இங்கு 58 தலித் குடும்பங்களும் 600 சாதி இந்து குடும்பங்களும் (வன்னியர், யாதவர்) வசித்து வருகின்றனர். இக்கிராமத்தின் பொதுக்குளத்தில் நீர் எடுக்கும் உரிமையும் கோயிலில் நுழையும் உரிமையும் - நீண்ட நாட்களாகவே மறுக்கப்பட்டு வருவதுதான், இந்த மக்களின் மதமாற்ற அறிவிப்பிற்கான அடிப்படைக் காரணம்.

1979 ஆம் ஆண்டு கோயிலில் நுழையும் உரிமையையும் குளத்தில் நீர் எடுக்கும் போராட்டத்தையும் அறிவித்தது முதல் - சாதி இந்துக்களுக்கும், தலித் மக்களுக்கும் மோதல் தொடங்கியது. தலித் மக்கள் குடியிருக்கும் பகுதியில் ஒரு கிணறு இருக்கிறது. அதில் நீர் வற்றி விட்டால் அல்லது தலித் பகுதியில் திருமணமோ, விசேஷமோ நடந்தால், ஊர்ப் பொதுக் குளத்தில்தான் தண்ணீர் எடுக்கச் செல்வார்கள்.

ஒரு திருமண நிகழ்விற்காக தண்ணீர் எடுக்கச் சென்ற பூபதி அம்மாள் மற்றும் வள்ளியம்மாள் ஆகியோரை தண்ணீர் எடுக்க அனுமதி மறுத்ததோடு, அவர்களை அடித்து காயப்படுத்தியுள்ளனர் சாதி இந்துக்கள். அவர்கள் கொண்டு சென்ற பாத்திரங்களையும் உடைத்து நொறுக்கியுள்ளனர். நடந்தவற்றை அப்படியே நினைவு கூறுகிறார் பூபதி அம்மாள்:

''காலங்காலமாகவே சாதி வித்தியாசம் இருந்து வந்தது. எங்களுக்கு தண்ணீர் மொண்டு ஊத்த, இருளர்கள் இருப்பார்கள். நாங்கள் குளத்துகிட்டே போகக் கூடாது. தூரத்தில் நின்றால் அவர்கள் தான் தண்ணீர் மொண்டு ஊத்துவார்கள். அன்னிக்கு ஊர்ல கல்யாணம். அதனால் நாங்களே தண்ணிக் குளத்தில் இறங்கி மொண்டோம். சாதி இந்துக்கள் இரண்டு பேர் ஓடிவந்து (கணேசன், மாரி) எங்கள் பாத்திரங்களைப் பிடுங்கி உடைத்தனர். எங்களையும் கடுமையாகத் தாக்கினர்.

நான் அங்கேயே மயக்கம் போட்டு விழுந்து விட்டேன். அய்ந்து, ஆறுமணி நேரம் அங்கேயே கிடந்தேன். காலனி பகுதியிலிருந்து யாரும் என்னை வந்து பார்க்கவில்லை. வந்தால் அவர்களும் தாக்கப்படுவார்கள் என்ற பயத்தில் வரவில்லை. பிறகு, போலிசுக்குத் தகவல் சொல்லியுள்ளார்கள். போலிசு வந்துதான் என்னை அங்கிருந்து அழைத்துச் சென்று காஞ்சிபுரம் மருத்துவமனையில் சேர்த்தது. என்னை அடித்தவர்கள் மீது புகார் கொடுத்தேன். ஆனால், நடவடிக்கையில்லை. இப்போதாவது நிலைமை மாறிச்சான்னா இன்றளவும் மாறவில்லை. எத்தனையோ பேர்



கோயிலில் தலித்துக்கு அனுமதியில்லை. தலித்துகள் இந்துக்களா?



படிப்பகம்

www.padippakam.com

வந்து விசாரிக்கிறார்கள்; பிரச்சனைகள் மட்டும் தீர்ந்த பாடில்லை.''

இப்பிரச்சினையில், 1979லிருந்து இம்மக்களை ஒருங்கிணைத்து, அம்பேத்கர் மக்கள் விடுதலை முன்னணி என்ற அமைப்புடன் இணைந்து போராடி வரும் வி.மதுரை, இப்போராட்டத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டவர். தொடர்ந்து இவருக்கு கொலை மிரட்டல்கள் வந்த போதும், போராட்டத்திலிருந்து பின்வாங்காமல் தலித் மக்களின் பிரச்சனைகளுக்கு ஊக்கமளித்துப் போராடி வரும் இவர் நம்மிடம் கூறும்போது,

''1979இல் ஜாதிக் கொடுமைகளைத் தாள முடியாமல் மதம் மாறுவோம் என அறிவித்தோம். பல மனுக்கள் அரசுக்கு கொடுத்தும் விட்டோம். ஆனால், பலனில்லை. நான் முன்னின்று போராடுகிறேன் என்பதற்காக என் வீட்டைத் தீ வைத்துக் கொளுத்தினார்கள். காவல் துறையில் புகார் செய்தேன். கடும் நடவடிக்கையில்லை. தலித் இயக்கங்களின் ஒத்துழைப்பும் இல்லை. 22 ஆண்டுகளாகப் போராடியும் - இம்மக்களுக்கான உரிமைகள் கிடைக்கவில்லை என்பது வேதனையளிக்கிறது.

இவ்வளவு பிரச்சனைகள் நடந்த பிறகும் சாதி இந்துக்கள் மீது வழக்குகள் இல்லை என்பது, அரசின் ஜாதி விசுவாசத்தையே காட்டுகிறது. 'புரட்சி பாரதம்' கட்சிதான் ஆரம்பம் முதல் எங்களோடு இணைந்து போராடி வருகிறது.''

மேலும், 'இக்கிராமத்தில் மனித உரிமைகள் வென்றெடுக்கப்படும் வரை எங்கள் போராட்டம் தொடரும். தற்பொழுது 'காஞ்சிபுரம் மாவட்ட மனித உரிமை மீட்பு இயக்கம்' என்ற அமைப்பைத் தொடங்கியுள்ளோம். இதில் சமுதாய அமைப்புகள் பல உள்ளன. வெகு விரைவில் காஞ்சிபுரத்தில் கோரிக்கை ஊர்வலம் நடத்தவுள்ளோம்' என்றார் மதுரை.



மண்ணின் சொந்தக்காரன் நீரெடுக்க அனுமதி இல்லை



கோபால்

மின்கம்பத்தில் கட்டிவைத்துத் தாக்கப்பட்டவர் கோபால். இவர் தனக்கு நேர்ந்த அவமானத்தை நினைவு கூறுகிறார்: ''எனக்கு சின்ன வயசு இருக்கும் போதிலிருந்து தீண்டாமைக் கொடுமைகளை அனுபவிச்சு வர்றேன். இப்ப கோயில்ல நுழைவோம், குளத்துல இறங்குவோம்னு சொன்னதும் ஜாதி இந்து எங்கள அடிக்கிறாங்க. நான் ஜாதி இந்து தெரு வழியாகப் போனேன். என்னைப் புடிச்சி மின்கம்பத்தில் கட்டிப் போட்டு அடிச்சானுங்க. பிறகு மாலை வரை கட்டிப்போட்ட படி இருந்த என்னை போலிசுதான் வந்து மருத்துவமனையில் சேர்த்தாங்க'' என்றார்.

3.9.1995அன்று திருவிழா நடத்துவதென்று சாதி இந்துக்கள் முடிவு செய்தனர். 'தலித் மக்கள் அம்பேத்கர் மக்கள் விடுதலை முன்னணி' என்ற அமைப்பின் கீழ் கோயில் நுழையும் போராட்டத்திற்கு துண்டறிக்கை போட்டு மக்களை ஒன்று திரட்டினர். உடனே அரசு அதிகாரிகள் ஓடிவந்தனர். சமாதானப் பேச்சு உடன்பாடு எட்டப்படவில்லை. திருவிழா நின்று போனது. இது, சாதி இந்துக்களை ஆத்திரமூட்டியது. உடனே அவர்கள் இக்கோயில் எங்களுக்குதான் சொந்தம் என நீதி மன்றத்திற்குச் சென்றனர்.

நீதி மன்றத்தில் 6 ஆண்டுகளாக வழக்கு நடைபெற்று தீர்ப்பு வந்தது. தீர்ப்பு ஜாதி இந்துக்களுக்கு சாதகமாக இருப்பதாகக் கூறி மீண்டும் திருவிழாவிற்கு நாள் குறித்தனர். 24.2.2002 அன்று திருவிழா நடைபெறுவதாக இருந்தது. திருவிழாவை எங்களோடு இணைந்து செய்ய வேண்டும்; கோயிலில் நாங்கள் நுழைவோம், சாமி எங்கள் வீதிகளுக்கு உலா வர வேண்டும் என கோரிக்கை வைத்தனர் தலித் மக்கள். அரசுக்கும் மனு ஒன்றை அளித்தனர்.



வி. மதுரை

அதனடிப்படையில், மாவட்ட ஆட்சியர் க.ராஜாராமன் உத்திரவின் பேரில் 22.2.2002 அன்று ஆர்.டி.ஓ., அரசு அதிகாரிகள் சமாதானக் கூட்டம் நடத்தினர்.சமாதானக் கூட்டத்தில் இருதரப்பினரும் உடன்படவில்லை. அரசு அதிகாரிகள் திருவிழா நடத்துவதை தடை செய்து ஆணை பிறப்பித்ததோடு, அக்கிராமத்தில் 144 தடை ஆணையும் பிறப்பித்துள்ளனர். அது இன்றுவரை நடைமுறையில் உள்ளது. மீண்டும் திருவிழா நின்றுபோனதை தாங்க முடியாமல் கொதித்தெழுந்த சாதி இந்துக்கள் காஞ்சிபுரத்தில் அறிவிப்பு ஏதும் செய்யாமல் ஊர்வலம் நடத்தினர். நடத்திய கையோடு அரசை மிரட்டும் வகையில் கோரிக்கையும் வைத்தனர்.

நாம் செய்தி சேகரிக்கச் சென்ற போது, பொதுக் குளத்தில் நாய் ஒன்று இறந்து கிடந்தது. ஆம், நாய் செத்துக் கிடக்கலாம், நாற்றமெடுக்கும் நண்டும் நத்தைகளும், பாசிகளும் கூட இருக்கலாம். ஆனால், ஒரு தலித் மட்டும் குளத்தில் இறங்கிவிடக் கூடாது! இந்தியாவில் இனவெறி உயிர்ப்புடன் உள்ளது என்பதற்கு இதைவிட வேறென்ன சான்று வேண்டும்? ●



படிப்பகம்

www.padippakam.com



# புத்தருக்கு ஒரு அம்பேத்கர் அம்பேத்கருக்கு ஒரு வசந்த் மூன்

**டாக்டர் அம்பேத்கர் ஆங்கில நூல் தொகுதிகள் வெளிவருவதற்கு அச்சாணியாக இருந்தவர், இந்நூலின் தொகுப்பாசிரியர் வசந்த் மூன் அவர்கள். அண்ணலின் மறைக்கப்பட்ட அரிய எழுத்துகளையும் உரைவீச்சுகளையும் - தமது இடையறாத உழைப்பால், அர்ப்பணிப்பால் உலகின் வெளிச்சத்திற்குக் கொண்டு வந்த வசந்த் மூன், ஏப்ரல் 1, 2002 அன்று மறைந்தார். அவரின் அளப்பரிய தியாகத்தை இங்கு நினைவு கூர்கிறோம்.**

■ சங்கமித்திரை

பவுத்தம் கி.மு. 6 ஆம் நூற்றாண்டில் தோன்றியது. கி.பி. முதலாம் நூற்றாண்டில் அது அரும்பிய இந்திய மண்ணிலிருந்து முற்றிலும் இருட்டடிப்புச் செய்யப்பட்டுவிட்டது. மறைக்கப்பட்ட பவுத்தத்தை - வெகு ஆண்டுகள் கழித்து புரட்சியாளர் அம்பேத்கர், 1935 ஆம் ஆண்டு புனர் நிர்மாணம் செய்தார். அன்று ஏற்றப்பட்ட தீப்பொறி, 14.10.1956 அன்று - சுடர் விளக்காய், இந்து மத இருட்டை நோக்கிய ஒளியாய், அம்பேத்கர் பவுத்தம் தழுவிய நிகழ்வாய் - இந்தியாவில் மீண்டும் பவுத்தம் அரும்பியது.

புத்தரின் இருட்டடிப்புச் செய்யப்பட்ட கருத்துகளை மீட்டு, இந்த மண்ணுக்கு அறிமுகப்படுத்தியவர் அம்பேத்கர். இந்து மதம் தன்னுடைய அமைப்பிற்கே உரிய பாசிசத் தன்மையால், அம்பேத்கரின் எழுத்துகளையும், உரைவீச்சுகளையும் பெரும்பான்மை மக்களிடையே பரவவிடாமல் இருட்டடிப்புச் செய்தது. அதையும் மீறி தன்னுடைய கருத்துகளை அம்பேத்கர் நூல்களாகப் பதிவு செய்தார்.

அந்த நூல்களை எந்த தலித் இயக்கமும் மக்கள் மயப்படுத்த முன்வராத நிலையில், மாண்புமிகு வி.பி. சிங் அவர்களும், ஆற்றமிகு ராம்விலாஸ் பாஸ்வான் அவர்களும் ஒரு முன் முயற்சியை மேற்கொண்டனர். இந்த முயற்சியை நன்கு பயன்படுத்திக் கொண்டவர் வசந்த் மூன். புத்தருக்கு ஒரு அம்பேத்கர் போல, அம்பேத்கருக்கு ஒரு வசந்த் மூன் என்று சொல்லுமளவிற்குத் தளராத உழைப்பினால், அம்பேத்கரின் மறைக்கப்பட்ட படைப்புகளை வெளிக்கொண்டு வந்தார்.

வசந்த் மூன் தொகுத்த முதல் நூல், 'சாதியும் அதன் பரிமாணங்களும்' இது குறித்து ஆரோக்கியமான விவாதங்கள் எழுந்தன. அம்பேத்கரின் இரண்டாவது தொகுதி எப்பொழுது வெளிவரும் என்ற ஆவலை இந்த நூல்தான் உருவாக்கியது. முதல் தொகுதியாக, 'புத்தரும் அவருடைய தம்மமும்' என்ற நூலை வெளியிட அரசு முன்வந்தபோது, 'சாதி ஒழிப்பின் மீது மிகுந்த அக்கறை கொண்டவர் அம்பேத்கர். அது அவருடைய முதல் படைப்பு. எனவே, இத்தொகுதிதான் முதலில் வெளிவர வேண்டும்' என வாதிட்ட மூன், அதில் வெற்றியும் பெற்றார்.

இரண்டாம் தொகுதி வெளியிடக் கூடிய குழுவில், வசந்த் மூன் இடம் பெறமாட்டார் என்றும், அவர் ஒரு அரசுப் பணியாளர் போல செயல்படாமல், அம்பேத்கரின் மாணவர் போல செயல்படுகிறார் என்றும் மத்திய அரசு அவரைப்



டாக்டர் கே. ஆர். நாராயணன் அவர்களுடன் வசந்த் மூன்



படிப்பகம்

பற்றிய தனி ஆய்வறிக்கை ஒன்றை அனுப்பியது. இதன் காரணமாக, வசந்த் மூன் இந்தக் குழுவில் இருந்து மூன்று மாதங்களுக்கு நீக்கி வைக்கப்பட்டார்.

அடுத்தடுத்து தொகுதிகளைத் தொகுக்க தனக்கு வாய்ப்பு தரப்படாததால், வசந்த் மூன், பல தலித் தலைவர்களையும், ஆர்வலர்களையும் சந்தித்தார். அதில் வழக்கறிஞர் பகவான் தாஸ், அம்பேத்கரின் உதவிச் செயலாளராக இறுதிவரை இருந்த நானக் சந்த் ரட்டு மற்றும் ஜோதிபா காட் பூலே என்பவர்கள் மிகவும் குறிப்பிடத் தகுந்தவர்கள்.

அதன்பிறகு, திரு. மூன், வி.பி. சிங் அவர்களின் உதவியுடன் மீண்டும் Special Officer on Duty என்ற பதவியோடு, இரண்டாவது தொகுப்பான 'சைமன் குழு - அதன் விளைவுகள்' என்ற பரபரப்பான நூலை வெளியிட்டார். சைமன் குழுவை ஆதரித்த ஒரே இந்தியர் அம்பேத்கர்தான். அவர் தன்னுடைய அரசியல் காரணங்களுக்காக சைமன் குழுவை ஆதரித்தார். இதனால் அம்பேத்கரை 'தேசத் துரோகி' என்றனர்.

ஆனால், வசந்த் மூன் வெளியிட்ட தொகுதி இரண்டில் அம்பேத்கரின் நிலைப்பாடு தெளிவாக வெளிப்பட்டதால், அருண் சோரி போன்றவர்கள் அம்பேத்கரை விமர்சனம் செய்து தொடர் கட்டுரைகள் வெளியிட்டனர். இதில், 'அம்பேத்கரை ஆங்கில அரசின் அடிவருடியாகவும், தொலை நோக்குச் சிந்தனையற்றவராகவும்' குறிக்கப்பட்டிருந்தது. இதைக் கண்டு மிகவும் வேதனை அடைந்த வசந்த் மூன், நேரடியாக, அருண் சோரிக்கு பதில் தருவதற்குப் பதில், தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட பணியின் பயன்பாட்டை பயன்படுத்த எண்ணினார்.

அதன் விளைவு, மூன்றாம் தொகுதி வெளிவந்தது. இதில் 'கம்யூனிசமும் பவுத்தமும்', 'பவுத்தத்தின் வீழ்ச்சி', 'பார்ப்பனியத்தின் ஆதிக்கம்' ஆகிய கட்டுரைகள் தொகுக்கப்பட்டன. இது மிகவும் அபூர்வமான கட்டுரைத் தொகுப்புகளாகும். கம்யூனிசத்தில் தளராத நம்பிக்கை



வசந்த் மூன்

கொண்டிருந்த பல தலித் ஆர்வலர்களிடையே ஒரு மாற்று சிந்தனையை விதைத்தது இந்த நூல் தொகுதி.

கம்யூனிசம் எல்லா விதத்திலும் முழுமையானதல்ல. பவுத்தம் தான் முழுமையானது என்ற கருத்தை, 'புத்தரும் காரல் மார்க்சும்' என்ற தலைப்பின் கீழ் ஒரு கட்டுரையாக வெளியிட்டிருந்தார் வசந்த் மூன். இது அனைத்து தரப்பினரிடையேயும் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. இதன் காரணமாக, தலித் மக்கள் தங்களுடைய அமைப்பிலிருந்து அந்நியப்பட்டுப் போய்விடுவார்களோ என்ற அச்சம், பல முற்போக்கு இயக்கங்களிடையே உருவானது.

இதன் மூலம் திரு. மூன் இந்துத்துவ சக்திகளுக்கு துணை போய்விட்டதாகக் குறை கூறினார்கள். இவர்களது பொய் வாதங்களைத் தகர்க்கும் வகையில் மூன், அம்பேத்கரின் நான்காவது தொகுப்பான Riddles in Hinduism என்ற தொகுப்பை வெளியிட முடிவு செய்தார். ஆனால், எல்லா ஊழியர்களும் ஒட்டு மொத்தமாக இவரின் பணிக்கு தங்களால் இயன்ற இடையூறுகளை கொடுத்தனர். ஒரு கட்டத்தில் இவர் பயணிக்க வண்டி கூட மறுக்கப்பட்டது. அதற்கும் சளைக்காமல், மிதி வண்டியிலேயே பயணம் செய்து, தன்னுடைய பணியை பல சிக்கல்களுக்கிடையே ஆற்றினார். ஆங்கிலத் தொகுதி 4, 15,000 பிரதிகள் வெளியிடப்பட்டன.

மூன் அஞ்சியபடியே, விஸ்வ இந்து பரிசத், பஜ்ரங்தள், சிவ சேனா ஆகிய மதவெறி அமைப்புகள் 14,000 பிரதிகளை தீயிட்டுக் கொளுத்தின. அச்சில் வார்க்க அடிப்படையாக அமையும் 'பிளேட்டை' கூட இவ்வமைப்பினர் உடைத்தெறிந்தனர். இதை சம்பந்தப்பட்ட மாநில அரசும், மய்ய அரசும் வேடிக்கை பார்த்துக் கொண்டுதான் இருந்தது. இதுவரை, இதில் ஈடுபட்டவர்கள் மீது எந்த நடவடிக்கையும் அரசு எடுக்கவில்லை.

மாறாக, வசந்த் மூன் தன்னுடைய பதவியில் சொல்லொணா துயரங்கள் அடைந்தார். சக ஊழியர்கள் அவருக்கு துளியும் ஒத்துழைப்புத் தரவில்லை. இந்துத்துவ அடிப்படை வாதிகள் இவரைக் கொன்றுவிடுவதாக மிரட்டினர். இறுதியாக ஒருநாள் ஜோதிபா காட் பூலே அவர்களிடம் மூன், மனம் விட்டுப் பேசியிருக்கிறார் :

"நமது அய்யாவிற்கு மக்களிடையே ஆதரவு இருந்தது. அது நம்மைப் போல கருத்து வெளிப்படுத்தும் தளத்தில் உள்ளவர்களுக்கு இல்லை. நாம் வெகு மக்களிடம் இருந்து விலகி வாழ்கிறோம். நாம் ஆழமான நுண் அரசியல் திறன் கொண்டிருந்தாலும், நமது பணி ஒருபோதும் மக்களைச் சென்றடையாது. நமது மரணம் கூட இந்த மக்களின் நெஞ்சங்களில் எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தாது" என்று தன்னை மறந்து அழுதிருக்கிறார்.

வரலாற்றை நன்கு ஆராயத் தெரிந்த மூனின் வரிகள், அவருக்கே மிகப் பொருத்தமாக அமைந்துவிட்டது.

தொகுதி 4அய் மீண்டும் அச்சில் வார்க்கவோ மறுபிரதி போடவோ - மாநில, மய்ய அரசுகள் முன் வராத நிலையில், மூன் தன்னார்வத் தொண்டு

**“ அம்பேத்கர் என்ற பேழையை தன் கையில் வைத்துக் கொண்டு, அவரின் கருத்து முத்துக்களை நமது மக்கள் அதன் மதிப்பறியாது வீசிவிட்டனர். அந்த முத்தை மீண்டும் மக்களிடம் சேர்ப்பிக்கும் பணியை வெகு செம்மையாகச் செய்தவர் வசந்த் மூன். ”**

www.padippakam.com

நிறுவனங்களை சந்தித்தார். அரசுப் பதவியில் இருக்கும் வரை, மூனுக்கு சிவப்புக் கம்பளம் விரிக்கப்பட்டது. அவர் பதவியில் இல்லை என்றவுடன், அவருடைய கருத்தைப் போலவே, அவரையும் புறக்கணித்தனர். அவரை சந்திப்பதால், அரசுக்கும், தங்களுக்கும் இடையே உள்ள நல்லுணர்வு பாதிக்கப்படும் என்று அஞ்சின. மறைமுகமாகக் கூட மூனின் வேண்டுகோளை ஏற்க மறுத்து விட்டனர்.

மூன் கூறினார் : ''இந்தியாவில் பார்ப்பனீயத்தை எதிர்ப்பதாக இந்த தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் கூறிக் கொள்கின்றன. ஆனால், எதிர்ப்பதால்தானோ என்னவோ தெரியவில்லை, தற்போது தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், பார்ப்பனீயத்தை முழுமையாக உள்வாங்கிக் கொண்டவர்களாக மாறிவிட்டனர். இது எனக்கு மிகுந்த வேதனையைத் தருகிறது. தலித் மக்களின் அன்புமிக்க எதிரிகளாகவே இந்த தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் இருப்பது, என்னை மிகவும் துன்பமடையச் செய்கிறது.''

## அட ஜனசக்தியே !

கம்யூனிஸ்டு கட்சியான சி.பி.அய். - இன் அதிகாரப்பூர்வ ஏடான 'ஜனசக்தி' ஏட்டில் (10.3.2002) 'அட சண்டாளர்களே'! என்று தலைப்பிட்டு வெளிவந்த கட்டுரையைக் கண்டித்து தலித் முரசில் எழுதியிருந்தோம். இதற்காக 'ஜனசக்தி' வருத்தம் தெரிவிக்க வேண்டும் என்றும் கூறியிருந்தோம். ஆனால், மாறாக ''ஊர் வழக்கில், பேச்சு மொழியில் அடப்பாவிகளா? அடச் சண்டாளர்களா? என்று சொல்லும் வழக்கத்தையொட்டியே, அதுவும் தலித் அல்லாத உயர்சாதி இந்துமத வெறியர்களுக்கு எதிராகச் சொல்லப்பட்டிருக்கிறது. பட்டியலிடப்பட்ட சாதியினரில் 51 ஆவது இடத்திலுள்ள பெயரை நாங்கள் மறந்தும் பயன்படுத்த மாட்டோம்; அப்படிப்பட்ட நோக்கமும் எங்களுக்கில்லை. இதை ஒப்புக் கொள்வீர்கள் என நம்புகிறோம்'' என்று 'ஜனசக்தி' கூறுகிறது.

இதை எப்படி ஒப்புக் கொள்வது? தலித்துகளின் சாதிப் பெயர்களைக் குறிப்பிட்டுத் திட்டுவது என்பது, ஊர் வழக்கிலும் பேச்சு மொழியிலும் இருப்பதைத் தான் நாங்கள் கண்டிக்கிறோம். தலித்துகளுக்கு எதிரான வசைபாடல்கள், இழிவுகளை இந்த சாதிய சமூகம் - இயல்பானதொரு செயல்பாடாகவே ஆக்கிவிட்டது என்பதுதான் மிகுந்த கண்டனத்திற்குரியது.

ஆனால், 'எங்கள் பொதுவுடைமைக் கட்சியில் அதிகமான தலித்துகள் இருக்கிறார்கள் என்று பெருமைபடுகின்றவர்'களுக்கு - தவறுதலாக சொல்லிவிட்டோம் என்று குறைந்தபட்சம் வருத்தம் தெரிவிக்கும் நாணயம்கூட இல்லை. மாறாக, நாம் குற்றம் சொன்ன அந்தக் கட்டுரையை 'தலித் முரசில் பிரசுரிக்க வேண்டும்' என வேண்டுகோள் வைக்கிறது ஜனசக்தி. இந்தியாவில் கம்யூனிசம் காலூன்ற முடியாமல் போனதற்கு, இதுபோன்ற கம்யூனிஸ்ட் கட்சிகள்தான் காரணம் என்பதற்கு இதைவிட வேறென்ன சான்று வேண்டும்?

- புலேந்திரன்

ஒவ்வொரு முறையும் நூல் தொகுப்பை வெளியிடுவதில் உள்ள பிரச்சினையை மூன், நமது குடியரசுத் தலைவர் கே.ஆர். நாராயணன் அவர்களிடம் ஒரு மத்திய அமைச்சரின் உதவியோடு கொண்டு சென்றார். கே.ஆர். நாராயணன் அவர்கள், தனக்கிருந்த சிறப்பு அதிகாரத்தைப் பயன்படுத்தி, வசந்த் மூனை Officer on Special Duty on Permanent Basis என நியமனம் செய்தார்.

இவ்வாண்டு முதல் திரு. மூனின் பதவி, வாழ்நாள் பதவியாக மாற்றப்பட்டது. மூன் இதை மிகுந்த மகிழ்ச்சியோடு அனைவரிடமும் பகிர்ந்து கொண்டார். இயல்பாகவே திரு. மூன் அதிகம் பேசமாட்டார். ஆழ்ந்து நோக்கும் பார்வை, முரட்டுக் கண்கள், சுருள் சுருளான தலைமுடி, தெளிவான முகம் - இது மூனின் உருவம்.

காலப்போக்கில் தொகுதி 9 - What Congress and Gandhi have done to the Untouchables மற்றும், தொகுதி 14, Hindu Code Bill ஆகியவற்றை மூன் தொகுக்கும் போது, அவர் உடலும் மனமும் பெரிதும் சோர்வடைந்தது. காரணம் இத்தொகுதிகளில், இந்தியாவின் புனிதராக நம்பப்பட்டு வந்த காந்தியையும், சங்கராச்சாரியையும் அம்பலப்படுத்த வேண்டிய நேரத்தில் நமது தலித் தலைவர்கள் காந்தி மற்றும் சங்கராச்சாரிகளின் பக்தர்களாய் இருந்து கொண்டு இவருக்கு முட்டுக்கட்டை போட்டதுதான்.

தொகுதி 14, Hindu Code Bill இல் அன்றைய சங்கராச்சாரியின் கடிதம் வெளியிடப்பட்டிருந்தது. அதில், 'இந்து ஆண்கள் பலதார மணம் செய்து கொள்ள வேண்டும். வம்ச விருத்திக்காக, இந்துக்களின் பலதார மணத்தை, சட்டம் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றும் சங்கராச்சாரி பகிரங்கமாக தன்னுடைய கருத்தை, சமஸ்கிருத மொழியில் அனைத்துப் பத்திரிகையிலும் வெளியிட்டார்.

சங்கராச்சாரியை எல்லா மதவாதிகளும் பெண்கள் உட்பட அன்று ஆதரித்தனர். இன்று இந்துப் பெண்கள் சங்கராச்சாரியின் வார்த்தைகளை ஏற்றுக் கொள்வார்களா? கண்டிப்பாக ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். அதை அம்பலப்படுத்த அன்றைய சங்கராச்சாரியின் கடிதம், தொகுதி 14இல் இணைக்கப்பட்டுள்ளது. இதற்காக மூன் சந்தித்த இடர்களை வார்த்தைகளால் விவரிக்க முடியாது.

நமது குடியரசுத் தலைவர் டாக்டர் கே. ஆர். நாராயணன், தம்முடைய குடியரசு நாள் உரை ஒன்றில், ''ஏதுமறியாத கற்கால மனிதன், விலைமதிப்புமிக்க முத்துச்சிப்பி ஒன்றைக் கண்டெடுத்தான். அதனைப் பிளந்து அதனுள் இருந்த முத்தை வீசியெறிந்து விட்டு, சிப்பியை தனது உபயோகத்துக்காக வைத்துக்கொண்டான்'' என்று ஷேக்ஸ்பியர் எழுதிய 'ஒத்தெல்லோ' சோக காவியம் கூறுகிறது. தனது உடைமைகள் அனைத்தையும் விட மதிப்பு மிக்க முத்தை வீசி எறிந்த - கற்கால மனிதனின் செயலை நாம் செய்யக் கூடாது'' என்று குறிப்பிட்டார்.

அதைப் போலவே அம்பேத்கர் என்ற பேழையை தன் கையில் வைத்துக் கொண்டு, அவரின் கருத்து முத்துக்களை நமது மக்கள் அதன் மதிப்பறியாது வீசி விட்டனர். அந்த முத்தை மீண்டும் மக்களிடம் சேர்ப்பிக்கும் பணியை வெகு செம்மையாகச் செய்த மூனுக்கு ஒவ்வொரு அம்பேத்கரிய சிந்தனையாளனும் கட்டாயம் நன்றி செலுத்த வேண்டும். அவர் எதற்காக தம் வாழ்நாளை அர்ப்பணித்தாரோ - அந்த அண்ணலின் நூல்கள் ஒவ்வொரு தலித்தையும் சேர நம்மால் இயன்ற பணிகளை ஆற்ற இன்றே முன்வர வேண்டும். ●



படிப்பகம்

www.padippakam.com

### கீரிப்பட்டி, பாப்பாபட்டி

# செருப்பு ஜனநாயகம்

"ஒரு மனிதன் ஏதோ ஒரு காரணத்திற்காக தன்னுடைய வாக்குரிமையை இழக்கிறான் என்ற நிலை ஒரு பகுதியில், ஒரு மாநிலத்தில் ஏற்படுமானால் - அங்கு அந்த மனிதனின் அடிப்படை உரிமைகள் மறுக்கப்படுவதாக நமது அரசியலமைப்புச் சட்டம் கூறுகிறது'' என்கிறார் அம்பேத்கர். ஆனால், பாப்பாபட்டி கீரிப்பட்டியில் வாழும் ஆதிக்க சாதிவெறியர்களுக்கு அரசமைப்பு, சட்டம், நீதி எதுவும் ஒரு பொருட்டல்ல, எல்லாம் எங்கள் காலடியில்'' என்கிறார்கள்.

ஒரு காலத்தில், குற்றப்பரம்பரை என்று அறிவிக்கப்பட்டு, தினமும் காவல் நிலையத்தில் கையெழுத்திட வேண்டும்.என்ற் பிணைவிடுப்பு கைதிகளாக இருந்த க்தையெல்லாம் அவர்களுக்கு மறந்து விட்டது போலும். குடிப்பதற்கு கூழ் இல்லை, மானத்தை மறைக்க குண்டித் துணியில்லை என்றாலும் கூட, வறட்டுத்தனமான சாதி வெறி குறையவில்லை.



கீரிப்பட்டியில் செருப்பு வீசும் சாதிவெறியர்கள்

1996 ஆம் ஆண்டு நடந்த உள்ளாட்சித் தேர்தலில் தலித்துகளுக்கு அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்ட கீரிப்பட்டி, பாப்பாபட்டி பஞ்சாயத்துகளில் இதுவரை 10 முறை தேர்தல் அறிவிக்கப்பட்டிருக்கிறது. 9 முறை தலித்துகள் யாரும் மனுதாக்கல் கூட செய்ய முடியவில்லை. தேர்தலை நடத்தியே தீர வேண்டும் என்று விடுதலைச் சிறுத்தைகள் குடியரசுத் தலைவர் வரை போய் தீவிரமாகப் போராடிய பிறகே, அரசு பத்தாவது முறையாகத் தேர்தலை நடத்த அறிவிப்பு செய்தது.

தேர்தல் தேதி குறிக்கப்படும்போதெல்லாம், தலித்துகள் மரண பீதி அடையுமளவிற்கு சாதிவெறியர்களால் மிரட்டப்பட்டனர். ஆயினும், விடுதலைச்சிறுத்தைகள் சார்பில் பாப்பாபட்டியில் சுப்பனும், கீரிப்பட்டியில் பூங்கொடியும் மனுதாக்கல் செய்தனர். ''மூக்கய்யாத் தேவர் உட்கார்ந்த பஞ்சாயத்துத் தலைவர் நாற்காலியில் ஒரு பறையன் உட்காருவதா'' என்று ஊரைக் கூட்டி விவாதித்த சாதிவெறியர்களுக்கு, அரசு உயர் அதிகாரிகளும், காவல்துறையினரும் சேர்ந்து ஒரு சதித்திட்டம் தீட்டிக் கொடுத்தனர். ஆதிக்க சாதியினரே ஒரு தலித்தை மிரட்டி, தேர்தலில் நிற்கவைத்து அவரை வெற்றிபெற வைத்து, பதவியேற்கவும் வைத்து அடுத்த நிமிடமே ராஜினாமா செய்ய வைப்பது என்பதுதான் அந்தத் திட்டம்.

திட்டப்படி, வேட்பாளர்களை நிறுத்தினர். தேர்தல் பிரச்சாரத்திற்குச் சென்ற விடுதலைச் சிறுத்தைகள் பொதுச் செயலாளர் திருமாவளவன் மீது கல்வீசியும், செருப்பு வீசியும் தாக்குதல் நடத்தினர் சாதிவெறியர்கள். அவர்கள்வீசிய செருப்புகள், மதுரைமாவட்ட ஆட்சியர் ராமச்சந்திரன் முகத்திலும் இன்னும் சில இந்திய நாட்டின் நெறிமுறைகளின் முகத்திலும் அறைந்தன.

தேர்தலில் வாக்களிக்க வேண்டாம் என்று தலித் மக்கள் மிரட்டப்பட்டனர். மிரட்டலுக்குப் பயந்து பலர் வெளியூர்களுக்குச் சென்றுவிட்டாலும்கூட, தேர்தல் நடந்தது. ஆதிக்க சாதியினர் நிறுத்திய வேட்பாளர்கள் வெற்றி பெற்றனர். திட்டமிட்டபடி பதவியேற்ற ஒரு மணி நேரத்தில் ராஜினாமா செய்தனர். கீரிப்பட்டி, பாப்பாபட்டியிலாவது இப்படியொரு கேலிக்கூத்து நடந்திருக்கிறது. ஆனால், நாட்டாமங்கலம் கொட்டகாச்சியேந்தல் போன்ற கிராமங்களில் வேட்புமனு தாக்கல் செய்ய எவரும் முன்வரவில்லை.

தலித் மக்களின் வாக்குரிமையைத் தடுத்து நிறுத்தி, சனநாயக தேர்தல் பாதையை சாதி வேலியிட்டு மூடி, அரசியல் சட்டங்களையும், நீதியையும் இந்தியாவின் இறையாண்மையையும் காலில் போட்டு மிதித்துக் கொண்டிருக்கும் பாப்பாபட்டி, கீரிப்பட்டி சாதி வெறியர்கள்தான் - உண்மையான பயங்கரவாதிகள். தனித்தொகுதி தேர்தல் நடைமுறை மீது குறிவைத்து, ஆதிக்க சாதிவெறி சக்திகள் தொடங்கியிருக்கும் நேரடித் தாக்குதல் இது.

என்ன நடக்கப் போகிறது என்பதை நன்றாகத் தெரிந்து கொண்டே தேர்தலை நடத்தியது தேர்தல் ஆணையம். பிரச்சாரம் செய்யவிடாமல் தடுத்ததற்காகவோ வாக்களிக்கவிடாமல் மிரட்டியதற்காகவோ - யார் மீதும் வழக்குப் பதிவு செய்யப்படவில்லை. வெளிநாட்டுப் பிரச்சனைகளிலும்கூட வாய்கிழியப் பேசி, பேரவையில் தீர்மானம் நிறைவேற்றும் ஜெயலலிதா, தனது ஆட்சியில் நடைபெறும் இந்த ஜனநாயக கேலிக்கூத்தைக் கண்டித்து ஒரு வார்த்தை பேசவில்லையே ஏன்? 'நானே ஒரு தலித்' என்று ஓட்டுக்காக சாதியை மாற்றும் கருணாநிதியும் இதைக் கண்டு கொள்ளவில்லையே ஏன்? ஒரு நடிகையின் தற்கொலையைக்கூட ஒரு வாரத்திற்கு தலைப்புச் செய்தியாக வெளியிடும் பத்திரிக்கைகள், இவ்வளவு பெரிய ஜனநாயகப் படுகொலையைப் பற்றி ஒரு வரி எழுதவில்லையே ஏன்? தனது குடிமக்களின் குடியுரிமை மறுக்கப்பட்டு, மக்களாட்சி தத்துவத்தையே காலில் போட்டு மிதித்துக் கொண்டிருக்கும் சாதி வெறியர்களைக் கண்டு ஆட்சியாளர்களும் சட்டமும் வாய் பொத்தி நிற்கின்றனவே அது ஏன்?

எல்லாம் மூக்கய்யாதேவர் உட்கார்ந்த நாற்காலியில் ஒரு தலித் உட்கார்ந்து விடக்கூடாது என்பதற்காகத்தான். ●

- யாக்கன்



படிப்பகம்

www.padippakam.com




# தீட்டாகி விடுமா 'தினமணி'

சென்ற இதழில், 'தினமணி'யின் அரசியல் அரங்கம் பகுதியைச் சுட்டிக்காட்டி, 'ப. சிதம்பரம் படம் மட்டும் இருக்கிறது; டாக்டர் கிருஷ்ணசாமி, திருமாவளவன் படம் ஏன் இல்லை' என்று கேட்டிருந்தோம்.

நம் இதழ் வந்த மறுவாரமே,




இப்படி இருந்த தலைப்பை

இப்படி மாற்றி விட்டார்கள்.

சிதம்பரம் படத்தை மட்டும் எடுத்தால், 'நாம் சொன்னதால்தான் மாற்றி விட்டார்கள்' என்று தெரிந்து விடப்போகின்றது என்ற காரணத்தால், சிதம்பரத்தோடு நல்லகண்ணுவிற்கும் சீட்டை கிழித்து விட்டார்கள். இவர்களுக்கு பதில், அகில இந்தியத் தலைவர்கள் அந்த இடத்தைப் பிடித்துக் கொண்டார்கள்.

'சிதம்பரம் படத்தைக் கூட எடுத்து விடுவோம். ஆனால், திருமாவளவன், கிருஷ்ணசாமி வரை படத்தை மட்டும் வைக்க மாட்டோம்' என்பதுபோல் இருக்கின்றது - 'தினமணி'யின் இந்தச் செயல்.

**- கவின்**




பட்டுக்கோட்டை

**K.M.V.**



## இலவச திருமணத் தகவலகம்

இந்து, கிருத்துவ

ஆதிதிராவிடர் (பறையர்) சமூகம் மட்டும்

**A.D. PARAYAR ONLY**

Dr., Er., Ph.D., BDS., பட்டதாரிகள், ஆசிரியர், அரசு, தனியார், தொழிலாளர், சுயதொழில், துணை இழந்தோர், விவாகரத்து மற்றும் அனைத்து வித மணமக்கள் தேவைக்கு

அணுகவும் :

**434 79 49**

முகவரி பாதுகாப்பு உடையது

30, (புது எண் 68), சவுத் உஸ்மான் சாலை

தியாகராய நகர், சென்னை - 600 017


தலித் மக்களின் வரலாற்றைச் சித்தரிக்கும்

## ஓவிய புகைப்படக் கண்காட்சி

தோழர்களுக்கு வணக்கம்.

வருகிற சூலை 2002 இறுதியில், தருமபுரியில் தலித் மக்களின் வாழ்வியல் வரலாற்றைச் சித்தரிக்கும் விரிவான ஓவியக் கண்காட்சியை நடத்துவதென்று திட்டமிடப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில், டாக்டர் அம்பேத்கர் வாழ்வைச் சித்தரிக்கும் புகைப்படங்களும் ஓவியங்களும் ஆவணங்களும் காட்சிக்கு வைக்கப்படும்.

தலித் மக்களின் மீதான வன்முறைகள், வாழ்வியல் நிலைமைகளைச் சித்தரிக்கும் ஓவியங்கள், ஒலி, ஒளி நாடாக்கள், கருத்தரங்குகள், விவாதங்கள் என விரியும் இந்நிகழ்ச்சியில் பங்கெடுத்துக் கொள்ளும் அமைப்புகள் மற்றும் நண்பர்கள் எம்மைத் தொடர்பு கொண்டு இதற்கான ஓவியங்கள், புகைப்படங்கள், ஆவணங்கள் மற்றும் ஆலோசனைகளை வழங்குமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

தொடர்புக்கு : தலைவர், புத்தா வழிகாட்டும் மய்யம், கமலா இல்லம்
5/98 - W 20 நெல்லி நகர், தருமபுரி • தொலைபேசி : 04342 - 280318





படிப்பகம்

www.padippakam.com

பரிசு
ரூ. 1000

# தலித் முரசு சமூக நீதிப் போட்டி - 6

- இந்தப் பகுதியின் விடைத்தாளில் கேள்வி எண்களும் அதற்கான விடைத் தொகுதியும் தரப்பட்டுள்ளன. (காண்க - படம் : 6)
- விடையைத் தேர்ந்தெடுத்த பிறகு, வினாவிற்குத் தகுந்த விடையை ☒ குறியிட்டு நிரப்பவும்.
- ஒரு வினாவிற்கு ஒன்றுக்கு மேற்பட்ட விடை எழுதியிருந்தால் அது பரிசீலிக்கப்பட மாட்டாது.
- கண்டிப்பாக 'தலித் முரசு' இதழில் வெளியாகும் படிவத்தில்தான் விடையளிக்க வேண்டும். (விடைத்தாளை மட்டும் கிழித்து அனுப்பவும்)
- ஒருவர் எத்தனைப் படிவங்கள் வேண்டுமானாலும் அனுப்பலாம்.
- இப்படிவத்தை நகல் எடுத்து விடையளிப்பது ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.
- ஆசிரியர் குழுவின் முடிவே இறுதியானது.
- சரியான விடையை எழுதியவருக்கு ரூ.1,000 பரிசுத் தொகை அளிக்கப்படும்.
- ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் சரியான விடை எழுதியிருந்தால், பரிசுத் தொகை பகிர்ந்து அளிக்கப்படும்.
- வெற்றி பெறும் வாசகரின் பெயர், அடுத்து வரும் இதழில் வெளியிடப்படும். கடைசி நாள் 25.5.2002

1. மிகவும் உவர்ப்புத் தன்மை வாய்ந்த கடல் எது?
   அ) அரபிக் கடல் ஆ) செங்கடல் இ) மரணக் கடல் ஈ) வங்கக் கடல்

2. ஆரியர்கள் இந்தியாவில் கோலோச்சிய காலம் எது?
   அ) 3000 - 2500 கி.மு. ஆ) 3100 - 2400 கி.மு.
   இ) 300 - 250 கி.மு. ஈ) 320 - 185 கி.மு.

3. சாஞ்சி யாருடைய புகழை நினைவு கூறுகிறது?
   அ) சமணர்கள் ஆ) பவுத்தர்கள் இ) முகமதியர்கள் ஈ) கிறித்துவர்கள்

4. மகாவீரர் எந்த வம்சத்தைச் சார்ந்தவர்?
   அ) சாக்கியர்கள் ஆ) சத்திரியர்கள்
   இ) லிச்சாவி ஈ) சாதவாகனர்

5. முதன்முதலாக முகலாய சாம்ராச்சியத்தை நிறுவியவர் யார்?
   அ) அக்பர் ஆ) ஹுமாயுன் இ) பாபர் ஈ) கில்ஜி

6. GATT தலைமையகம் எங்குள்ளது?
   அ) ஜெனீவா ஆ) பாரீஸ் இ) இந்தியா ஈ) வாஷிங்டன்

7. 'இயற்கையின் தேர்வு' இதை அமைத்தவர் யார்?
   அ) டார்வின் ஆ) நியுட்டன் இ) மெண்டல் ஈ) ஆர்கிமெட்டிஸ்

8. உலகின் நீளமான ரயில் மேடை எங்குள்ளது?
   அ) சென்னை ஆ) சோனாப்பூர்
   இ) லெனின் கிராட் ஈ) கோரக்பூர்

9. 'நாணயத்தின் சிக்கல்' என்ற நூலை எழுதியவர் யார்?
   அ) சி.ஆர்.தாஸ் ஆ) காந்தி இ) அம்பேத்கர் ஈ) நேரு

10. 'வெண்தாடி வேந்தர்' என்று யாருக்குப் பெயர்?
    அ) பெரியார் ஆ) வ.உ.சி. இ) சுப்பிரமணிய சிவா ஈ) தாகூர்

போட்டியின் நிபந்தனைகளை நான் முழுமையாக ஏற்றுக் கொள்கிறேன்.

கையொப்பம்..............................................

முகவரி..............................................................

..............................................................

..............................................................

**சென்ற போட்டிக்கான விடைகள் :**

1. 1857 2. பாசிச அமைப்பாளர் 3. கடவுள்
4. அசோகர் 5. அம்பேத்கர் 6. இளவேனில் காலம்
7. இந்தியா 8. கறுப்பு 9. மூளை
10. ரஷ்யா

வெற்றி பெற்றோர்:

1. எம். திலகவதி, 40/47, CPWD குடியிருப்பு
   கே.கே. நகர், சென்னை - 78

**விடைத்தாள் - 6**

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| 1 | | | | |
| 2 | | | | |
| 3 | | | | |
| 4 | | | | |
| 5 | | | | |
| 6 | | | | |
| 7 | | | | |
| 8 | | | | |
| 9 | | | | |
| 10 | | | | |

படம் 6



படிப்பகம்

www.padippakam.com





திண்டிவனம் உரோசனைப் பகுதியில் 14.4.2002 அன்று தாய்த்தமிழ் தொடக்கப்பள்ளியில் 'போர்ப்பறை கலை இலக்கியக் குழு'வின் தொடக்க விழா, டாக்டர் அம்பேத்கரின் பிறந்த நாள் விழா, விழி.பா இதயவேந்தனின் 'ஏஞ்சலின் மூன்று நண்பர்கள்', 'அம்மாவின் நிழலை' நூல்கள் வெளியீட்டு விழா ஆகிய மூன்று நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. இக்கூட்டத்தில் பேரா. பா. கல்யாணி, கோ. வடிவேல், முனைவர் பத்மாவதி, ர. பரசுராமன், வழக்கறிஞர் பொ. ரத்தினம், பேரா. த. பழமலய், கோ. சுகுமாரன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர். ■

திருவள்ளூவர் மாவட்டம் ராமாபுரம் கிராமத்தில் பாரதி சாலையில் வசிக்கும் 50 வீடுகளை அரசு அகற்றிவிட்டது. இதனைக் கண்டித்து, ஏப்ரல் 23 அன்று இழப்பீடு வழங்கக்கோரியும் திருவள்ளூரில் காமராஜர் சிலை அருகே - பாதிக்கப்பட்ட ஆண்களும், பெண்களும் பட்டினிப் போராட்டம் நடத்தினர்.

இப்போராட்டத்திற்கு தஞ்சை இளஞ்சிங்கம் தலைமை தாங்கினார். எஸ். நடராசன், தேவராஜ், ராஜேந்திரன் உள்பட சுமார் 100 பேர்கள் கலந்து கொண்டனர். மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் மாற்று இடம் வழங்கப்படும் என்று உறுதிகொடுத்ததன் பேரில் மாலையில் இப்போராட்டத்தை லோக் ஜனசக்தி கட்சியின் தலைவர் பெ. சந்திரகேசன் முடித்து வைத்தார். ■

திருவண்ணாமலை மாவட்டத்தில் தலைமை அஞ்சல் நிலைய வளாகத்தில் 7.4.2002 அன்று அம்பேத்கரின் 111ஆவது பிறந்த நாள் விழாவும், புதிய உறுப்பினர் சேர்க்கை விழாவும், ஓய்வு பெற்றோருக்கான பாராட்டு விழாவும் நடைபெற்றது. இத்துடன் திருவண்ணாமலை கோட்ட அனைத்திந்திய தபால் தந்தி எஸ்.சி./எஸ்.டி. ஊழியர் நலச் சங்கத்தின் 19ஆவது மாநாடு வி. சுந்தரம் அவர்கள் தலைமையில், தலைமை அஞ்சல் முதல்வர் ஆர்.கே. கண்ணன், வி. கோதண்டபாணி, மாநில செயலர் திரு. செல்வராஜ், மாநிலத் தலைவர் வி.பி. வேணுகோபால் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. அரசுத்துறை, பொதுத் துறை ஆகியவை தனியார் மயமாக்கப்படுவது இட ஒதுக்கீட்டுக்கு மறைமுகமாக வைக்கப்படும் வேட்டு. ஆகையால், தனியார் துறையில் இட ஒதுக்கீடு சட்டம் கொண்டு வந்தபின் தனியார் மயமாக்கல் பற்றி அரசு பரிசீலிக்க வேண்டும் என்ற தீர்மானமும் இங்கு நிறைவேற்றப்பட்டது. ■

---

சென்ற இதழில் டாக்டர் கே.ஏ. குணசேகரன் அவர்களின் பேட்டிக்காக புகைப்படங்கள் எடுத்தவர் **திரு. சி. அண்ணாமலை.**

## அணிதிரள்கிறோம் தலித் எழுத்துகளாக...

**'புதிய கோடாங்கி'**
*மாத இதழ்*
முகவரி :எம்.அய்.ஜி. 518, என்.எச்.1, 7
(ப.எண்.15), இளந்திரையன் தெரு
மறைமலை நகர் - 603 209
ஆண்டுக் கட்டணம் : ரூ. 150

■ ■

**'தாய்மண்'**
*மாத இதழ்*
ஆசிரியர் : இரா. திருமாவளவன்
முகவரி : 16, சின்னையா தெரு, தியாகராயர் நகர்
சென்னை - 17
ஆண்டுக் கட்டணம் : ரூ. 60

■ ■

**'தலித்'**
ஆசிரியர் : ரவிக்குமார்
முகவரி : 'தலித்', 28, வீரபத்திரசாமி
கோயில் தெரு, லாஸ்பேட்டை, புதுவை - 605 008
தனி இதழ் : ரூ. 30

■ ■

**'களம்'**
*மாத இதழ்*
ஆசிரியர் : எல். ஏசுமரியான்
முகவரி : 67, கெனால் தெரு, சி.பி. சாலை, சென்னை - 21
ஆண்டுக் கட்டணம் : ரூ. 60

■ ■

**'அறிவு வழி'**
*மாத இதழ்*
ஆசிரியர் : மு.பா. எழிலரசு
முகவரி : 24/58, சத்தியமூர்த்தி நகர்
நந்தனம், சென்னை - 35
ஆண்டுக் கட்டணம் : ரூ. 100

■ ■

**'தமுக்கு'**
*மாத இதழ்*
ஆசிரியர் : வே. அலெக்ஸ்
முகவரி : தலித் ஆதார மய்யம் - தமிழ் நாடு
இறையியல் கல்லூரி, அரசரடி, மதுரை - 10
ஆண்டுக் கட்டணம் : ரூ. 30

■ ■

தலித் இதழ்களின் பட்டியல் தொடரும்.
தொடர்ந்து வெளிவரும் தலித் இதழ்களை ஆர்வலர்கள், எங்களுக்கு அனுப்பி வைக்கவும்.



படிப்பகம்




## வித்தியாசமான பார்வை

*தலித் முரசு - ஒவ்வொரு இதழும் புதுப் பொலிவுடன் உள்ளடக்கம், வடிவமைப்பு இரண்டிலும் கூடுதல் தரத்துடன் வெளிவருகிறது. கடந்த இரு இதழ்களிலும் கிருத்துதாசு காந்தி நேர்காணல் கண்டேன். பட்டியலினப்படுத்தப்பட்ட சமூகத்தினரின் விடுதலைக்கு - பல ஆக்கப்பூர்வமான செயல்திட்டங்களை முன்வைத்துள்ளது அவரது பேட்டி. பல தலைவர்களின் பார்வையிலிருந்து இவரது பார்வை வித்தியாசமானது; புரட்சிகரமானது; ஆக்கப்பூர்வமானது. தலித் விடுதலையை விரைவாக முன்னெடுத்துச் செல்லக்கூடியது.*

**எ. பாலுச்சாமி,** *சத்தியமங்கலம்*

■ தலித் முரசு, இளைஞர்களிடையே தொடர்ந்து போர்க்குணத்தை ஊட்டி வருகிறது. 'எங்கள் இசையை நாங்களே எழுதுவோம்' - கே. ஏ. குணசேகரனின் பேட்டி எங்களின் பார்வையை மேலும் தெளிவாக்கியது. 'புதையும் போதும் உரிமை கெடாது ஒரே மயானத்தில் தலைநிமிர வேண்டும் என்பதே போராட்டம்' - கிருத்துதாசு காந்தி பேட்டி, இளைஞர்களிடையே விவேகத்தைத் தூண்டுகிறது.

**கோவி. பகத்சிங்,** *கும்பகோணம்*

■ 'கீழ்வெண் மணியிலிருந்து யார் குரல்?' கம்யூனிஸ்டுகளை அடையாளம் காட்டியது பாராட்டுக்குரியது. 'உங்கள் எதிரி யாரென சொல்லுங்கள்; நீங்கள் யாரென தலித்துகள் தெரிந்து கொள்வார்கள்' - என்ற மிக நுட்பமான முழக்கத்தை முன் வைத்த கவுதம சன்னாவுக்கு நன்றி.

**சா. இளங்கோவன்,**
*விடுதலைச் சிறுத்தைகள், மாதவரம்*

■ தலித் முரசில் வெளியிடப்படும் செய்திகள், தலித் மக்களைச் சிந்திக்க வைக்கும் வகையில் சிறப்பாக வெளிவருகிறது. பல கட்டுரைகள் எம்போன்றவர்களை மெய்சிலிர்க்க வைக்கின்றன.

**வி.இ.ஆர். சோழன்,** *மோட்டூர்*

■ 'செருப்பு தைக்கும் அருந்ததியர்கள் இனிமேல் அதே செருப்பைக் கொண்டு அடிக்கவும் தயாராக வேண்டும்' என்ற எஸ்.டி. கல்யாணசுந்தரம் அவர்களின் அறைகூவல், தூங்கிக் கொண்டிருந்த அருந்ததியர்களைத் தட்டி எழுப்புவதுபோல் இருந்தது.

**கே. காளிமுத்து**
*விசுவநாதப்பேரி*

■ கிருத்துதாசு காந்தி பேட்டி, தலித் மக்கள் இந்தச் சமூகத்தில் எப்படி உரிமையுடன் வாழ வேண்டும் என்பதை கோடிட்டுக் காட்டியுள்ளது. தலித் மக்களின் முன்னேற்றத்தில் அக்கறையுள்ளவர்கள், அவரது கருத்தை ஏற்று செயலாற்ற வேண்டும். அரசு ஆண்டுதோறும் நடத்தும் தீண்டாமை ஒழிப்பு விழாவினை இனி கண்டிப்பாக கிராமங்களில் நடத்தக்கூடாது. மாறாக, சாதி இந்துக்கள் வாழும் பகுதிகளில் இதை அரசு அதிகாரிகள் நடத்தும்படி வலியுறுத்த வேண்டும்.

**டி. டேவிட்,** *வேலூர்*

■ கே.ஏ. குணசேகரனின் நேர்காணல், தலித் சமூகம் மேம்பட்டு நிற்பதற்கான வழிகளைத் தெளிவுபடுத்தியது. பாராட்டுகள்.

**பைரவி,** *ஆங்கரை*

### இலங்கையும் பாகிஸ்தானும்

காஷ்மீர் பண்டிட்டுகளுக்குப் பாகிஸ்தான் தீவிரவாதிகளால் ஆபத்து என்றவுடனேயே கோடிக்கணக்கிலே பணத்தைச் செலவழித்து ராணுவத்தைக் கொண்டு போய் நிறுத்துகிறது மத்திய அரசு. ஆனால், இலங்கைக் கடற்படையினரால் தமிழ் நாட்டு மீனவர்களுக்குப் பாதிப்பு ஏற்படுகிறபோது பாராமுகம் காட்டுகிறது. இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே கடும்பகை அரசியல் சூழல் நிலவுகின்ற போதிலும், கடலிலே எல்லை தாண்டி வருகின்ற இந்திய மீனவர்களைக் கைது செய்து பாகிஸ்தான் சிறையில் அடைக்கிறார்களே தவிர, படுகொலை செய்வதில்லை. ஆனால், நட்பு நாடாகத் திகழ்கிற இலங்கை அரசு - தமிழ் நாட்டு மீனவர்களைச் சித்திரவதை செய்து படுகொலை செய்கிறது! அதை ஏன் இந்த அரசு தடுத்து நிறுத்தவில்லை? தமிழ்நாட்டு மீனவர்களைப் பாதுகாக்க, கச்சத்தீவுப் போர் நடத்தாதது ஏன்?

எனவே, சிங்களக் கடற்படையினரால் தமிழ்நாட்டு மீனவர்கள் தொடர்ந்து படுகொலை செய்யப்படுவது நிரந்தரமாக நிறுத்தப்பட வேண்டுமெனில், இலங்கை அரசும், விடுதலைப் புலிகளும் தமிழ் நாட்டில் அமைதிப் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு மத்திய அரசு அனுமதியளிப்பதோடு, அமைதி முயற்சிக்கு அனைத்து வகைகளிலும் உறுதுணையாக இருக்க வேண்டும். இதற்கு அனைத்து அரசியல் கட்சிகளும் முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். இதனை எதிர்ப்பவர்கள், தமிழக மீனவர்களுக்குத் துரோகமிழைப்பவர்களாவர்.

**ரா. மங்கையர் செல்வன்**
*அமைப்பாளர் - 'விடுதலை வேங்கைகள்', புதுச்சேரி*

■ 'என் சாதியை நான் மறைப்பதில்லை. நான் ஒரு தலித். என்னைத் தேடி திரைப்படக் கலைஞர்கள் வருகிறார்கள்' என்று கே.ஏ. குணசேகரன் துணிவுடன் கூறியது என்னைப் புல்லரிக்க வைத்தது.

**த. தமிழ்ச் செல்வன்,**
*புனல் வாசல்*

■ தலித் முரசு மார்ச் இதழில் 'காதல் ஜாதி பார்க்குமா?' கட்டுரையில் சில முடிவுகளாக, ''ஆதிக்க சாதியினர் செய்யும் அதே தவறுகளையும் அநியாயங்களையும் காப்பியடிக்கும் வேலையை - தலித் மக்கள் விட்டொழித்தாலே போதும்...'' என்கிற அறிவுரை மிகைப்படுத்தப்பட்டதாகும். 'ஒடுக்கப்பட்ட சாதிகள் ஒன்றிணைந்தாலே சாதி ஒழிந்துவிடும்' என்கிற கருத்தைப் போலவே இதுவும் கூறப்படுகிறது. ஆதிக்க சாதியினரைப் பார்த்து காப்பியடிக்கிற விஷயமல்ல இது.

தலித் மக்கள் தங்கள் உட்பிரிவுகளுக்குள் காதலை அங்கீகரிக்கிற விஷயம் என்பது, அரசியல் சார்புடையது. சாதி ஒழிப்பு அரசியலை முழுவதும் முன்னெடுத்துச் செல்லும் போதுதான் இதை இன்னும் எளிதாக்க முடியும். அரசியல் களம்தான் உட்சாதிக் கலப்பைத் தீர்மானிக்கும். புறமணத்தை அரசியல் மற்றும் அரசு நடவடிக்கையாக்க வேண்டும். அதை அனைவருக்குமான தாக்கும் அதிரடி நடவடிக்கை வேண்டும்.

**உஞ்சைராசன்**
*பட்டுக்கோட்டை*

www.padippakam.com

# ஓ மாமனிதனே!

**ஹீரா பன்ஸோடெ**



***அண்ணல் அம்பேத்கரின் பிறந்த நாளன்று, 'தலித்துகளின் வாக்கு வங்கிகள்' என்ற ஒரே ஒரு நினைப்புடன் மட்டும் அவரது சிலைக்கு மாலையணிவிக்கும் சடங்குகளை மறக்காது செய்கின்றனர் ஆதிக்க சாதிக் கட்சித் தலைவர்கள்.***

***அது மட்டுமல்ல, மாலை அணிவிப்பதிலும் கூட 'முதல் மரியாதை' தங்களுக்குத்தான் வேண்டும் என்று நிலப்பிரபுத்துவ எஜமானர்கள் போல தங்கள் அதிகாரத் திமிரையும் காட்டிக் கொள்கிறார்கள். 14.4.2002 அன்று சென்னையில் நடந்த நிகழ்ச்சியொன்று, மராத்தியப் பெண் கவிஞர் ஹீரா பன்ஸோடெவின் கவிதையை நினைவூட்டியது. அதன் விளைவே இத்தமிழாக்கம்.***

***மராட்டிய மாநிலம் மஹாட் நகரிலுள்ள சவ்தார் குளத்திலிருந்து குடி தண்ணீர் எடுக்கும் உரிமைக்காக 1927 டிசம்பரில் அண்ணல் அம்பேத்கர் நடத்திய சத்தியாகிரகப் போராட்டம்தான் அவரை அனைத்திந்திய அளவில் தலித்துகளின் ஒரே ஒப்பற்றத் தலைவராக ஆக்கியது. ஹீரா பன்ஸோடெவின் கவிதையை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர்கள் : ஜெயந்த் கார்வே, எலியானர் செல்லியோட். ஆங்கிலம் வழி தமிழாக்கமும் குறிப்பும் : எஸ்.வி. ராஜதுரை.***

*நன்றி : Culture, Religion and Society, CISRS, Bangalore*

ஓ! மாமனிதனே
உனது பாதையில் முட்களைத் தூவியவர்கள்
இன்று உனக்கு மலர்களை வழங்குகிறார்கள்
உனது புகழ் பாடுகிறார்கள்

- இது என்ன விநோதம்?

காலத்தின் இருண்ட ஊர்வலத்தின் போது
நீ விளக்கு மலர்களை ஏற்றினாய்
ஆனால் அந்த நடிப்புப் போலிகள், அந்தக் கொடியவர்கள்
அந்த மலர்களை நசுக்கி அணைத்தனர்
இன்று அந்த மலர்கள் ஒரு காட்டுத் தீயாய் மாறியுள்ளன
அந்தக் கொடியவர்கள் அதற்குக் காற்று வீசி வளர்க்கின்றனர்

- இது என்ன விநோதம்?

ஒரு கோட்டைக் கதவை உடைத்தெறியும் யானையைப்போல
கோயில் கதவை நீ பலமாகத் தட்டினாய்
கோயிலின் கற்கள் அதிர்ந்தன
மதம் என்ற புனிதப் பெயரின் கீழ்
அவர்கள் நெடுங்காலத்திற்கு முன்பே
கடவுள்களை அடிமைப்படுத்தி விட்டனர்
கடவுள்களைக் காண வேண்டும் என்ற
உனது நேர்மையான, வேதனை மிக்க கோரிக்கை
நசுக்கப்பட்டுத் தூக்கியெறியப்பட்டது
கிராமத்திற்கு வெளியே.
இப்போது அவர்கள் அந்த இடத்தில்
முளைத்து வளர்ந்த பெரிய மரத்தை அலங்கரிக்கிறார்கள்

- இது என்ன நியாயம்?

இயற்கை எல்லார்க்கும் சொந்தமானது
என்பதைச் சொல்லத் தேவையில்லை
ஆனால் அவர்கள் அதையும் வாங்கி விட்டார்கள்
சவ்தார் குளத்தின் ஒவ்வொரு சொட்டு நீரிலும்
அவர்கள் தங்கள் முத்திரையைக் குத்திவிட்டனர்
இந்தக் கலாச்சாரத்தின் எச்சரிக்கை மிகுந்த காவலாளி
சிறைப்பிடிக்கப்பட்ட தண்ணீரைப் பாதுகாத்தான்
நீ தொட்டால் தண்ணீர் நஞ்சாகிவிடும் என்று
அவர்கள் அஞ்சினார்கள்
நீ தாகத்தால் செத்துக் கொண்டிருந்தபோது
உன்னுடைய ரத்தத்தால் உனக்குத் திருமுழுக்காட்டினர்
இப்போதோ அவர்கள்
கல்லில் வடித்த உன் கொடும்பாவியின் வாயில் தண்ணீர் ஊற்றுகிறார்கள்

- இது என்ன நியாயம்?.



படிப்பகம்

# இந்தியப் பொருளாதாரம் சீரடைய வர்ணாசிரம முறையை ஒழிக்க வேண்டும்

இந்திய நாடு எவ்விதமான வளத்திலும் குறைந்தது அல்ல. இந்தியாவில் ராஜாக்கள், ஜமீன்தார்கள், மடாதிபதிகள், ஆச்சாரிய பீடங்கள், கோடீஸ்வரர்கள் மற்ற நாட்டிலுள்ளவர்களுக்குக் குறையாமல் உள்ளார்கள். விவசாயத் துறையிலும் ஏராளமான பூமிகள் இருப்பதும், அவற்றிற்கு அனுகூலமாக நீர் வசதிகள் இருப்பதும், ஒவ்வொரு மிராசுதார்கள் 1000 ஏக்கர், பதினாயிரம் ஏக்கர், சிலர் லட்சம் ஏக்கர் நிலங்களை உடையவர்களாக இருப்பதும், விவசாயம் செய்யப்பட வேண்டிய பூமிகள் இன்னும் எவ்வளவோ இருப்பதுமான நாடாக உள்ளது.

இப்படிப்பட்ட பல்வளமும் பொருந்திய இந்திய நாடு ஏன் தரித்திரமான நாடு என்றும், அடிமையான நாடு என்றும், ஏழைகள் பெருத்த நாடு என்றும் சொல்லப்பட்டு வருகின்றது? முதலாவது, மேற்கண்ட வளமுள்ள செல்வம் எல்லா மக்களும் அடையத்தக்க மாதிரியான சமூக அமைப்பு இல்லாமல் - செல்வங்கள் சில வகுப்பு மக்களுக்கே உரியவையாகவும் அனுபவிக்கத் தக்கவையாகவுமான சமூக அமைப்பு முக்கிய காரணமாகும்.

அதாவது, வருணாசிரம தருமப்படி - இன்ன இன்ன வகுப்புக்கு இன்ன இன்ன தொழில், இன்ன இன்ன உரிமை என்பதான திட்டமே, நாட்டின் செல்வம் எல்லோருக்கும் பரவுவதற்கில்லாமல் தடைபடுத்திக் கொண்டிருக்கிறது என்பது முதல் காரணம்.

வெள்ளைக்கார அரசாங்கத்தின் பயனாய் இந்த தர்மங்கள் சிறிது சிறிது மாற்றமடைந்து ஏதோ நூற்றில் ஒருவர், ஆயிரத்தில் ஒருவர் செல்வவான்கள் ஆகவும், வருணமுறை தவறிப் பணம் சம்பாதிக்க உரிமை உடையவர்களாகவும் ஆனாலும்கூட, அந்தப் பணமானது மநுதர்ம சாஸ்திரத்தில் குறிப்பிட்டுள்ளதுபோல் - அதாவது, 'சூத்திரன் செல்வத்தைப் பிராமணன் எந்த விதத்திலானாலும் கொள்ளை அடிக்கலாம்' என்கின்ற தர்மப்படி, சூத்திரன் செல்வத்தைக் கொள்ளை கொள்ளவே - ஸ்தலம், கோவில், குளம், புண்ணியம், பாவம், சடங்கு முதலிய காரியங்களின் மூலம் கொள்ளை அடிக்கப்பட்டு விடுகின்றன.

இந்தக் காரணத்தாலேயே சூத்திரர்களில் 100க்கு 75 பேர்கள் கடன்காரர்களாகவே இருக்க நேரிட்டு இருக்கின்றது.

மேலும், நமது மக்களின் மதத் தத்துவமே இவ்வுலக வாழ்க்கை 'பொய்' என்பதும் 'மாய்கை' என்பதும்; செல்வத்தை - மோட்சத்தில் இடம்பிடித்து வைக்கவும், அடுத்த ஜன்மத்தில் நல்ல பிறவியாய் பிறக்க ஏற்பாடு செய்துகொள்ளவும் செலவழிக்க வேண்டும் என்கின்றதுமான எண்ணங்கள், செல்வங்களைப் பாழாக்கி விடுகின்றன.

அன்றியும், பாடுபடுகின்ற மக்களுக்குத் தங்கள் மதக் கடமை, சாதிக் கடமை என்பது மாத்திரமல்லாமல் முன் ஜென்மக் கர்மத்தின் பயன் என்றும் எண்ணும் எண்ணங்களே புகுத்தப்பட்டு, தங்கள் கஷ்டங்களையும் தரித்திர நிலைமையையும் உணராமல் இருந்து வருகின்ற குணமும் தகுந்த பயனை அடைய முடியாமல் செய்து விடுகின்றன.

சாதாரணமாக, சென்னை மாகாணத்தின் சர்க்காரார் வரி எவ்வளவு இருக்குமோ, அதில் 4இல் 1 பங்குக்குக் குறையாமல் இம்மாகாணத்தில் வரும்படி வரத்தக்க சொத்துகள் கொண்ட தர்ம ஸ்தாபனங்கள் இருக்கின்றன. அவற்றின் மற்ற செலவுகளுக்கென்று நமது மக்களால் செய்யப்படும் செலவுகளின் மொத்தம், நாம் செலுத்தும் வரித் தொகைக்குக் குறையாதென்றே சொல்லலாம். இவை இந்த நாட்டு மக்களுக்குப் பயன் படாததோடு வீண் செலவினமாகவே ஏற்பட்டு விடுகின்றன.

அன்றியும் தர்ம ஸ்தாபனங்களில் வரும்படி இல்லாமல் வெறும் முடக்கமாய் இருக்கும் சொத்துகள் தங்கம், வெள்ளி, கல் நகைகள், இடங்கள் முதலியன கோடிக்கணக்கான ரூபாய் வரும்படி வரக்கூடிய அளவு உள்ள சொத்துகள் - யாதொரு பிரயோசனமும் இல்லாமல் முடங்கிக் கிடக்கின்றன.

இவ்வளவும் தவிர, இந்திய மக்களின் வருமானம் என்பதே அவர்கள் தங்களது தொழில் முறைகளைச் சிறிதும் மாற்றிக் கொள்ளாததால் பிரயாசை அதிகமும், சாமான் யோக்கியதைக் குறைவும், உற்பத்திக் குறைவும் இதனால் வரும்படி குறைந்ததுமாக இருப்பதுடன், மனிதனுடைய தேவைக்கும், போக போக்கியங்களுக்கும் வேண்டியவைகளுக்கெல்லாம் - ஏழை முதல் செல்வவான், மகாராஜாக்கள் வரை, வெளிநாட்டுப் பொருள்களையே உபயோகிக்க வேண்டியவர்களாகி, அதன்மூலம் செல்வம் ஏராளமாய் வெளியில் போய் விடுவதால், ஒருவித நஷ்டத்தையும் அடைய வேண்டியதாக ஏற்பட்டு விடுகின்றது.

இந்தியாவின் பொருளாதாரத் துறையைச் சீர்படுத்துவதற்கு முதலாவது, வருணாசிரம முறை ஒழிய வேண்டும்; இரண்டாவது, மதசம்பந்தமான எண்ணங்கள் அகற்றப்பட வேண்டும்; மூன்றாவது, கோவில், குளம், சடங்கு, சாத்தான் 'சனி விலக்கு' ஆகிய எண்ணங்கள் அழிக்கப்பட வேண்டும். பிறகு அரசன், ஜமீன்தாரன் முதலிய தத்துவங்கள் அழிக்கப்பட்டாக வேண்டும்.

*'குடி அரசு' இதழில் 13.9.1931 அன்று எழுதிய தலையங்கம்*



**"பொருளாதாரத் துறையில் இந்திய நாடு முற்போக்கடைய வேண்டுமானால், அதன் அஸ்திவாரமான காரணங்களையெல்லாம் கவனிக்காமல், மக்களுடைய மதியீனத்தையும் பகுத்தறிவற்றத் தன்மையையும் ஆதரவாய் உபயோகித்துக் கொண்டு, வெளிநாட்டுத் துணியை மறியல் செய்வதாலும், கதரை வாங்கிக் கட்டுவதாலும், கள்ளுக் கடைகளை மூடி விடுவதாலும், பொருளாதாரத் துறையை சரிப்படுத்தி விடலாம் என்று சொல்லுவது - ஒரு நாளும் நாணயமானதோ, அறிவுடைமையானதோ, காரியத்தில் பயன் கொடுக்கக் கூடியதோ என்பதாகச் சொல்லிவிட முடியாது."**

படிப்பகம்

www.padippakam.com

YEZHUTCHI DALIT MURASU, Tamil Monthly, Regd. No.: TN / CPMG - 151 / 2002 Posted at Patrika Channel Egmore RMS / 1 Periodicals
Registered with the Registrar of Newspapers for India Under No. 71325 / 97 Licensed to Post without prepayment Licence No. 47 / 2002












# அணி திரள்கிறோம்













# தலித் எழுத்துகளாக...












Owned and Published by P. Chandragesan from No. 6, 97th Street, 15th Sector, K.K. Nagar, Chennai - 600 078 and printed by G.P. Ramachandran at Thamizhmarai Achagam, 32, 3rd Avenue, Ashok Nagar, Chennai - 600 083 Editor : P. Chandragesan

படிப்பகம்